கோகுலம்

GOKULAM

ஆகஸ்ட் '89 விலை ரூ. 3/—




குட்னஸ் அளிக்கும் அருமை அன்பளிப்புகள் !



நீங்கள், குட்னஸ் வன விலங்கு ஸ்டாம்புகளைச் சேர்க்கத் துவங்கி விட்டீர்களா? இதுவரை இல்லையென்றால், இப்போதே சேகரிக்க ஆரம்பியுங்கள். இப்போது ஒவ்வொரு குட்னஸ் சுவையூட்டிய பால்பேக்குடன் ஒரு இலவச வனவிலங்கு ஸ்டாம்பு வருகிறது. நீங்கள் சேர்க்கும் ஸ்டாம்புகளின் எண்ணிக்கை வளர வளர உங்களுக்கு நல்ல நல்ல பரிசுப்பொருள்களும் கிடைக்கும். ஸ்போர்ட்ஸ் தொப்பிகள், I.Q. டெஸ்ட்டர், குவார்ட்ஸ் கைக்கடிகாரங்கள் போன்று பலப்பல!



	நினைவிருக்கட்டும்
I	27 ஸ்டாம்ப் : 1 ஆவின் குட்னஸ் ஸ்டாம்ப் ஆல்பம் 54 ஸ்டாம்ப் : 1 I.Q. டெஸ்ட்டர் 81 ஸ்டாம்ப் : ஒரு ஜியோமெட்ரி பாக்ஸ் அல்லது ஒரு ஸ்போர்ட்ஸ் தொப்பி அல்லது உலக வனவிலங்கு வாழ்த்து மடல்கள் (Greeting Cards) 108 ஸ்டாம்ப் : 1 எலெக்ட்ரானிக் குவார்ட்ஸ் கைக்கடிகாரம்
II	இலவசப் பரிசுகளைப் பெற, கீழ்க்கண்ட இடங்களில் ஏதேனும் ஒன்றில் எங்கள் அலுவலர்களிடம் நீங்கள் சேகரித்த ஸ்டாம்புகளைக் காட்டினால் போதும். ஆவின் — மில்க் பார்லர்கள், மண்டல அலுவலகங்கள், மொத்த விற்பனையாளர்கள், ஐஸ்-கிரீம் விற்பனை நிலையங்கள் மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்
III	இந்த வாய்ப்பு அக்டோபர் 15 வரை




ஆவின்
குட்னஸ்
சுவையூட்டிய பால்

இந்த திட்டம் குறிப்பிட்ட நகரங்களில் மட்டுமே.

HTA 7292

கோகுலம்

1989 ஆகஸ்ட் மாத இதழ்
மலர் — 7 ✱ இதழ் — 7



அன்புத் தங்கைகளே!

'பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காண் ' என்று கும்மியடி...'

என்று பாரதி உங்களை உசுப்பி விட்டுவிட்டுப் போய்விட்டார். நீங்கள் அந்தக் கவி வாக்குப் பொய்க்காமல் இளைப்பிலிருந்து சமனுக்கு வந்து, அதற்கும் மேலேயே போய்விட்டீர்கள்.

இப்போது மட்டும் அந்த எட்டையபுரத்தார் இருந்திருந்தால் 'பெண்மை வாழ்கென்று கூத்திடுவமடா!' என்று தீம்தரிகிடதீம் என்று என்னமாய்க் கூத்தாடியிருப்பார்!

கீப் இட் அப்! உங்கள் வெற்றிகள் தொடரட்டும்!

வெற்றிக் களிப்பில் இருக்கும் உங்களுக்கு ஒன்று மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆமை, முயல் ஓட்டப் பந்தயத்தை நினைவில் கொள்ளுங்கள். அந்த முயலின் மனப்பான்மைக்கு இடம் கொடுத்து விடாதீர்கள்.

இன்னொன்று: அடக்கத்தின் வெற்றி மகத்தானது. பெண் என்பவள் பொறுமை, சாந்தம், பண்பாடு, பாசம், இரக்கம் இவற்றின் பிரதிநிதி அல்லவா? வெற்றி மதர்ப்பில் இத்தகைய உயர் பண்புகள் உங்களை விட்டு விலகப் பார்க்கலாம். அவற்றை விட்டு விடாமல் இழுத்துப் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள்.

அன்புத் தம்பிகளே!

என்ன இது, இப்படி ஆகிவிட்டது உங்கள் நிலைமை? தொடர்ந்து இந்த ஆண்டும் பள்ளியிறுதித் தேர்விலே, உங்களைக் காட்டிலும் அவர்கள் அதிகச் சதவீதம் தேறியிருப்பதாய் எல்லாச் செய்தித் தாள்களும் மானத்தை வாங்கிவிட்டனவே!

அதற்காக முக்காடு போட்டுக் கொண்டு மூலையில் உட்கார்ந்து விடத் தேவையில்லை. சிலிர்த்துக் கொண்டு மூரியெழுந்து முயங்கிப் புறப்பட வேண்டாமோ?

'ஜாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை!'
'அவனுக்கென்ன ஆண்பிள்ளை சிங்கம்!'
— இந்த மாதிரிப் பாராட்டுக்கள் எல்லாம் உங்களுக்குப் பரீட்சையில் பல்லக்குத் தூக்கினவா? யோசியுங்கள்.

எந்தத் துறையிலாகட்டும், உங்களுக்கு வெற்றி வேண்டுமானால் அந்தத் துறையில் வெற்றி பெற்றவர்களின் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் அல்லவா?

அதனால்தான் சொல்லுகிறேன் — முன்னவர்கள் படிப்பிலே காட்டும் முனைப்பை நீங்களும் காட்டினால், உங்களது வெற்றிச் சதவிகிதம் அவர்களை மிஞ்சிவிடாதோ?

படிப்புச் சூடுபிடிக்கும் இந்த நேரத்தில் உங்கள் துடிப்பும் சூடு பிடிக்க வேண்டும். எழு தம்பி, எழு!

உங்கள் அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.



நம் நாட்டு வரலாற்றில் ஆகஸ்ட் மாதத்துக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. நமக்கு 'விடுதலை' கிடைத்தது இம்மாதத்தில் தான். 1947 ஆகஸ்ட் 15 ஆம் நாள். அது மட்டுமல்ல, 'வெள்ளையனே வெளியேறு' இயக்கமும் இம்மாதத் தில் தான். 1942 ஆகஸ்ட் 8–9 தேதிகள். 'ஆகஸ்ட் கலவரம்' என்றே கூறுவார்கள். நேதாஜி மறைந்தது இந்த ஆகஸ்ட் மாதத்தில் தான். 1945 ஆகஸ்ட் 18 ஆம்.நாள்.

நேதாஜி கூவிய ஏலம்

ஜானகி மணாளன்

"இந்தத் தங்கச் சங்கிலியை, நான் இப்போது ஏலம் கூறி விற்கப் போகிறேன்.... விருப்பம் உள்ளவர்கள் ஏலம் கேட்கலாம்..." — இப்படி உரக்கக் கூவி அறிவித்தார், அந்தத் தலைவர்.

உடனே அவரைச் சூழ்ந்து நின்ற மக்கள் கூட்டத்தில் உற்சாகம். "அப்படியே செய்யுங்கள்...." என்று ஆரவாரமிட்டனர்.

தலைவர் சொன்னார்," இந்தத் தங்கச் சங்கிலியைப் பெற விரும்புகிறவர்கள் ஏலம் கேட்கலாம்... இதன் விலை ஒரு ரூபாய்,... ஒரு ரூபாய்..." என ஏலத்தைத் தொடங்கினார்.

அவ்வளவு தான். ஒருவர், "பத்து ரூபாய்!" என்றார். இன்னொருவர், "இருபது," என்றார். அடுத்தவர், "முப்பது....!" மற்றொருவர், "நாற்பது!" என ஏலத் தொகை ஏறிக் கொண்டே போயிற்று.....

"ஆயிரம் ரூபாய்....."

"இரண்டாயிரம்...."

இன்னொருவர், "ஐந்தாயிரம்....."

உடனே அடுத்தவர், "பத்தாயிரம்.."

"அப்படியா இதோ இருபதாயிரம்....."

கூட்டத்தனரிடம் உற்சாகம் கரை புரண்டது. சிறிது நேரத்தில் ஏலத் தொகை ஆயிரக் கணக்கைத் தாண்டி, லட்சத்தைத் தொட்டு விட்டது. அதன் பிறகும் போட்டி தொடர்ந்தது.

சரி, இப்படிக் கூட்டத்தின் நடுவில் நின்று ஏலம் கூவிய தலைவர் யார்? வேறு யாருமல்ல. நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தான்.

அவர் ஏன் அந்தத் தங்கச் சங்கிலியை ஏலம் கூவுகிறார்? அவருக்கு ஏது அந்தச் சங்கிலி? இதற்கெல்லாம் விடை இதோ:

அப்போது இந்தியா விடுதலை பெறவில்லை. சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. காந்திஜி அதற்குத் தலைமை ஏற்றிருந்தார். அவருடைய பாதை, கத்தியும் ரத்தமும் இல்லாத அகிம்சைப்பாதை.

ஆனால், அப்பாதையிலிருந்து, நேர் எதிரிடையாக மாறி நின்றார் ஒரு தலைவர். அவர், "சுதந்திரமாக வாழ வேண்டியது நமது உரிமை. நமது அந்த உரிமையை, நாம் பிறரிடம் கெஞ்சிக் கேட்டுப் பெறக் கூடாது. அப்படிப் பெறுவது பிச்சை! எனவே, நமது உரிமைகளை நாமே எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப் பறித்து வைத்திருப்பவர்களுடன் போரிட்டு, அடித்

துப் பெறவேண்டும்!'' என்று முழக்க மிட்டார்.

அந்தத் தலைவர்: நேதாஜி. அவரது முழுப்பெயர் சுபாஷ் சந்திர போஸ். நேதாஜி என்பது மக்கள் அவருக்குச் சூட்டிய அன்புப் பெயர். அதுவே நிலைத்து விட்டது. 'நேதா' என்றால் மக்கள் தலைவர். 'ஜி' என்பது மரி யாதைச் சொல். தமிழில் 'அவர்கள்' என்பது போல. நேதாஜி என்றால் 'தலைவர் அவர்கள்' என்று பொருள். மக்கள் அளித்த அப்பெயர் அவருக்கு நிலைத்து விட்டது. அவரும் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்றுத் திகழ்கிறார்.

ஆங்கில அரசு நேதாஜியைச் சிறை யில் அடைத்தது. ஆனால், அவர் சிறை யிலிருந்து தப்பி ஜெர்மனி சென்று விட்டார்.

அது இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயம். உலக நாடுகள் இரு அணிகளாகப் பிரிந்து சண்டையிட்டுக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் பிரான்சும் இங்கிலாந்தும். பிறகு, அமெரிக்கா அவ்வணியில் சேர்ந்தது. அவற்றுக்கு 'நேச நாடுகள்' என்று பெயர். அவர்களை எதிர்த்து ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் அணி திரண்டன. அவை களுக்கு 'அச்சு' நாடுகள் என்று பெயர்.

சிறையிலிருந்து தப்பிய நேதாஜி அச்சு நாடுகளுடன் தொடர்பு கொண் டார். அவர்களுடன் ரகசியமாக ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அவர்கள் உதவியோடு ஒரு படையைத் திரட்டி, அதைக் கொண்டு, ஆங்கி லேயர்கள் ஆண்டு கொண்டிருக்கும் இந்தியா மீது படையெடுத்து வந்து, இந்தியாவைக் கைப்பற்றி அதை ஒரு சுதந்திர நாடாக்க வேண்டும் என்பது அவருடைய திட்டம்.



அது வெற்றிபெற, ஜப்பான் நாடு மிகவும் ஒத்துழைத்தது. இந்திய ராணுவத்தில் ஆங்கிலேயருக்காகப் போரிட்டு, ஜப்பானியரால் கைது செய்யப்பட்டுச் சிறைக் கைதிகளாக இருந்த இந்தியவீரர்களைக்கொண்டு, நேதாஜிஒருபெரும்படையைஉருவாக்கினார். அதில், இந்தியாவுக்கு வெளியில் இருந்த பல இந்தியர்களும் சேர்ந்தனர்.

நேதாஜி அமைத்த அப்படைக்கு 'இன்டியன் நேஷனல் ஆர்மி' — INA என்று பெயர். அதாவது, தமிழில் 'இந்தியதேசியராணுவம்.' படையைத் திரட்டி, அவர்களுக்குப் பயிற்சியளித்துப் போருக்குத் தயார் படுத்துவது என்பது எளிதான செயல் அல்ல. அதற்கு ஏராளமான நிதி தேவைப்பட்டது. அதைத் திரட்டுவதற்காக, நேதாஜி பல்வேறு நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவ்வாறு சிங்கப்பூருக்கு வந்த போது தான், துவக்கத்தில் சொல்லப்பட்ட ஏலச் சம்பவம் நடந்தது.

நேதாஜிவருகிறார்என்றுகேள்விப்பட்டதும், சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த இந்தியர்களுக்கு ஒரே மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஓடிவந்து, அவரை அன்புடன் வரவேற்றனர். ஆவலோடு அவரது பேச்சைக் கேட்டனர். நேதாஜி, அவர்களிடம் தனக்கு ஏராளமாகப் பணம் தேவைப்படும் விவரத்தைக்கூறினார். நிதியுதவி செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

அவ்வளவுதான். அடுத்த கணம், அனைவரும்போட்டி போட்டு, முட்டி மோதிக் கொண்டு அவரை நெருங்கினர். சில்லறைக் காசும் நோட்டுமாக வாரி வழங்கினர். வெள்ளிக் காசுகள் மலை போல் குவிந்தன. நேதாஜியைச் சுற்றி ஒரே நெரிசல். யாரும் அருகில் நெருங்க முடிய



வில்லை. அவ்வளவு கூட்டம். அப்போது ஒரு கிழவி, வயது எண்பதுக்கு மேல். கையில் கோல் ஊன்றித் தள்ளாடி நடந்தாள். இருப்பினும் கூட்ட நெரிசலைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. கூட்டத்தினரைக் கிழித்துக் கொண்டு முன்னேறினாள்.

நேதாஜி அவளைக் கவனித்து விட்டார். உடனே கூட்டத்தினரைப் பார்த்து, "தயவு செய்து அந்தப் பாட்டிக்கு வழிவிடுங்கள்," என்று வேண்டுகோள் விடுத்தார்.

கிழவிக்கு வழி கிடைத்தது. நேதாஜியும் சற்று முன்னால் வந்து, கிழவியின் கைகளை அன்புடன் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அத்துடன், "பாட்டி...! என்னை ஆசீர்வதியுங்கள்," என்று வேண்டினார்.

கிழவி, உடனே தனது வாடி வதங்கி வற்றிப்போன கரங்களை, நேதாஜியின் தலையில் வைத்து ஆசீர்வதித்தாள். பிறகு, "மகனே! நேதாஜி! எனக்கு வயதாகிவிட்டது. என் கணவர் இறந்து விட்டார். நானும் இன்னும் எத்தனை நாட்களோ தெரியாது. என் கணவரின் நினைவாக என்னிடம் எஞ்சியுள்ள ஒரே பொருள் இந்தச் சங்கிலி தான்...." என்றவாறு, கிழவி தன் கழுத்தில் கிடந்த கனமான தங்கச் சங்கிலியைக் கழற்றினாள். தொடர்ந்து, "அப்பா மகனே! இதை நீ வைத்துக் கொள். அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தியத் தாய்த்திருநாட்டின் விடுதலைக்கு இதனைப் பயன்படுத்து. இது தான் எனது கடைசி விருப்பம். இதை நிறைவேற்றி வை மகனே..." என்றவாறு, சங்கிலியை நேதாஜியிடம் கொடுத்தாள்.

நேதாஜி, அந்தக் கிழவியிடமிருந்து அதை எதிர்பார்க்கவில்லை. சற்று நேரம் திகைத்துப் போனார். தனக்கு முன்பு, பாரத மாதாவே வந்து நிற்பதைப் போன்று உணர்ந்தார். அவர் மனம் மகிழ்ச்சியால் துள்ளியது. கண்கள் ஆனந்தக் கண்ணீரை வழிய விட்டன. கிழவியை வாரி அணைத்துக் கொண்டார். பிறகு, அவளுடைய பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

அடுத்த கணம் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. இந்தத் தங்கச் சங்கிலியை ஏலம் விட்டால் என்ன? அருகில் ஒரு மேஜை கிடந்தது. உடனே, நேதாஜி அதன் மீது ஏறி நின்று ஏலம் கூவத் தொடங்கி விட்டார்.

விஷம் ஏறுவது போல் என்பார்களே! அப்படித்தான் ஏலத் தொகை மிக வேகமாக உயர்ந்து கொண்டே போயிற்று.

"ஒன்றரை லட்சம்...."

"இரண்டு....."

"மூன்று லட்சம்....."

"நான்கு லட்சம்....."

இடையிடையே நேதாஜி, "ஒரு தடவை நான்கு லட்சம்.... இரண்டு தரம் நான்கு லட்சம்....." என்பார். அதற்குள் ஒருவர் மேலும் அதிகமாகக் கேட்டு விடுவார். இவ்வாறு ஏலம் கேட்பது ஆறு லட்சம் வரையில் உயர்ந்து விட்டது.

அந்தக் கூட்டத்தில் ஒரு சர்தார்ஜி அமர்ந்திருந்தார். (சீக்கியத் தலைவரை சர்தார் என்பார்கள். அவர்கள் நாட்டுக்காக உயிரையும் விடச் சித்தமாக இருப்பார்கள்.) அந்த சர்தார் அமைதியாக, ஏலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். 'ஆறு லட்சம்' என்றதும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. பளீச்சென்று எழுந்து நின்றார். நேதாஜியைப் பார்த்து உரக்கக் கூவினார்.

"நேதாஜி அவர்களே! ஏலத்தை

நான் யார் தெரிஞ்சுதா?

தயவுசெய்து சென்ற மாத கோகுலத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அதில் 2, 3 பக்கங்களில் வந்துள்ள 'நான் யார் தெரியுதா?' புகைப்படப் புதிருக்குச் சரியான விடையை அனுப்பி விட்டீர்களா? 87'ம் பக்கத்தில் விடையைச் சரிபார்க்கலாம் என்று புரட்டிப் பார்த்திருப்பீர்கள். ஆனால் அந்தப் பக்கத்தில் ஒரு விளம்பரம் முறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு என்னைத் திட்டியிருப்பீர்கள். எதிர்பாராமல் நிகழ்ந்து விட்ட அந்தத் தப்புக்காக உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். இந்த இதழில் அந்தப் புதிருக்கான விடை 89—ஆம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது — நிச்சயமாக. இப்போது உங்கள் ஊகத்தைச் சரிபார்த்துக் கொள்ளலாமே!

— ஆர்.



ராமு: வரவர எதுக்கெல்லாம் சர்டிபிகேட் கொடுக்கறதுன்னு விவஸ்தையில்லாமப் போயிடுச்சய்யா!

சோமு: ஏன்?

ராமு: என்னை உள்ளே விட்டு உதைச்சுப்புட்டு உங்களுக்கு அடிவாங்கத் தெம்பு இருக்குன்னு சர்டிபிகேட் கொடுக்கறாங்க?

— எஸ். சுரேஷ்.

உடனே முடித்துக் கொள்ளுங்கள்,'' என்றார்.

நேதாஜிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏலம் கூறுவதை நிறுத்திவிட்டார். சர்தாரை நிமிர்ந்து பார்த்தார். கூட்டத்தினரிடம் திகைப்பு.

சர்தார்ஜி மிக உரக்க, ''பத்து லட்சம்....'' என்றாரே பார்க்கலாம்! அனைவரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றனர்.

பிறகு சர்தார் சொன்னார். ''நேதாஜி! என்னிடம் பத்து லட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் உள்ளன. அதைத் தந்து விடுகிறேன். அந்தத் தங்கச் சங்கிலியை எனக்குக் கொடுத்து, ஏலத்தை முடித்து விடுங்கள்,'' என்றார்.

கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

ஆனந்தக் கண்ணீரால் நேதாஜியின் கண்கள் குளமாகின.

உடனே சர்தார்ஜியை அருகில் வருமாறு அழைத்தார். மேஜை மீது ஏற்றித் தனக்கு அருகில் நிறுத்திக் கொண்டார்.

பிறகு கூட்டத்தினரைப் பார்த்து மீண்டும் தன் ஏலத்தைக் கூவத் தொடங்கினார். அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வீராவேசத்துடன் வெளிப்பட்டன.

''சர்தார்ஜி... ஒரு தடவை பத்து லட்சம்... இரண்டு தடவை பத்து லட்சம்... சர்தார்ஜி மூன்று தடவை பத்து லட்சம்.... வேறு யாரும் இதற்கு மேல் கேட்காததால், இந்தத் தங்கச் சங்கிலி சர்தார்ஜிக்கு ஏலம் விடப்படுகிறது....'' எனக்கூறிவிட்டு, அந்தச் சங்கிலியைச் சர்தாரின் கழுத்தில் அணிவித்தார்.

கூட்டத்தினர் மகிழ்ச்சிப் பெருக்கால், கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

சர்தார்ஜி அத்துடன் திருப்திப்படவில்லை. கூட்டத்தில் எல்லார் முன்னிலையிலும் நேதாஜியிடம் கூறினார்.

''ஐயா! நேதாஜி அவர்களே! நான் தனி ஆள். எனக்கு மனைவி — மக்கள், உற்றார் உறவினர் என்று எவருமே கிடையாது. எனவே, என்னையும் தங்களது இந்தியத் தேசிய ராணுவத்தில் சேர்த்துக் கொண்டு விடுங்கள். நாட்டு விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு, தாய் நாட்டுச் சேவை செயவதற்கு, எனக்கும் ஒரு வாய்ப்புக் கொடுங்கள்....'' என்று கெஞ்சினார்.

அதைக்கேட்டதும்நேதாஜி மேலும் மகிழ்ந்தார். சர்தார்ஜியை வாரி அணைத்துக்கொண்டார். சர்தாரைச் சேர்த்துக் கொண்டதன் அடையாளமாக நேதாஜி கூட்டத்தினரைப் பார்த்துக் கையை மேலே உயர்த்தியவாறு, ''பாரத மாதாவுக்கு.....'' என்றார்.


கூட்டத்தினர் உடனே ''ஜே....!'' என்று முழக்கமிட்டார்.

உடனே சர்தார்ஜி தன் கை முஷ்டியை இறுக்கமாக மூடிக் கொண்டு, கையை மேலே உயர்த்தி, ''நேதாஜி, சுபாஷ் சந்திர போசுக்கு.....'' என்று உரக்கக் குரல் கொடுத்தார்.

கூட்டத்தினர் அதைவிட உரத்த குரலில்விண்ணே அதிரும்படி, ''ஜே..'' என்று முழக்கமிட்டு மகிழ்ந்தனர்.

குழந்தைகளே! நீங்கள் அந்தக் கிழவியைப் போலவும்.... அந்தச் சர்தார்ஜியைப் போலவும்.... நேதாஜியைப் போலவும்.... இந்தியாவின் ஒருமைப்பாட்டைப் பேணிக்காத்துத் தன்னலமற்றுத் தேசத் தொண்டு புரிய முன்வர வேண்டும். அதற்கு இப்போது முதலே உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில், நாளைய இந்தியா உங்கள் கையில்.

விளையும் பயிர்



சங்கீத வித்துவான்


மிருக வைத்தியர்





ஓட்டப்பந்தய வீராங்கனை


வில்லன்



முளையிலே...

கருத்து: எஸ்.டி. அரசு

இன்ஜினியர்





பாடனி புரொபஸர்

பியூட்டி பார்லர் எக்ஸ்பர்ட்

ஓவியர்







தக்க சமயத்தில் ஊக்கினீர்!

* வெற்றிக்கு அடிப்படை தோல்வியே. இன்றைய தோல்வி நாளைய வெற்றி. முயற்சியே வெற்றியின் முதல் படிகட்டு என்பதை வலியுறுத்தி, தேர்வில் தோல்வி கண்டு மனம் வெறுத்துப் போய் இருக்கும் என் போன்ற மாணவர்களுக்குத் தக்க சமயத்தில் ஊக்கமளித்து ஆறுதல் கூறித் தலையங்கம் எழுதிய அன்புமிகு அண்ணனுக்கு என் மனம் நிறைந்த நன்றி.

வந்தவாசி. ச. இரா. மணி.

* தமிழ் மீடியமா? இங்கிலீஷ் மீடியமா? எது நல்லது? என்ற கட்டுரை சூடாகவும், சுவையாகவும் இருந்தது, தமிழ் மீடியமோ, இங்கிலீஷ் மீடியமோ... நாம் அக்கறையுடன் உன்ழைத்துப் படித்தால் எதையும் நல்லதாக்கிக் 'கொள்ள முடியும்' என்ற கருத்தையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

மொரப்பூர். மு. திருநாவுக்கரசு.

* அனலாசுரனை விழுங்கிய விநாயகர்! சர்க்கரை போல் இனித்தது.

மனமேடு. எம். சுரேஷ்.

* அருமையான கவிதைகள், அற்புதமான பிருந்தாவனக் கதையரங்கம், சூப்பரான பதினாறு பக்க வண்ணப்படக்கதை மொத்தத்தில் திகட்டாத தேன்பாகு கோகுலம்.

மொரப்பூர். அ. நவ்சாத்.

* இப்போது வரும் குழந்தைகளுக்கான பத்திரிகைகளில், குழந்தைகளின் படைப்புக்களுக்கு அதிக முக்கியத்துவம் தருவது கோகுலம் ஒன்றுதான்.

முத்துராமலிங்கபுரம். ரா. பொன்ராசன்.

* பெருந்தலைவர் காமராஜரின் குழந்தைப் பருவம், சுவாமி விவேகானந்தர் என்று பல அருமையான, மதிப்புமிக்க பக்கங்களைத் தாங்கி வந்த கோகுலம் தங்கமாக மின்னியது. பாராட்டுக்கள்!

திருவிடைமருதூர். எஸ். நாதன்பாபு.

* தேவையா டொனேஷன் கதையில் வைரமணியின் நேர்மையான நடத்தைக்கு இடம் கிடைத்தது. அது போல வளரும் நாங்கள் இந்தக் கதையைப் படித்துத் திருந்த வேண்டி கதை எழுதிய டி. ஜானகி அவர்களுக்கு நன்றி.

அரசம்பட்டி. கே. ஏ. சுரேஷ்.

* சென்ற மாத கோகுலம் இதழில் (ஜூலை) வெளிவந்த '8 வயதில் கம்ப்யூட்டர்' என்ற கட்டுரையில் GOBAL என்று ஒரு பிரிவைக் குறிப்பிட்டுள்ளார்கள். COBAL என்ற பிரிவே சரியானதாகும். (Common Business Oriented Language)

சென்னை — 10. எஸ். தணிகை அரசு.

* கோகுலம் இன்றைய நிலையில் என் போன்ற சிறுவர்களிடத்தில் K2 சிகரத்தின் மதிப்பைப் பெற்றுள்ளது. மேலும் தனியாக அறிவியலுக்கான ஒரு பகுதியையும் வெளியிட்டால் எங்களிடத்தில் எவரெஸ்ட் சிகரத்தின் மதிப்பைப் பெறுவதுடன் எங்களது எதிர்காலத்திற்கும் பயனளிப்பதாய் இருக்கும்.

ஏம்பலம். சீ. இராஜகோபாலன்.

* கிடைத்தற்கரிய ஒரு சில துணுக்குகளைக் குறிப்பிட்ட பத்திரிகையிலிருந்து எடுத்து எழுதப்பட்டது என்ற ஆதாரத்துடன் எடுத்து எழுதலாம் என்று நான் சொல்லியதை தம்பி எஸ். ரவி தவறாகப் புரிந்து கொண்டு, என்னைக் கலந்தாலோசிக்காமல் 'தமிழ்ப்பாவை' எனும் மாத இதழில் வெளியான கவிதை ஒன்றை எடுத்து, கோகுலத்துக்குத் தன் பெயரில் அனுப்பி விட்டான். அது ஜூலை இதழில் வெளியாகி விட்டது. மன்னிக்கவும். தம்பி எஸ். ரவி செய்த தவறுக்கு நான் மன்னிப்புக் கேட்கிறேன்.

வந்தவாசி. சா. இரா. மணி.

* கதை, கவிதை, துணுக்கு, 16 பக்க வண்ணப் படக்கதை என்று கோகுலத்தின் ஒவ்வொரு பக்கமும் என் இதயத்தை கவர்கிறது. ஏன் சார் எப்போது கோகுலத்தை வார இதழாக்கப் போகிறீர்கள்?

புதுக்கோட்டை. கே. சின்னையா.

* இம்மாத கோகுலம் மிகவும் சிறப்பாக இருந்தது. அதுவும் சீக்கிரமே எங்களுக்குக் கிடைத்தது மகிழ்ச்சியை அளித்தது. கோகுலத்தில் பல புதுமைகளைப் படைத்து குழந்தைக் கவிஞரின் குழந்தை இலக்கியப் பணியைத் தொடரும் எங்கள் அண்ணன் தேசபந்து அவர்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

கோயமுத்தூர். எஸ். பார்த்தசாரதி.

எது உயர்ந்தது?



(பங்கு பெறும் பள்ளி மாணவ, மாணவிகள்: ஆர். ராஜேஷ், எம். மோகன், ஆர். ப்ரியா, எஸ். ஜி. ஹேமா.)

எம். மோகன்: சொந்தத் தொழில் செய்வதுதான் நல்லது. நானே எஜமானன் என்ற பெருமையும் இருக்கு.

ஆர். ராஜேஷ்: ஹ்ூம்... பெரிய பெருமை! படிச்சு முடிச்ச பிறகு, நம் பெற்றோர்களுக்கு அதிகத் தொந்தரவு இல்லாமல், சம்பாதித்துப் போட, வேலைக்குப் போவதுதான் சரி.

எஸ்.ஜி.ஹேமா: ரொம்பக்கரெக்ட் ராஜேஷ்... மாசம் முதல் தேதியானவுடன் டாண் என்று சம்பளம் வர்றது மாதிரி, சொந்த பிசினஸ்லே முடியுமா?

ஆர். ப்ரியா: ஒய்நாட்? முதல் தேதி என்ன, மாதக் கடைசியிலேயே பணம் எடுத்துக்கலாமே?

ஹேமா: முடியவே முடியாது... பிசினஸ் ஆரம்பிக்கப்பணம்வேணும்; இடம் வேணும்.. தொழில் ஆரம்பிச்ச உடனே லாபம்னு எதிர்பார்க்கறது ரொம்பக் கஷ்டம்...


ராஜேஷ்: வேலைக்குப் போனால், இந்தக் கவலையெல்லாம் கிடையாது.

மோகன்: மாசச் சம்பளம்னு அதிலேயே குறியா இருக்கீங்களே! வேலை கிடைக்கிறது அவ்வளவு ஈஸியாவா இருக்கு? வருஷம் முடிந்தால் எக்கச்சக்கமாகப் பட்டதாரிகள், என்ஜினியர்கள்னு வெளியே வர்றாங்க...



ப்ரியா: அதுமட்டுமா? பேப்பர்லே 'வாண்டட் காலம்' பார்த்துப் போடற அப்ளிகேஷன் ஏராளம். கடைசியிலே இண்டர்வியூ கார்டு வர்றதே பெரிய விஷயம்... அப்புறம் இருக்கவே இருக்கு—இண்டர்வியூ பயம், சிபாரிசு, லஞ்சம், அது இது என்று...

ஹேமா: ச்சூ... ரொம்ப நீட்டாதே! இண்டர்வியூ என்றால் என்ன பயம்? நாம அப்ளை பண்ற போஸ்ட்டுக்குத் தகுதி இருக்கா என்று பார்க்கத்தானே பேட்டி? அதுவும் தவிர, நாம படிச்சு முடிச்ச படிப்புக்குத் தகுந்தபடிதானே


ஆர். ராஜேஷ்

எடுக்க மாட்டோமா? எல்லாமே பிளானிங்தான் முக்கியம். நம்ம படிச்ச படிப்புக்குத் தகுந்த மாதிரி பிசினஸ் செய்வதுதான் சரி, படிப்பு உதவுமே? இன்னொருவரை நாடிப் போகவேண்டாமே?

மோகன்: நெத்தியடி அடிச்சே ப்ரியா. மற்றவர்கள் முன்னாடி கைகட்டி வேலை செய்வதைவிட,


ஆர். ப்ரியா

உத்தியோகமா? சொந்தத் தொழிலா?

சொந்த பிசினஸ் என்று இறங்க முடியும்? பொருளை உற்பத்தி பண்ற பாக்டரி அமைக்க முடியும்?

ராஜேஷ்: அதுமட்டுமல்ல, நாம தயாரிக்கிற பொருள் மார்க்கெட்லே விற்பனை ஆக வேண்டாமா? எல்லாப் பொருளுக்குமே ஏகப்பட்ட போட்டி இருக்கே...!

ப்ரியா: சும்மா நிறுத்து ராஜேஷ். பிசினஸ் ஆரம்பிக்கிறது என்றால் முதலிலேயே மார்க்கெட் சர்வே

சொந்தக் கால்களிலே நிற்கிறோம்னு தன்னம்பிக்கையோட இருக்கிற சுகம் வேலைக்குப்போவதில் இல்லைதான்! அதுவும்தவிர, எம்.டி. வர்றார், மானேஜர் டோஸ் விடறார், கீழே வேலை செய்யறவங்க டபாய்க்கிறாங்கன்னு தினமும் ஒரு குரல் அழுவது—வேலைக்குப் போறவங்கதான்.

ஹேமா: சும்மா ரீல் விடாதே! நாம் பொறுப்பா வேலை செய்தால், எம். டி. வந்தால் என்ன, போனால் என்ன? இன்னும் சொல்லப் போனால், வேலைத் திறமை பார்த்து பாராட்டி ப்ரமோஷன் கூடக் கிடைக்கலாமே? வேலைக்குப் போவது என்றால் படிப்புத்தான் மூலதனம். ஆனால் பிசினஸ் ஆரம்பிப்பது என்றால் பணம்தான் மூலதனம்!

மோகன்: ஏன், வங்கிகளில் எவ்வளவோ விதங்களில் கடன் வசதிகள் கிடைக்குமே?

ராஜேஷ்: ம்... கடன் வாங்கிடலாம்

தான். பணத்தை வட்டியோட திருப் பித் தரணுமே மோகன்... (சிரிப்பு)

ப்ரியா: எஸ்... நிச்சயமாத்திருப்பித் தருவோம்கிற ஐடியாவில்தான் கடனே கொடுக்கிறாங்க வங்கிகளில். செய் யற தொழிலில் லாபம் வந்தால், உங்கள் மாசச் சம்பளம் எல்லாம் எந்த மூலை...?

ஹேமா: கேட்க ஜோராத்தான் இருக்கு. லாபம் வராமல், நஷ்டம் வந் தால், முகத்தை எங்கே கொண்டு போய் வைச்சுக்கறது?

ராஜேஷ்: நஷ்டம்வந்தால் இரண்டு விதத்திலே கஷ்டம். கடனைத் திருப்ப முடியாது: தொழிலிலே மேலே மேலே முன்னேற முடியாது.

மோகன்: நல்லா ப்ளான் போட்டு, சம்பந்தப்பட்ட தகுதியான தொழி லதிபர்கள்கிட்டே அறிவுரைகள் கேட்டு, சின்ன பிசினஸா ஆரம்பிச்சு, படிப்படியாப் பெருக்கினால், நஷ்டம் ஏன் வர்றது? நம்மகிட்டே படிப்பு வைத்துக் கொண்டு, தொழில் அறி வையும் சேர்த்துக்கிட்டா, வியாபாரம் செய்யறது புத்திசாலித்தனம். அதை விட்டுட்டு, வேலை வேலைன்னு அலைஞ்சு, வேலையில்லாத் திண் டாட்டம்னு கூப்பாடு போடறது நல்லா யில்லே...

ஹேமா: அரசாங்கம் வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும். தகுதியானவர்களுக்கு வேலை தந்தே தீர வேண்டும். அரசின் கடமை அது.

ப்ரியா: நோ, நோ. ஒத்துக்க மாட் டேன். படிப்பு முடிஞ்சு வேலை கிடைக் கிற வரையில் அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை வாங்கறது, நம்ம தன் மானத்துக்குக் கேவலம்.

மோகன்: பேஷ்! அசத்திட்டே! நாடு நமக்கு என்ன செஞ்சுதுன்னு பார்க்காமல், நாட்டுக்கு நாம என்ன செய்தோம்னு யோசிக்க வேண் டாமா? அதுக்குச் சொந்தத் தொழில் செய்தால்தான் நல்லது. பிசினஸ் பெரி சானால், நிறையப் பேருக்கு வேலை போட்டுத் தரலாமே? அதன் மூலமா சமுதாயப் பிரச்னையாக வேலையில் லாத் திண்டாட்டத்தை ஓரளவு குறைக்க முடியுமே!

ப்ரியா: ஓ! மோகன்! நீ எங்கேயோ போயிட்டே... குட்!

ராஜேஷ்: பிசினஸ் ஆரம்பிக்கப் போறேன்னு சொன்னவுடனே வீட் டிலே பெரியவங்க ஒத்துக்க மாட் டாங்க... டிஸ்கரேஜ் செய்வாங்க. வேலைக்குப் போனால் சாயங்காலம் அஞ்சு, அஞ்சரையோட தீர்ந்தது. ஆபீஸை விட்டு வெளியே வந்து விட் டால், மற்ற விஷயங்களிலே கவனம் செலுத்த முடியும்.

ஹேமா: ரொம்பச் சரி. உடம்பு சரியில்லை என்றால் 'சிக்' லீவ் போட் டுட்டு வீட்டிலே இருக்கலாம். ஆபீஸ்லே நமக்குப் பதிலா இன்னொ ருத்தர் அவசர வேலையை எடுத்து முடிச்சுடுவாங்க. ஆபீஸ் அப்படியே ஸ்தம்பிக்கக் கூடாது.

ப்ரியா: ஹ... இதெல்லாம் மேம் போக்கான பேச்சுக்கள். நம்ம பிசி னஸ் என்றால் கடும் உழைப்புத் தேவை தான். நேரம் காலம் பார்க்க முடி யுமா? வீட்டிலே முதலிலேயே பெரிய வங்க அதைரியப்படுத்தினால், நாம தான் பேசிக் கன்வின்ஸ் செய்ய



ணும். எல்லாமே பல்லக்கிலே போக ணும்னா, யாராவது தூக்க வேண் டாமா? லீவு விஷயங்கள் சில்லறை சமாசாரங்கள்...

ராஜேஷ்: ஓ. கே. லீவு சமாசாரங் களை விட்டுடு... சம்பளத்திலே கட்டாயப் பிடிப்பு பிராவிடெண்ட் பண்டு. கடைசிக் காலத்திலே ஒரு பெருந்தொகை கிடைக்க வழி இருக்கு. பிசினஸ் செய்தால் இந்த விஷயம் எப்படி?

மோகன்: இட் ஈஸ் வெரி சிம்பிள். பிசினஸ் செய்யும் போது நல்ல லாபம் வரும். பெருந்தொகையைச் சேமிப் பாக ஒதுக்கி வைக்க முடியும்.

ஹேமா: நிச்சயம் முடியாது. பணம் கொஞ்சம் அதிகமா இருந்தால் உடனே தொழிலைப் பெருக்கத்தான் பயன் படுத்துவீங்க! அதனாலே மறுபடியும் லாபம் வரும்னு உறுதியாச் சொல்ல முடியாது.

ப்ரியா: ஏன் நல்லதையே நினைக்க மாட்டேங்கிறே? இப்போ எவ்வ ளவோ சீட்டு வகையறா இருக்கு... பணத்தை முதலீடு செய்ய வசதிகள் இருக்கு.



ராஜேஷ்: சம்பளம் வாங்கற வேலையிலேதான், சேமிப்பு வசதிகள் உண்டு. வீட்டுச் செலவுகளுக்குச் சட் டென்று உதவும். சம்பள வேலைக்குப் போனால் வாழ்க்கையிலே நிம்மதி ஜாஸ்தி.

மோகன்: ஐய்ய! நிம்மதிங்கறது அவங்க அவங்க மனசைப் பொறுத்த விஷயம். ரோட்லே வேலைக்குப் போகிற நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு வேலைத் திருப்தி — ஜாப் சாடிஸ்பாக்ஷன் கிடையாது. கொஞ் சம் நெருக்கமாப் பேசினால் போதும். எப்படா இந்த வேலையை விடப் போறோம்னு அழுவாங்க. பிசி னஸ்லே அப்படியில்லே. வயசு ஆயி டுச்சேன்னு கவலை இல்லே. எப்ப வும் பிசினஸ் செய்யலாம்.

ஹேமா: சொஸைட்டியிலே கௌர வம், அந்தஸ்து வேணும்னா, சம்ப ளம் வாங்கற எல். ஐ. சி. மானேஜர், பாங்க் மேலாளர் இப்படி! சொந்த பிசினஸ் செய்கிறேன் என்றால்... ஸோ ஸோதான்!

ப்ரியா: அதெல்லாம் கிடையாது. பல தொழிலதிபர்கள் இருந்தால் தான் சமூகத்துக்கே மதிப்பு. டாடா, பிர்லா, ஜி. டி. நாயுடு.... இப்படி...

ராஜேஷ்: இக்கரைக்கு அக்கரை பச்சைன்னு சொல்லு.

மோகன்: அப்படி ஒதுக்கிட முடி யாது. பிசினஸ் செய்யறதிலே 'ரிஸ்க்' கொஞ்சம் இருந்தாலும், சுதந்திரம் நிறைய இருக்கு. வேலைக்குப் போற திலே அடிமைத்தனம் வந்துடறது.


ஹேமா: சரி... எல்லாருமே பிசி னஸ் செய்ய வந்துவிட்டால், யார் தான் ரெகுலர் வேலையெல்லாம் செய்யறது?

ப்ரியா: அப்படி வா வழிக்கு... பிசி னஸ் நடந்தால்தான் வேலைக்கு வாய்ப்புக்கள் அதிகம்!

(எல்லோருமே சிரிக்கிறார்கள்.)

பேட்டி, தொகுப்பு: 'பிரகலாதன்.'

படங்கள்:



உங்கள் நூலகம்

மழலை மொழி — கவிஞர் தமிழ்முடி.

பள்ளியில் அடியெடுத்து வைக்கும் மழலைகளுக்காக ஆங்கிலத்தில் நர்ஸரி ரைம்ஸ் இருப்பது போல் தமிழில் இல்லையே என்று குறைபட்டுக் கொண்டு இந்த நூலைப் பாடியிருக்கிறார் கவிஞர். மிகச் சிறு வயதினர் சொல்லி மகிழும்படி சின்னப் பாடல்கள். மாதிரிக்கு —

ஒன்று இரண்டு
உழைப்பே தொண்டு!
மூன்று நான்கு
முதல்என் வாங்கு!
ஐந்து ஆறு
அறிஞரைச் சேரு!
ஏழு எட்டு
சேர்ப்பாய் துட்டு!
ஒன்பது பத்து
ஒழுக்கமே சொத்து!

பக். 66 — விலை ரூ. 6.50. வெளியீடு: தமிழ்முடி நிலையம், எச். 10-சே, பொன்னம்பலம் சாலை, கே. கே. நகர், சென்னை — 600 078.

* விண்வெளி வாழ்க்கை — வாண்டு மாமா.

சாட்டலைட், ராக்கெட் போன்ற முக்கியமான விண்வெளிச் சாதனைகளைப் பற்றியும் சந்திரனுக்கு மனிதனால் எப்படிப் போக முடிந்தது என்பதைப் பற்றியும் விளக்க முனைந்திருக்கிறார் ஆசிரியர். மருளத் தேவையில்லை.

நேரடியான வர்ணனை போலவோ, வாசகர்களை முன்னிலைப் படுத்தித் தக்க உதாரணங்களுடன் எளிமையாக எடுத்துச் சொல்லியோ, 'அறிவியல் நூலா, அலுப்பாய் இருக்குமே!' என்ற எண்ணமே எழாத படி செய்திருக்கிறார். தேனில் குழைத்துத் தந்த அறியாமைப் பிணி போக்கும் நல் மருந்து. விளக்கப் படங்கள் தெளிவு சேர்க்கின்றன.

பக். 96 — ரூ. 10 — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.

* ஒளிச்சுடர் சிறுவர் கதைகள் — வி. ர. வசந்தன்.

கோகுலத்தில் வெளியிட்டு ஊக்கப்படுத்தியதற்காக அமரர் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்குச் சமர்ப்பணம் செய்திருக்கிறார் ஆசிரியர். ஒவ்வொரு கதையிலும் நற்போதனைகளைச் சுடரொளியாய்க் குழந்தைகளின் மனத்தில் ஏற்றி வைத்திருக்கிறார். கோகுலத்தில் இடம் பெற்ற கதைகள் வேறு எப்படி இருக்க முடியும்? ஒரு டஜன் கதைகள். படிக்காதவர்கள் படிக்கலாம். படித்தவர்கள் நினைவு கூரலாம்.

பக். 116 — ரூ. 9.


* அதிசயக் கண்டம் அண்டார்க்டிகா — ஜானகி மணாளன்.

ஆசிரியர் உங்களுக்கெல்லாம் பழக்கப்பட்டவர்தானே? அதனால் நடைத் தெளிவைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அண்டார்க்டிகாவைப் பற்றித் துருவித் துருவி உங்களால் என்னென்ன கேள்விகள் கேட்க முடியுமோ அத்தனையும் (பதிலை ஒட்டிய கேள்விகளாக) இவராகவே கேட்டுக் கொண்டு அத்தனைக்கும் பதில் சொல்லிக் கொண்டே போகிறார். இந்த உத்தி சூடும் சுவையும் சேர்க்கிறது. இதோ ஒரு கேள்வி பதில்:

அண்டார்க்டிகாவில் கிடைத்த கனிப் பொருட்கள் எப்படி இருந்தன?

ஆப்பிரிக்க, தென் அமெரிக்கா போன்ற இடங்களில் இருந்ததைப் போல் இருப்பதைக் கண்டனர். ஆகவே இந்த இடங்கள் எல்லாம் வெகு காலத்துக்கு முன்பு ஒன்றாகத்தானே இருந்திருக்க வேண்டும்? ஆகவே அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

பக். 118 — ரூ. 9. — கடைசி 2 புத்தகங்களும்: கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை — 600 017.



வீடு ஒன்று நாடு ஒன்று

நாடு நாடு நாடு நமது பாரத நாடு.
நாடி ஒன்று கூடியதன் பெருமை பண்பாடு.
ஊடும் பாவும் போல வாழ்ந்து உயர்வு காணுவோம்.
வீடு ஒன்று நாடு ஒன்று என்று வாழுவோம்.

வேதம் நான்கு கொண்டதிந்த பாரதநாடு
வேந்தர் பலர் சிறப்புடனே ஆண்டதிந்நாடு
மேதினியில் பெருமை கண்ட ராமபிரானின்
பாதம் பட்டுப் புனிதமுற்ற பாரத நாடு.


'நாதனாக நின்று என்றும் நினைவுமாகிறேன்,
நல்லவற்றை நாடுவோர்க்குப் பாதையாகிறேன்,
கீதை வழியில் உயர்க'வென்ற கண்ணபிரானின்
பாதம் பட்டுப் புனிதமுற்ற பாரத நாடு.,


'வேதனைகள் யாவுக்குமே ஆசை காரணம்
விருப்பமுடன் அன்புவழி என்றும் செல்லென
போதனைகள் செய்தமகான் புத்தபிரானின்
பாதம் பட்டுப் புனிதமுற்ற பாரத நாடு.

சாதிசாதி என்று நித்தம் சாவதுமேனோ?
மோதி மக்கள் வீழுவதும் விதிவசமாமோ?
ஆதிநாளில் சாதியேது மதங்களுமேது?
ஆண்டவனின் படைப்பினிலே யாவருமொன்றே!

'பேதவர்ணம் கண்ணில் உற்ற குற்றமாகுமே
சோதரராய் என்றும் சொந்தம் கொண்டு வாழ்கென
ஓதிச்சென்ற உத்தமனாம் காந்தி மகானின்
பாதம் பட்டுப் புனிதமுற்ற பாரத நாடு!


— தி. ப. சீனிவாசன்.








முரளியின் புகைப்படத்துடன் சென்று 'ரேகநக்கல்' வட்டாரத்தில் விசாரித்தார், பீதாம்பரம்...
ஆமா.. இதே புள்ளை தான்.. ரெண்டுநாள் மின்னே இங்கே பார்த்தேன்... அப்பாலே காணலே...
கதை: தேசபந்து படம்: சிஜு...
எட்டுக்கு எட்டு ③
பலபேர் இப்படிச் சொன்னார்கள். திரும்பிப் போனதாய் எவரும் சொல்ல வில்லை- பீதாம்பரம் போலீசை அணுகினார்-
சசிவர்ணத்தின் இரண்டு குழந்தைகளைத் தொடர்ந்து இன்னொரு பிள்ளையும் கடத்தப்பட்டிருக்கிறது என்று நேத்திக்கே சந்தேகம் ஏற்பட்டது?
தெரியுமா? எதை வச்சுச் சொல்றீங்க?
முதல் இரண்டு பேர் காணாமல் போனதும், "8−2=6" என்று எழுதி எங்களுக்கு ஒரு கடிதம் வந்தது. அடுத்து இப்படி "8−3=5" என்று ஒரு கடிதம்...
8-2=6
8-3=5
..அப்போ இன்னும் 5 பாக்கி இருக்கா?!
8-3=5


அந்த கோஷ்டி எங்களுக்கு சவால் விடுது. நாங்கள் விடப்போறதில்லை!
சார் உங்க சவாலுக்கு எங்க பிள்ளைகள் பலியாகணுமா?
பயப்படாதீங்க...
நான் கமிஷனரைக் கன்ஸல்ட் பண்ணப் போறேன்
கமிஷனர் அலுவலகம்.
உங்களுக்கு வந்த அந்த லெட்டர் எங்கே, இன்ஸ்பெக்டர்?
இதோ, சார்.
...கரெக்ட்! இன்னிக்கு இங்கே இந்த லெட்டர் வந்திருக்கு பாருங்க!
சார்!..
8-4=4


சார், இந்தத் தடவை யார்?
இன்னும் தகவல் வரலை... எதிர் பார்த்திட்டிருக்கோம்..
அதே நேரத்தில்— மேட்டூர் அணைப் பக்கம் ஒரு பள்ளி உல்லாசப்பயண பஸ் —
எல்லோரும் சேர்ந்துதானே பார்க்கிலே உட்கார்ந்திருந் தீங்க...
ஆமா சார்.. சுகுமார் அப்பகூட இருந்தான் சார்.
அவனை மாத்திரம் காணலியே!
நாங்க யாரும் இன்னும் அணைக்கட்டுப் பக்கம்கூட போகலை, சார்!
சும்மா இங்கே உழப்பறிச்சுட்டு இருந்தா எப்படி சார்? போய்ப் போலீசிலே ரிப்போர்ட் கொடுங்க... இதுக்காகக் காத் திட்டிருக்கணுமா?


சுகுமார் என்ன ஆனான்? அவன் தந்தை சேலத்தில் ஒரு பெரும் தொழிலதிபர், கோபாலராம். அவர் கமிஷனர் அலுவலகத்தில் –
...குழந்தைகளைக் கடத்தும் கோஷ்டி ஒன்னு இப்போ எங்களுக்குப் பிரச்சினையா யிருக்கு... கவலைப் படாதீங்க.. எல்லா ஏற்பாடும் செய் திருக்கோம்..
இது பிளாக்மெயிலா இருந்தா.. எனக்குப் பணம் பெரிசில்லே. என் பிள்ளையை மீட்டுக் கொடுத்திருங்க!
இது அப்படித் தெரியலை... மோட்டிவ் என்னாங்கிறதும் தெரியலை.
பத்திரிக்கையில் அறிக்கை வந் திருந்தா, நாங்க உஷாரா இருந் திருப்போமில்ல?!
தவறுதான்! இனிமே செய்திடறோம்
இனிமே அறிக்கைவிட்டு என்ன சார் ஆச்சு!? பிள்ளையைக் காணாம ரெண்டுநாளா என் சம்சாரம் பட்டினி..
எங்களால் முடிஞ்சதைச் செய்யறோம். தைரியமா இருங்க..
தொடரும்.

மண்ணாங்கட்டியா



"வாத்தியார் ஐயா இருக்காங்களா?"

வாயிற்புறம் ஒரு பெண் குரல் கேட்டது. எட்டிப் பார்த்தேன். சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி. பக்கத்தில்ஓர் ஏழுவயசுச் சிறுவன் கிழிசலும் அழுக்கடைந்ததுமான சட்டையும் அரை நிஜாரும் பரட்டைத் தலையும் தானுமாக! வீதிக்குச் சென்றேன்.

"என்னம்மா வேணும் உங்களுக்கு?"

"நீங்கதான் வாத்தியார்னு நினைக்கிறேன். வணக்கமுங்க!" என்றாள் பெண்மணி.

"ஆமாம், வணக்கம்!"

"ஐயா! இவன் என் மகன் மண்ணாங்கட்டி. இவனை உங்க பள்ளியிலே மூணாவது வகுப்பில் சேர்த்துக்கணுங்க. ஏற்கெனவே மூணாவது படிச்சு, பாதியிலே அரைகுறையில் நின்னுட்டானுங்க," என்று தொடங்கி, தன் குடும்பக் கதையைச் சுருக்கமாகக் கூறினாள் அந்தப் பெண்மணி.

அவளது கணவன் ஒரு குடிகாரன். இவர்களை அம்போ என்று விட்டு விட்டு, ஊரை விட்டே ஓடிவிட்டான். தன் ஒரே மகனை வளர்த்துப் படிக்க வைத்து ஆளாக்க வேண்டிய நிலையில் சில வீடுகளில் வேலை செய்து ஜீவனம் செய்கிறாள்.

"சரி, நீ நாளைக் காலை இவனை அழைத்துக் கொண்டு பள்ளிக்கு வா," எனக் கூறி அனுப்பினேன்.

சிறுவன் மண்ணாங்கட்டியை என்வகுப்பிலேயேசேர்த்துவிட்டேன், அவனுடைய கிழிந்த அழுக்கடைந்த ஆடைகளையும், எண்ணெய் கண்டறியாத பரட்டைத் தலையையும் கண்ட பிற மாணவர்கள் முகம் சுளித்தார்கள். வெறுப்பை வெளிப்படுத்தினார்கள்.

திருடினான்?

எனக்கு மண்ணாங்கட்டியிடம் இரக்கமும் அனுதாபமும் உண்டாயிற்று. என் மகனுடைய பழைய சட்டை நிஜார் இவற்றைக் கொண்டு வந்து அவனுக்களித்தேன். மகிழ்ச்சியுடன் அவற்றைப் பெற்றுக் கொண்டான்.

மற்ற மாணவர்கள் வீதியில் விற்கும் பகல தின்பண்டங்களை வாங்கித் தின்னும் போது, மண்ணாங்கட்டி ஏங்குவான். ஒரு பயலுக்காவது இவனுக்குக் கொடுப்போம் என்ற எண்ணம் தோன்றவில்லை. அவனுடைய பிஞ்சு உள்ளத்திலே தன்னைப் பிற சிறுவர்கள் வெறுத்து ஒதுக்குவது புரியாமல் இல்லை. அதனால் வேதனைப்பட்டான்.

முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். மற்ற மாணவர்கள் மண்ணாங்கட்டியை வெறுத்ததுடன் மட்டும் நின்றால் கூடப் பரவாயில்லை. அவன் மீது திருட்டுப் பட்டமும் கட்டத் தயங்கவில்லை.

''சார்! என் கணக்குப் புத்தகத்தைக் காணோம்.''

''சார், என் பேனாவைக் காணோம்.''

''சார் என் ஸ்கேலைக் காணோம்!''

இப்படிப் புகார் செய்தபடி, சந்தேகத்துடன் மண்ணாங்கட்டியை நோக்கினார்கள் மாணவர்கள்.

எனக்கு மண்ணாங்கட்டி மீது ஏற்பட்ட அனுதாப எண்ணம் காரணமாகப் பரிந்து பேசும் வண்ணம், ''இதோ பாருங்கள், மாணவர்களே! கண்ணால் பார்க்காமல், யார் மீதும் அனாவசியமாகச் சந்தேகப்படவோ, பழி போடவோ கூடாது,'' என்று கூறினேன்.

மண்ணாங்கட்டி அப்படிப்பட்ட

'சரஸன்'



திருட்டுக் குற்றத்தைச் செய்திருப்பான் என்று என்னால் நினைத்துப் பார்க்கவும் என் மனம் மறுத்தது.

ஒரு நாள் வகுப்பில் திடீரென்று ஒரே கூச்சல், பரபரப்பு.

''டேய்! சரியாகப் பார்! சரியாகப் பார்!'' என்று சில சிறுவர்களின் குரல்கள்!

''சற்று முன்புகூட இருந்தது. நான் பார்த்தேனே! அதற்குள் எங்கே போய் விடும்?''

இந்த அமளி என் கவனத்தைக் கவர, எழுந்து போய் விசாரித்த போது, சேகர் என்ற மாணவனுடைய ஐந்து ரூபாய் நோட்டு காணாமற் போய்விட்டது என்று தெரிய வந்தது.

''சார்! இந்தப் புத்தகத்தின் மேல் தான் வைத்திருந்தேன். என் பக்கத்தில் மண்ணாங்கட்டிதான் இருந்தான். நிச்சயமா அவன்தான் எடுத்திருக்கணும்,'' என்று கண்களில் நீர் முட்டக் கூறினான் சேகர்.

இன்னும் சில மாணவர்களும் அவனுடைய கூற்றை ஆதரித்துப் பேசுவதைக் கேட்க, எனக்குக் குழப்பமாக இருந்தது.

என் பார்வை மண்ணாங்கட்டியின் மீது பாய்ந்தது. அவன் தலையைத் தொங்கப் போட்டபடி உட்கார்ந்திருந்தான்.

''மண்ணாங்கட்டி, நீ எடுத்தியா, அவன் ரூபாயை?'' எனக் கேட்டேன்.

அவன் மௌனமாக இருந்தான். மௌனம் ஒப்புதலுக்கு அறிகுறி என்பார்களே! எனவே மண்ணாங்கட்டி மீது எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஏற்கெனவே அவன் மீது ஏற்பட்டிருந்த அனுதாபம், இரக்கம், பரிவு எல்லாம் என் மனத்தை விட்டு அகன்றன.

அவனுடைய மௌனம் என் ஆத்திரத்தைக் கிளப்பியது.

''என்னடா! பேசாமல் இருக்கிறே? நீதானே எடுத்தாய்? உண்மையை ஒப்புக் கொண்டுவிடு! இல்லாவிட்டால்...''

என் குரலின் கடுமையைக் கேட்ட மற்ற மாணவர்கள் வெகு ஆவலுடன் என்னையும் அவனையும் மாறி மாறி நோக்கினார்கள்.

அடுத்து நானே மண்ணாங்கட்டியின் சட்டை, ஜேபி, நிஜார் ஜேபி, அவனுடைய புத்தகக் கிழிசல் பை, இவற்றைச் சோதனை போட்டேன். பயனில்லை. ஏமாற்றம் ஒரு புறம். ஆத்திரம் ஒருபுறம்.

''அயோக்கியப் பயலே! உண்மையைச் சொல்ல மாட்டாயா?'' என்று கூறியபடி ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டேன்.

கன்னத்தைத் தடவியபடி, மீண்டும் மௌனத்தைத்தான் கடைப்பிடித்தான் மண்ணாங்கட்டி. ஆ, என்ன நெஞ்சழுத்தம்! ஒரு திருட்டுப் பயல் மீது அன்பும் அனுதாபமும் வைத்தோமே! என்னையே நொந்து கொண்டேன்.

எனினும் இவனை விட்டுவிடக் கூடாது. எப்படியும் இவன் வாய்மொழியாலேயே உண்மையைக் கக்க வைக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன், மண்ணாட்டியை ஒரு தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்றேன்.

''மண்ணாங்கட்டி, இதோ பார்! உன்னையும் அறியாமல் ஆசைப்பட்டு நீ சேகருடைய ரூபாயை எடுத்திருக்கலாம். எங்கே வைத்திருக்கிறாய்?



சொல், பிறருடைய பொருள் மீது ஆசை வைப்பதும், அவர்களுக்குத் தெரியாமல் எடுப்பதும் தவறுடா மண்ணாங்கட்டி. வேண்டாம். கொடுத்து விடு. தலைமையாசிரியருக்குத் தெரிந்து விட்டால், உன்னைப் பள்ளியிலிருந்தே துரத்தி விடுவார். உன் அம்மாவுக்குத் தெரிந்தால் உன்னை அடித்து நொறுக்கி விடுவாள்,'' என நயமாகவும் கெஞ்சியும் கேட்டுப் பார்த்தேன்.

பதிலே வரவில்லை. தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு கேவுவது தெரிய வந்தது. எத்தனை சாகசமான நடிப்பு!

ஆத்திரம், எரிச்சல், ஏமாற்றம், வேதனை இப்படிப் பல மன எழுச்சிகளால் தவித்துக் கொண்டிருந்தேன்.

''சார், சார்!'' ஒரு மாணவன் பதற்றத்துடன் ஓடிவந்தான்.

''சார், சேகரின் ஐந்து ரூபாய் நோட்டு கிடைச்சிட்டது சார்!''

அதிர்ந்து போய்த் திரும்பியவன், மேலும் சில மாணவர்கள் கூட்டமாக ஓடி வருவது கண்டு துணுக்குற்றேன். அதற்குள் சேகரும் அங்கு வந்து விட்டான்.

''சார்! என் ஐந்து ரூபாய் நோட்டு



கணக்கு நோட்டுக்குள் இருந்தது. சரியாகப் பார்க்காமல்... மண்ணாங்கட்டி மேல்...'' என்று கூறும்போதே குற்ற உணர்வுடன் சேகர் கழிவிரக்கப்படுவது புரிந்தது. அவன் கண்கள் கலங்கியிருந்தன.

என் மன எழுச்சியை எப்படி வருணிப்பது? ஒரு நிரபராதி ஏழைச் சிறுவன் மீது திருட்டுக் குற்றத்தைச் சுமத்தி, அவனைக் கைநீட்டி அடிக்கவும் செய்து விட்டேனே!

நிரபராதி ஏழைச் சிறுவன் மண்ணாங்கட்டியின் முன் கூனிக் குறுகி ஒரு குற்றவாளியாக நின்றேன். மண்ணாங்கட்டி மெல்ல நிமிர்ந்து என்னை நோக்கினான்.

''மண்ணாங்கட்டி! மண்ணாங்கட்டி! என்னை மன்னிச்சுடுடா!'' என்று அவனை என் அருகில் இழுத்து அணைத்தபடி, அவனுடைய கன்னத்தைக் கனிவோடு வருடினேன். ''மண்ணாங்கட்டி! நீ ஏன் மௌனமாக இருந்தாய்? 'சார், நான் எடுக்கவில்லை. எனக்கு எதுவும் தெரியாது,' என்று ஏண்டா வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லாமல் ஒரே மௌனமாக இருந்தாய்? உன் மௌனமே ஒரு தவறான எண்ணத்தை எல்லார் மனசிலும் ஏற்படுத்திவிட்டதே மண்ணாங்கட்டி?'' இவ்விதம் பரிவுடன் கேட்டேன்.

என்னை நன்றாக உற்று நோக்கினான் மண்ணாங்கட்டி. அவன் பார்வையில் இப்போது பயமின்மையும் யதார்த்தமும் துலங்கின. அவன் பேசினான் சன்னமான குரலில். ''சார், என் அம்மா சொல்லியிருக்காங்க. அதனால்தான். மௌனமாக இருந்தேன்!''

''உன் அம்மா என்னடா சொன்னாங்க?''

''டேய் மண்ணாங்கட்டி. நீ ஒரு ஏழைப் பையன் என்பதனால் உன் பள்ளிக்கூடத்திலே மற்றப் பிள்ளைகள் உன்னைக் கேலி செய்வாங்க. செய்து விட்டுப் போகட்டும். நீ பேசாமல் இருந்துவிடு. இன்னொரு விஷயம். சில சமயம் உன் மேல் திருட்டுக் குற்றம் கூடச் சுமத்தி விடுவாங்க! அப்போதும் நீ வாய் திறந்து ஏதும் பேசாமல் மௌனமாகவே இருக்கணும். நீ இல்லை என்று மறுத்தால் உன் பேச்சை யாரும் நம்ப மாட்டாங்க. நீ ஒரு ஏழைப் பையன்,' — இப்படி. இப்படி அம்மா சொல்லியிருக்காங்க. அதனால்தான் சார் நான் மௌனமாக இருந்தேன்,'' என்றான் மண்ணாங்கட்டி.


''தீர விசாரிக்காமல் ஏழைகள் மேலே அநியாயமாய்ப் பழி போடாதீர்கள்,'' என்று கூச்சத்தோடுதான் என்னால் உபதேசம் செய்ய முடிந்தது.

ஏனென்றால் நானே அந்த ஏழை மீது அப்படியொரு பழி சுமத்தியவன் ஆயிற்றே!

நாம் ஒரு தரம் கோபப்படும் பொழுது நம் முகத்தில் 43 நரம்புகளை உபயோகிக்கிறோம். அதனால் முகத்தில் வயோதிகச் சுருக்கங்கள் விழுந்து முகம் அசிங்கமாகி விடுகிறது. ஆனால் சிரிப்பதற்கோ, 17 நரம்புகளை மட்டுமே பயன்படுத்துவதால் என்றும் முகம் இளமையோடு காணப்படுகிறது. நீங்கள் எதை விரும்புகிறீர்கள்? சிரிப்பதைத்தானே...?

— மு. திருநாவுக்கரசு
மொரப்பூர்.






ராஜாஜி, ஈ.வெ.ரா., பெரியார் இவர்கள் இருவருக்கும் உள்ள ஒரு விசித்திர ஒற்றுமை ராஜாஜி அவர்கள் 1878—லும் பெரியார் அவர்கள் 1879—லும் பிறந்தார்கள். அதே போன்று அவர்கள் முறையே 1972 டிசம்பரிலும், 1973 டிசம்பரிலும் மறைந்தார்கள்.

— டி. எல். சிவகுமார்
வந்தவாசி.

விளையாட்டுப் போட்டிகளில் ஓட்டப் பந்தயங்கள் நடைபெறும் போது வளைவுகளில் இடப்பக்கமாக மட்டுமே ஓடுவதற்கு அனுமதிக்கப்படுவர். இது ஏன் தெரியுமா? மனிதனின் முக்கிய உறுப்புக்களான மூளை, இதயம், சிறுநீரகம் முதலியன இடது பக்கத்தையே சார்ந்துள்ளது. வலப்பக்கம் ஓடினால் அவற்றுக்குத் தீங்கு ஏற்படும். மேலும் வலப்பக்கம் ஓடினால் வேகமாக ஓட முடியாதாம்.

— மு. திருநாவுக்கரசு
மொரப்பூர்.




அத்தனையும் யானைதான்!

தணிகை உலகநாதன்

வீரராகவர் என்பவர் செங்கற பட்டு மாவட்டத்தில் பூதூர் என்னும் ஊரில் பிறந்தவர். பிறக்கும் போதே அவருக்குக் கண்பார்வை இல்லை. ஆனாலும், கல்வி கற்கும் ஆசை அவருக்கு மிகுதியாக இருந்தது. ஆசிரியர் அவர் முதுகில் எழுத, அவர் தரையில் எழுதித் தமிழ் எழுத்துக் களைக் கற்றுக் கொண்டார். பின்னர் ஆசிரியர் பல இலக்கியங்களுக்கு உரை கூறினார். வீரராகவர் அதனைக் காதால் கேட்டுப் பெரிய புலவர் ஆனார். கவிபாடும் திறமையும் பெற்றார். மாணவன் ஒருவனைத் துணை யாக வைத்துக் கொண்டு பல வள் ளல்களைப்பாடிப்பரிசுகள் பெற்றார். பார்வையற்றவராய் இருந்ததால் அவர் அந்தகக் கவி வீரராகவர் என்று அழைக்கப் பட்டார்.

ஒரு சமயம் வீரராகவர் இராமன் என்னும் வள்ளலைப் பாடினார். வள்ளல்,புலவருக்கு ஒரு யானையைப் பரிசாக அளித்தார். யானையைக் கட்டிக் காப்பதற்கு வேண்டிய விளைச்சல் நிலங்களையும் கொடுத் தார். புலவர் தாம் பெற்ற பரிசை மனைவியிடம் தெரிவித்ததைப் பாண னுக்கும் பாணிக்கும் நடந்த ஓர் உரை யாடல் போலப் பாடினார். பாணன் என்பவன் பாட்டுப்பாடிப் பிழைப்ப வன். பாணி என்பவள் அவனுடைய மனைவி.

பாணன் எடுத்த எடுப்பிலேயே 'யானைப் பரிசு பெற்றேன்' என்று கூறவில்லை. யானையைக் குறிக்கும் வேறு சொற்களையே கூறினான். முடி வில் யானையைக் குறிக்கும் ஒரே சொல்லைக்கூறினான். கவிஞர் பாடிய வேடிக்கையான பாடலைப் பாருங் கள்:



'இம்பர்வான் எல்லை
இராமனையே பாடி,
என்கொணர்ந்தாய் பாணா நீ?'
என்றாள் பாணி.
'வம்பதாம் களபம் என்றேன்'
'பூசும்' என்றாள்.
'மாதங்கம்' என்றேன்' 'யாம்
வாழ்ந்தோம்' என்றாள்;
'பம்புசீர் வேழமென்றேன்'
'தின்னும்' என்றாள்;
'பகடு' என்றேன்; 'உழும்' என்றாள்;
பழனம் தன்னைக்
'கம்பமா' என்றேன்; 'நல்
களியாம்' என்றாள்.
'கைம்மா' என்றேன்; சும்மா
கலங்கி னாளே.

'பாணரே! இந்த உலகத்தையும் வானுலகத்தையும் தன் புகழுக்கு எல்லையாகக் கொண்ட இராமவள்ளலைப் பாடி என்ன பரிசு பெற்று வந்தீர்?' என்று கேட்டாள் பாணி. அதற்கு விடையாகப் 'புதிதாகிய களபம்' என்றேன். அதைச் சந்தனம் என்று நினைத்தாள். 'அதை நீங்களே உங்கள் உடம்பில் பூசிக் கொள்ளுங்கள்' என்றாள்.

'மாதங்கம்' என்றேன். அதை அவள் பெரிய 'தங்கம்' என்று நினைத்துக்கொண்டாள். 'அப்படியா? இனி மேல் நாம் வறுமை நீங்கி வளமாக வாழலாம்' என்றாள்.

'மிகச்சிறந்தவேழம்' என்றுசொன்னேன். அது கேட்ட பாணி, கரும்பு என்று எண்ணி, 'கரும்பா? உங்களுக்கு மிகவும் பிடிக்குமே! நீங்களே அதைக் கடித்துத் தின்னுங்கள்' என்றாள்.


'பகடு' என்றேன். அவள் அதை எருது என்று நினைத்தாள். 'எருதைக் கொண்டு வயலை உழுது பயன் பெறலாம்' என்று சொன்னாள்.

'கம்பமா' என்றுகூறினேன். அதைக் கம்புமா என்று நினைத்து 'சுவையான களி செய்யலாமே' என்று சொன்னாள்.

'கைம்மா' என்றேன்.

'கைம்மாவா? அப்படி என்றால் யானையாயிற்றே!' என்று அதிர்ச்சியடைந்தாள். 'யானைக்குத் தீனி போட்டு வளர்கக நம்மால் முடியுமா?' என்று கண் கலங்கினாள்.


பாணன், "பெண்ணே! நான் சொன்ன களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா ஆகிய ஐந்து சொற்களும் யானை என்ற ஒரு பொருளையே குறிக்கும். நீ நினைத்த அர்த்தமும் உண்டு. என்றாலும் யானை என்ற பொருளை நீ அறிய வேண்டுமே. அதற்காகவே 'கைம்மா' என்றேன். தும்பிக்கையை உடைய யானை என்றதும் நீ கலங்கிவிட்டாய். கவலை வேண்டாம். அதைக் கட்டிக் காப்பதற்கு வேண்டிய விளைச்சல் நிலமும் கிடைத்திருக்கிறது" என்று புலவர் விளக்கிக் கூறினார். புலவரின் சமர்த்தான விளக்கத்தைக் கேட்டு அவர் மனைவி சிரித்தாள்.



நபர்: என்னங்க இது, மிட்டாயை எடுத்து வாயிலே போட்டுக்கிட்டு காந்திக் கணக்கிலே எழுதிக்கோன்னு சொல் லிட்டு ஓடறான் அந்தப் பையன். பேசாமப் பார்த்துட்டு இருக்கீங்களே...?

கடைக்காரர்: அவரோட அப்பா பேரு காந்திங்க. என் கடையிலே கணக்கு வச்சிருக்காரு. அதான்...!

— பானுரேகா ஜொபார்.



ஆசிரியர்: உங்க பையனை அதிகமா டி.வி. பார்க்க விடாதீங்க.

பையனின் அப்பா: ஏன், என்னாச்சு?

ஆசிரியர்: பரீட்சையில ஒவ்வொரு கேள்விக்கும் பாதி விடை எழுதிட்டு, மீதிக்குத் 'தடங்கலுக்குவருந்துகிறோம்'ன்னு எழுதியிருக்கான்.

— ச. உமர்கான் (20,968).

திப்புவின் வாள் தப்பவிடுமா?

ப.மரிய ஆரோக்கியம்


கோட்டையின் முன் பகுதியில் வெள்ளை கம்பெனியாரின் பீரங்கிகள் சீற்றத்துடன் முழங்கின. குண்டுகள் நெருப்பு மழையைத் தூவிய வண்ணம் கோட்டைச் சுவரில் மோதிச் சிதறின.

கோட்டையின் வெளியே வெள்ளம் போன்று ஆர்ப்பரித்துக் கொண்டு நின்றனர் ஆங்கிலேய சிப்பாய்கள். இந்தப் படைக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லும் ஆர்தர் வெல்லெஸ்லி ஒரு பக்கம் சிந்தனைச் சக்கரத்தைச் சுழல விட்டவாறு நின்றிருந்தான். ஏனென்றால் கோட்டைச் சுவரை உடைத்து உள்ளே நுழைந்தாலும் உள்ளே எதிர்ப்பு எவ்வாறு இருக்குமோ? இதுதான் அவனது கவலை.

மைசூர்ப் புலி என்று அழைக்கப்பட்ட திப்பு சுல்தான்! அவரது வீரத்தின் மேல் வெல்லெஸ்லிக்கு ஆழ்ந்த மதிப்புண்டு. கீழே குனிந்து தனது ஷூவைத் தளர்த்தி வலது காலில் இருந்த வடுவைப் பார்த்துக் கொண்டான். தான் எப்பேர்ப்பட்ட வீரனுடன் மோதப் போகிறோம் என்பதை நினைத்துப் பெருமூச்சொன்றை வெளிவிட்டான்.

திப்பு சுல்தானுடன் முன்பு ஒரு முறை நேருக்கு நேர் நின்று போர் செய்யும் பொழுது, அவரின் துப்பாக்கி துப்பி விட்ட குண்டு அவனது காலைப் பதம் பார்த்தது இன்னும் நினைவில் நின்று நிழலாடியது.

சற்றுத் தூரத்தில் ஆர்தர் வெல்லெஸ்லியின் துணைத் தளபதியான ஜெனரல் ஹாரிஸ் நின்று கொண்டிருந்தான். அவனது கையில் பளபளக்கும் வாள் ஒன்று மின்னிக் கொண்டு இருந்தது. பலமுறை திப்பு சுல்தானுடன் போரிட்டுத் தோற்றோடியதால்



மைசூர்ப் புலியின் மீது உள்ள வெறுப்பு அவனது முகத்தில் பிரதி பலித்தது.

பல மணி நேரம் முற்றுகையிட்டும் பீரங்கித் தாக்குதல் நடத்தியும் கம்பீர மாக நின்ற அந்தக் கோட்டைச் சுவர் கள் அவர்களைக் கேலி செய்வது போலத் தோற்றமளித்தன. இது கோட்டையின் வெளியே நின்றிருந்த கம்பெனியாரின் நிலை.

கோட்டையின் உள்ளே —

உச்சியில் மைசூர் மன்னன் திப்பு சுல்தானின் புலிச் சின்னம் பொறித்த கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது! இருபது ஆண்டு கள் ஆடாக வாழ்வதை விட இரண்டு நாட்கள் புலியாய் வாழ்வது மேல் என்ற சுல்தானின் கொள்கையை அந்தக் கொடியின் ஒவ்வோர் அசை விலும் காண முடிந்தது.

முந்தைய போர்களில் அழிந்து விட்ட படையின் எஞ்சியிருந்த சிறு அணியொன்று, அங்கு எதிர்ப்படும் வெள்ளையரைக் கொன்று குவிக்க ஆயுதங்களுடன் தயார் நிலையில் நின்றிருந்தது. அந்தச் சிறு படையின் முன்னால் சுல்தான் புரவி ஒன்றில் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவரது முறுக்கு மீசை சிலிர்த்துக் கொண்டு நின்றது. அவரது கண்கள் நெருப்புப் பிழம்பாய்க் காட்சியளித்தன.

மின்னலெனப் பாய்ந்து பல போர் களில் வெற்றி ஈட்டித் தந்த புரவி வாழ்ந்தால் திப்புவுடன் வாழ்வது.



மடிந்தாலும் திப்புவுடன் மடிவது என்பது போல் கம்பீரமாய் நின்றிருந்தது.

திப்புவின் இடையில் தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வாளும், அதன் கைப்பிடியில் பதித்திருந்த விலை உயர்ந்த வைரங்களும் பல போர்களில் பங்கு பெற்றதற்குச் சான்று பகர்ந்தன.

திப்புவின் வீரக் கரங்களில் ஐரோப்பியப் பாணியில் உருவாக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்று வீற்றிருந்தது. இதுதானே ஆர்தர் வெல்லெஸ்லியின் வலது காலைப் பதம் பார்த்தது! மூன்றாம் மைசூர் மராத்தியப் போரில் பல சிங்க நிகர் மராத்தியர்களின் உயிரைக் குடித்தது.

திப்பு சுல்தானின் உடையின் மேல் புலியின் காவி நிற வரிக் கோடுகள் தீற்றப்பட்டிருந்தன.

வலது புறத்தில் திப்புவின் மெய்க்காவலரும் தளபதியுமான இராஜா கான். இடப்புறத்தில் திப்புவின் அருமை மைந்தர் பத்தே ஹைதர் நின்றிருந்தனர்.

இது கோட்டையின் உள் நிலை. கரகோஷமாக மோதிச் சிதறிய பீரங்கிக் குண்டுகளின் வெடி! மருந்து நெடியும் புகையும் வானத்தை வளைக்க முயன்று கொண்டிருந்தன.

பலமுறை தாக்குதல்களைத் தாங்கி



ஓனர்: அண்ணே, ஒரு தாத்தாவுக்குக் குடிக்க வெந்நீர் வேணுமாம். அடுப்பில் வெந்நீர் இல்லே.

சர்வர்: ரசத்தை ஒரு டம்ளரில் ஊத்தி, தாத்தாவிடம் கொடு. ஒண்ணும் சொல்ல மாட்டார்.

— க. இராமலிங்கம்.


நின்ற கோட்டைச் சுவரின் முன் பகுதியில் லேசான பிளவு ஒன்று ஏற்படத் தொடங்கியது.

சற்றுத் தூரத்தில் நின்று இதைக் கண்ணுற்ற ஜெனரல் ஹாரிஸ், அந்தப் பிளவின் மீது அனைத்து பீரங்கி முனைகளையும் குவித்துக் குறி வைத்துச் சுடுமாறு கட்டளையிட்டான்.

தொடர்ந்த இடியோசையாய் வெடியோசை! கோட்டைச் சுவர்களில் இருந்த பெருங்கற்கள் விழத் தொடங்கின. சில கற்கள் தூள் தூளாகிக் கோட்டையின் உட்பகுதியில் சரியத் தொடங்கின.

சில மணி நேரங்களில் கோட்டைச் சுவரின் நடுவில் பெரும் பிளவு ஒன்று ஏற்பட்டது. பீரங்கித் தாக்கு தலை நிறுத்திவிட்டு, உருவிய பளபளக்கும் வாட்களுடனும் நீண்ட பைனட்கத்தி பொருத்திய துப்பாக்கிகளுடனும் பிளவின் வழியாக நுழைந்தனர் ஆங்கிலேய சிப்பாய்கள்.

அவர்கள் நெஞ்சங்களில் மைசூர் அரண்மனையினுள் உள்ள விலை உயர்ந்த பொருட்கள் தோன்றி மறைந்தன. வெள்ளம் போல் ஆர்ப்பரித்துக் கொண்டு ஆங்கிலேயப் படை முன்னேறியது. எந்தவித எதிர்ப்பும் இல்லை.



வெள்ளம் போல் வரும் வெள்ளையரைக் கொன்றுகுவிக்கத் தயார் நிலையில் நின்றிருந்தது மைசூர்ப் படை. கண்கள் தீப் பிழம்பாய் ஜிவுஜிவு வெனச் சிவந்து கொண்டிருந்தன சுல்தானுக்கு.

வீரப்படை நின்றதைக் கண்ட வெள்ளை வீரர்கள் ஒரு கணம் தயங்கினர். ஆனால் மறு வினாடி, ''ஃபயர்!'' என்று அடித் தொண்டையில் கட்டளையிட்டான் ஜெனரல் ஹாரிஸ்.

இரு படைகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. வெள்ளம் போன்ற ஆங்கிலப் படையினை மைசூரின் சிறு படை தடுத்து நிறுத்தியது. அந்தச் சிறு படையின் போர் முழக்கம் கோட்டையெங்கும் எதிரொலித்தது.

''தீன் தீன்... அல்லாஹ் யார்! தீன் தீன்... அல்லாஹ் யார்! தீன் தீன்... அல்லாஹ் யார்!'' என்று மூன்று முறை கூவியபோது திப்பு சுல்தானும் அதில் பங்கேற்றார்.

இரண்டு நிமிடத்தில் எட்டுச் சிப்பாய்களைச் சுட்டு வீழ்த்தினார் திப்பு. தலைகள் உருண்டன. வாட்கள் மோதிப் பளீரென மின்னின.

தளபதி இராஜாகான் திப்புவைப் பார்த்துக் கூறினார். ''சுல்தான்! தாக்குதல் பலமாயிருக்கிறது. தப்பிச் செல்லுங்கள்.''

ஆனால் திப்பு போர்க்களத்தை விட்டுப் போக மறுத்தார்.

''மறுபடியும் எங்கள் மேல் ஆணையிடுகிறேன்,'' என்று கூவினார் இராஜாகான்.

''முடியாது. என் பிணத்தின் மீது நடந்து உள்ளே செல்லட்டும்,'' என்று சொன்னார் திப்பு. தாக்குதலினால் காயம் அடைந்து மூர்ச்சையானார் இராஜாகான்.

மறு வினாடி, திப்புவின் நெஞ்சில் இரண்டு குண்டுகளும் அதனையடுத்து ஒரு குண்டும் பதிந்தன.


தள்ளாடியவாறு எழுந்து சென்றவர் குளம் ஒன்றின் அருகில் விழுந்தார். அவரின் அருகில் இராஜாகான் கிடந்தார்.

அங்கே வந்த ஆங்கிலேய சிப்பாய் ஒருவன் வைரமிழைத்த வாளை எடுக்கக் குனிந்த போது, அவனது கணுக்கால் திப்புவின் வைர வாளின் தாக்குதலால் துண்டானது!

அதனால் கோபம் கொண்ட சிப்பாய் மரணத்துடன் போராடிய திப்புவின் மண்டைக்குக் குறி வைத்துச் சுட்டான். அவரின் இறுதி மூச்சு நின்றது.

திப்பு இறந்ததை அறிந்த ஜெனரல் ஹாரிஸ், ''இந்துஸ்தானத்தையே வென்று விட்டோம்!'' என்று கூக்குரலிட்டான்.

அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதனைப் போல கதிரவன் மேற்குத் திசையில் உள்ள மலையில் மறைந்தான்.



இதோ ஒரு காலண்டர் பையன்



வேறு வீடுகளுக்குச் சென்றால் குழந்தைகள் என்ன செய்யும்? மேசை மீது உள்ள பேனா ஸ்டாண்டை எடுக்கும்; சில கடிகாரத்தை இழுக்கும்; மற்றும் சில திரைச் சீலைகளை ஒரு வழி பண்ணும்.

ஆனால், இந்த ஆர். விஜய பாஸ்கர் என்ற ஏழு வயதுச் சிறுவன் புதிதாக ஒரு வீட்டில் நுழைந்தால் என்ன செய்கிறான்?

பரபரப்புடன் அவன் கண்கள் காலண்டர்களைப் பார்க்கின்றன. ஆழ்ந்த பார்வை. சில நிமிஷங்கள் தான். அந்தக் காலண்டர் எண்கள், கிழமைகள் மூளைக்குள் பதிந்து விடுகின்றன.

ஆச்சரியம் அல்ல; உண்மை.

குரோம்பேட்டையில், புருஷோத்தம் நகரில் ஐந்தாம் மெயின் ரோடில், 78 ஆம் எண் வீட்டில் இந்தச் சிறுவன் இருப்பதைத் தெரிந்து கொண்டு, அவனைக் காணச் சென்றோம்.

சுமார் 4 அடி உயரம். குறுகுறுக்கும் கண்கள். படிய வாரிய தலை. அமைதியான பேச்சு.

இவனிடம் உள்ள அதிசயத் திறமையைச் சோதித்தால் என்ன?

பக்கத்து வீடுகளிலிருந்து எஸ். அருண், என். வித்யா, கே. மகேஷ்,



என். விக்ரம் என்ற சிறுவர்களைச் சேர்த்தோம்.

விஜயபாஸ்கரைக் கூடை நாற்காலியில் அமர வைத்தோம். அருகே மூன்று நாற்காலிகளில் நான்குபேர்.

கேள்விக் கணைகள் பறந்தன:

1988 ல், மார்ச் 29 ஆம் தேதி என்ன கிழமை?

செவ்வாய்.

1986 ல், பிப்ரவரி 29 ஆம் தேதி என்ன கிழமை?

பிப்ரவரி 29 ஆம் தேதி கிடையாது!

1983 ல் மே மாதத்தில் வரும் வெள்ளிக் கிழமைகளின் தேதிகள் என்ன?

6, 13, 20, 27.

— பளிச் பளிச் பதில்கள் விஜயபாஸ்கர் தந்தான்.

அசத்திவிட்டான். பிறகு விசாரித்ததில் கிடைத்த தகவல்:

1980 முதல் 1990 வரை உள்ள தேதிகள், கிழமைகள் எதையும் சொல்கிறான் இவன்.

ஏதாவது புது காலண்டர் கொடுத்தாலும் சில நிமிடங்கள் உற்றுப் பார்த்து விட்டு, ''நான் தயார் கேள்விக்கு'' என்று அசத்துகிறான்.

பெற்றோர்: ஜி.வி. ராஜ்குமார், ஆர். சசிகலா. அவர்களிடமிருந்து கிடைத்த விவரம்:

ஒரு டிசம்பர் மாதம் (1988) தாயார் காலண்டரைத் தேடி, கிழமை ஒன்றைப் பார்த்திருக்கிறார். அப்போது அருகே வந்த மகன், தேதியைக் கேட்டு, கிழமையைப் பட்டென்று சொன்னான். சரி, ஏதோ தற்செயல் என்று விட்டுவிட்டார்கள். பிறகு சோதிப்பதற்காக, பல நாட்கள், வருஷங்களைக் கேட்டபோதுதான், மகனின் அசாத்தியத் திறமை புலப்பட்டுள்ளது. மீண்டும் பல பரிசோதனைகள் — நண்பர்கள், உறவினர்கள் செய்து பார்த்தார்கள். எல்லாம் கரெக்ட். பள்ளியிலும் உற்சாகப் படுத்துகிறார்கள்.

என்ன ஆசை இந்தப்பெற்றோருக்கு?

''விஜயபாஸ்கரின் திறமை நன்கு பயன்படும் வகையில் இவனை உருவாக்க வேண்டும்!''

பேட்டி: முத்துலட்சுமி

படங்கள்: ஜி. வேதா

மாஜிக்!



இந்த மாஜிக் காப்ஸ்யூலைச் செய்து காட்ட எந்த மந்திரமும் தேவையில்லை.

இதற்கு நீங்கள் சேகரிக்க வேண்டியவை இவைதான்:

1. வீணாக உபயோகப்படுத்தாமல் வைத்திருக்கும் காப்ஸ்யூல்கள்.

2. சிறிய 'பால் பேரிங்' (Ball Bearing) இரும்பு குண்டுகள்.

காப்ஸ்யூலைக் கவனித்தால் கீழ்ப் பகுதியின் மேல், மேற்பகுதி மூடப்பட்டு இருப்பது தெரியும். காப்ஸ்யூலை அதிகமாக அழுத்திப் பிடிக்காமல் மேற்பகுதியை மெள்ளத் திருகினால் இரு மூடிகளும் தனித் தனியாகக் கழன்று வந்து விடும். பிறகு உள்ளே இருக்கும் மருந்துப் பொடியை மெள்ளத் தட்டி வெளியே கொட்டிவிட்டு, சிறிய பால் பேரிங் குண்டை அதனுள்ளே போட்டு மூடிவிடவும். இதைச் செய்யும் போது காலியாக இருக்கும் காப்ஸ்யூல் கை அழுத்தத்தினால் நசுங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இப்பொழுது காப்ஸ்யூலுக்கு உயிர் கொடுத்தாகி விட்டது. பிறகு ஒரு கார்டு கனமுள்ள ஓர் அடி நீளமுள்ள அட்டையைப் படத்தில் காட்டியபடி நீளவாக்கில் மடித்துப் பிரித்து வைத்துக் கொண்டு, அந்த மடிப்பின் நடுவில் நுனிப்பாகத்தில் அந்தக் காப்ஸ்யூலை வைத்துச் சிறிது சாய்த்துப் பிடித்தால் காப்ஸ்யூல் குதித்துக் குதித்து எழுந்து விடுவதைக் காணலாம்! பார்ப்பவர்கள் பிரமிப்பார்கள். காப்ஸ்யூல் உள்ளே 'பால் பேரிங்' குண்டு இருப்பது தெரியாதவர்களுக்கு இது ஒரு புதிராகவே தோன்றும்.

— கே. எஸ். ராமமூர்த்தி.

"ச்சே... போ சனியனே," என்று பூனையை விரட்டிக் கொண்டிருந்தாள் மாலதி.

"ஏண்டீ... பூனையை அடிக்கிறே? அதுவும் நம்ம மாதிரி ஒரு ஜீவன் தானேடீ.. அதை அடிச்சா ஒனக்குத் தான் பாவம்," என்று சமையல் கட்டிலிருந்து மாலதியின் அம்மா சத்தமிட்டாள்.

"போம்மா... இந்தப் பூனை என் பைகளையெல்லாம் தள்ளி விட்டிருச்சி. இதோட இன்னும் கொஞ்சி விளையாட சொல்றியா? ச்சீ... போ," என்று பூனையைத் துரத்தி விட்டாள்.

பூனையும் ஒரே தாவில் வெளியே ஓடி விட்டது.

எலும்பும் தோலுமாக இருந்த பூனை பாலும், தயிர் சோறும் சாப்பிட்டுக் கொழு கொழுவென்று ஆகி சில நேரங்களில் மாலதியையும், அவளது தம்பியையுமே முறைத்து வந்தது.

ஏழாம் வகுப்பு இறுதித் தேர்வு முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் மாலதி.

"ஏண்டீ.. மதியம் சாப்பிட வரலியா?"

"அம்மா, இந்தப் பூனையை எனக்குப் பிடிக்கலே. இதைக் கொண்டு போய்த் தெருவில் விட்டிடு. பூனை சீனையெல்லாம் நமக்கெதுக்கும்மா? தெருவுல விட்டாத்தான் நான் மதியம் சாப்பிட வருவேன்," என அவள்

உயிர்களிடத்து அன்பு வேணும்!

மாலதிக்கு இப்போது கோடை விடுமுறை. அன்று ஞாயிற்றுக் கிழமை யாதலால் காலையில் எழுந்ததும் டீவி முன் உட்கார்ந்து கொண்டு நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கறுப்பு நிறக் கோடுகள் முதுகில் தீற்றப்பட்டிருந்த பூனையின் சாம்பல் நிறத் தோலையும், மஞ்சள் நிறக் கண்களையும் பார்க்கும்போதே அவளுக்குப் பிடிப்பதில்லை. அத்துடன் இப்போது அவள் மீது ஓடியாட ஆரம்பித்து விட்டது. அதனால் அம்மாவிடம் புகார் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

மாலதியின் தம்பி பாபு தனக்குப் பூனை வேண்டும் என்று அடம்பிடித்ததால், அவளுடைய அப்பா தெருவில் வாழ்ந்த பூனையொன்றை எடுத்து வந்து தந்தார். பாபுவும் அதை ஆசையாய் வளர்த்து வந்தான்.

அடம் பிடித்துக் கொண்டிருந்தாள்.

"அப்ப நீ என்னக்கி மத்தவங்களோட நல்லாப் பழகுறியோ அன்னிக்கித்தான் ஒனக்குச் சாப்பாடு," என்றவாறே அம்மா உள்ளே சென்று விட்டாள்.

மாலதி சலித்துப் போனவளாய் ஒரு சிறுவர் பத்திரிகையை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

சிறுகதைகளைப் படித்த வண்ணமாய் ரசித்துக் கொண்டிருந்தாள்.

நடுப்பக்கத்தில் ஒரு வண்ணப் படம் இருந்தது. 'குழந்தைகளே! உங்களுக்காகக் கோடை விடுமுறைப் போட்டி. உங்களுக்குப் பிடித்த ஏதாவது மிருகம் ஒன்றினை ஒரு பக்கத்திற்

கோவை கலா தீபன்

குப் படமாக வரைந்து அனுப்புங்கள். தகுந்த பரிசு உண்டு...' முடிவு தேதி, மற்ற விவரங்களுடன் ஓர் அறிவிப்புக் கொடுத்திருந்தார் ஆசிரியர்.

இதைக் கண்டதும் மாலதி ஒரு குதூகலத்துடன் எழுந்து உட்கார்ந்தாள்.

மாலையில் வீட்டுக்கு வந்த தந்தையிடம், ''அப்பா, எனக்கு ஒரு டிராயிங் பேப்பர் காலையில் வாங்கிக் கொடுங்க. நான் ஒரு படம் வரைஞ்சு அனுப்பப் போறேன். எப்படியாவது பரிசு வாங்கிடுவேன்,'' என்று மகிழ்ச்சியுடன், நம்பிக்கையுடன் சொன்னாள்.

அத்துடன் அந்த அறிவிப்பை மற்ற தோழியரிடம் காட்டி, ''நீங்களும் படம் போட்டு அனுப்புங்கடி. நம்மிலே யார் பரிசு வாங்கறமோ பார்ப்போம். அப்படி யார் பரிசு வாங்கறாளோ அவள்தான் இனி லீடர்! என்ன?'' என்று சவால் விடுவது போல் சொன்னாள்.

''நமக்கு யாருக்கும் பரிசு கிடைக்கலேன்னா?'' என்றாள் உமா.

''ச்சீ போடி. அபசகுனம் மாதிரி பேசிக்கிட்டு, வரைஞ்சு பாத்துடுவோமே!'' என்று மற்ற வாட்டர்



கலர், பிரஷ் எல்லாம் வாங்கக் கடைக்குப் புறப்பட்டாள்.

இந்தப்போட்டியில்வெற்றி பெற்று விட வேண்டும் என ஒவ்வொரு மாணவியும் உற்சாகத்துடன் செயல் பட்டனர்.

''நான் நாய்ப் படம் வரையப் போறேன்..''

''நான் குதிரை வரையப் போறேன்.''

''நான் ஒட்டகம் வரையப் போறேன்...''


— இப்படி மாணவிகள் போட்டி போட்டுக் கொண்டனர். இதனுள் பூனையின் படம் விடுபடவே, அதை வரைய மாலதி திட்டமிட்டாள்.

அமைதியான ஓர் அறையில் தன் பேப்பரையும், மையையும் வைத்து, பூனையின் படத்தை வரைய ஆரம்பித்தாள். உடம்பு, முகம், வாய், காதுகள், கண்கள் இப்படியாக வரைந்தவள், வால் வந்தபோது தடு மாறினாள். வரைய முடியவில்லை. பென்சிலால் எத்தனை முறை வரைந் தாலும் குட்டையாகவோ அல்லது நீளமாகவோ போய் விடுகிறது.

பென்சிலை எடுத்துக் கொண்டு வாலைப் பற்றி யோசிக்க வெளியே வந்தாள். அப்போது உள்ளே நுழைந்த பூனை இந்தியன் மையை கொட்டி விடவே அதன் வால் மையில் பட்டு விட்டது. அத்தோடு மேஜையில் ஏறி உட்கார்ந்தது. அதே வேளையில் உள்ளே வந்த மாலதி பூனையைத் திட்டிக் கொண்டே வந் தாள்.

''ஐயோ... என் படமே போச்சே. இங்கே யாரும் கேட்க மாட்டேங் கறாங்களே... இந்தப் பூனையை அடிச்சி விரட்டணும்,'' என்றபடியே பேப்பரைப் பார்த்தாள்.

பூனை மேஜையின் மீது உட்கார்ந்த



தால், அதன் வாலில் பட்ட மை பேப்பரில் பட்டு விட்டது. மாலதியின் அதிர்ஷ்டம், அது படத்தில் வாலாகவே அமைந்து விட்டது.

மாலதி மகிழ்ந்தவாறே அப்பாவிடம் சென்றாள். நடந்ததைக் கூறினாள்.

"ஆ...ரொம்ப அழகா இருக்கும்மா. இந்த வாலுக்காகவே உனக்கு முதல் பரிசு கிடைக்கப் போவுது பாரு..."

அப்பா தன் ஆறுதலுக்காகத்தான் அப்படிச் சொல்கிறார் என்று அவளுக்குத் தோன்றியது. பத்திரிகைக்குப் போஸ்ட் பண்ணச் சொல்லி அப்பாவிடம் கொடுத்தாள்.

ஒவ்வொரு நாளும் கடைக்குச் சென்று அம் மாத இதழ் வந்து விட்டதா என்று கேட்டு விட்டு வந்தால் தான் அன்று அவளால் ஆறுதலாய்த் தூங்க முடியும்.

ஒரு மாதம் கழித்து முடிவுகள் வந்தன. மாலதிக்கு முதற் பரிசு கிடைத்திருந்தது! தெருவில் உள்ள ஒவ்வொரு வீடாக சிரித்த முகத்துடன் சென்று காண்பித்தாள். மற்றச் சிறுமிகளுக்கு இனி இவள்தான் தலைவி! இதற்கெல்லாம் யார் காரணம்? யோசித்தாள்.

ஆம். அந்தப் பூனையின் வால் தான்.

வேகமாக வீட்டிற்கு ஓடிச் சென்றாள். அப்படியே பூனையை அள்ளி எடுத்து முத்தமிட்டாள்.

அப்போது ஏழாம் வகுப்பில் படித்த வாசகம் நினைவுக்கு வந்தது.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்—
அன்பு
உண்மையென்று தாமறிதல்
வேணும்...'

பூனையைத் தாலாட்டுவது போல் வாய் விட்டே பாடினாள் மாலதி.

உங்கள் நூலகம்

1. நாடகச் சோலை — மா. அய்யாசாமி.

நீங்கள் உயர்நிலைப் பள்ளி மாணவரா? உங்கள் பள்ளி விழாக்களில் ஏதேனும் நாடகம் போடலாம், நல்ல நாடகம் கிடைத்தால் என்று தேடிக் கொண்டிருக்கிறீர்களா?

பள்ளியில் நடிக்கப்பட்டு, அப்புறம் வானொலியிலும் இடம் பெற்ற ஒன்பது நாடகங்களின் தொகுப்பு இது. சரித்திர, புராண நாடகங்களைத் தவிர மற்றச் சமூக நாடகங்கள் பேச்சுத் தமிழிலேயே அமைந்திருக்கின்றன. அரை மணிப் போதுக்குள் ஒவ்வொரு நாடகமும் அநேகமாய் முடிந்து விடும். கெடுதல் செய்யாதவை.

விலை: ரூ. 12 — பக்கம்: 140.

பதிப்பகம்: மங்கை இல்லம், 75, என்.ஜி.ஓ. காலனி, திருவள்ளூர்—602001, செங்கற்பட்டு மாவட்டம்.

2. மழலை மொழி — கவிஞர் தமிழ்முடி

நெடுங்காலமாய்க் குழந்தைகளுக்காகப் பாடல் எழுதி வரும் கவிஞர் இவர். 'கவிஞர் தமிழ்முடி அவர்களின் பாட்டுகள் தேச சேவையாகும்,' என்று ராஜாஜி அவர்கள் பாராட்டியிருக்கிறார்.

இந்தப் புத்தகம் கவிஞரின் சமீபத்திய வெளியீடாம். எளிமையான சொற்களும் சந்த லயமும் நமது முத்தண்ணன் அமரர் அழ. வள்ளியப்பாவை நினைவூட்டுகின்றன. உதாரணம்:

நேரு	எங்கள்	நேரு!
நெஞ்சில்	நிறை	நேரு!
ஊரும்	உலகும்	போற்றும்
ஒப்பில்	லாத	நேரு!
காந்தி	யடிகள்	பேரு
காக்க	வந்த	நேரு!
காந்தி	வாரி	சானார்
கவிஞர்	பாடல்	ஆனார்.

விலை: ரூ. 6.50 — பக்: 64.

பதிப்பகம்: தமிழ்முடி நிலையம், எச். 10, கே. பொன்னம்பலம் சாலை, கே. கே. நகர், சென்னை — 600 078.

சிறுவர்களுக்கான தகுதியுள்ள நூல்களைப் பற்றிய அறிமுகம் இந்தப் பகுதியில் இடம் பெறும். அறிமுகம் பெற விரும்புவோர் இரண்டு நூல்கள் அனுப்ப வேண்டும். தபால் மூலமே அனுப்பு வேண்டும். நேரில் தொடர்பு கொள்ள இயலாமைக்கு வருந்துகிறோம்.

கவனிக்க: இந்த ஆண்டு (1989) வெளிவந்த முதல் பதிப்புக்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

— ஆ-ர்.

உடல் தடையல்ல!



பாலகுமாரனுக்கு ஐந்து வயதில் பாரிச வாயு தாக்கியது. முகம் விகாரமாகிச் சரியாகப் பேச வராமல் மோசமாகிப் போனான். சக வயதுப் பிள்ளைகளுடன் கலந்து விளையாட முடியவில்லை. அத்தனை பேருக்கும் அவன் கேலிப் பொருளாகி விட்டான்.

தன் வாழ்க்கையில் இனி சந்தோஷத்துக்கே இடமில்லை என்கிற மாதிரி சோர்ந்து போய் அழுது புலம்பி உட்கார்ந்துவிட்ட மகனைப் பார்த்த தாய், உரிய நேரத்தில் சரியான மருத்துவச் சிகிச்சை அளிக்காதது தனது தவறுதானோ என்று மனம் உறுத்தியது. அதுவே அன்னையின் மனசுக்குள் ஓர் ஆவேசத்தை ஏற்படுத்தியது. 'இன்று கேலி செய்யும் இவர்கள் எல்லாம் என் மகனைப் போற்றிப் பாராட்டும்படி செய்யாவிட்டால் நான் இவனைப் பெற்ற தாய் இல்லை,' என்று உறுதி எடுத்து, பிள்ளைக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டினார். விளைவு?

செயின் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளியில் எஸ். எஸ். எல். சி. தேறிய பாலகுமாரன், நந்தனம் கல்லூரியில் பி. யு. சி. தேறி, பிரஸிடென்ஸி கல்லூரியில் பி. ஏ. முடித்து, சென்னை பல்கலைக் கழகத்தில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையில் எம். ஏ., எம். ஃபில்லில் முதல் வகுப்பில் தேறினார். இத்தோடு நிற்கவில்லை. இந்தச் சாதனையை முடித்து, இப்போது முப்பத்திரண்டாவது வயதில் பி. எச்டி.க்காக ஆய்வு நடத்திக் கொண்டு வருகிறார். ஆய்வது: பண்டைச் சிலைகளில் காணும் தமிழ்நாட்டு இசைக் கருவிகள் பற்றி. புதைபொருள் ஆராய்ச்சித் தலைவர் டாக்டர் கே. வி. ராமன் இதற்குத் துணை புரிகிறார்.


வெறும் ஆராய்ச்சியுடன் நிற்கவில்லை. பேரி யாழ், மகர யாழ், செங்கோட்டு யாழ், சகோச யாழ், மச்ச யாழ் போன்ற சங்க கால இசைக் கருவிகள் முதல் பல்லவ, பரிவர்தினி, சோழர் காலப் பஞ்சமுக வாத்தியம், ருத்ர வீணை, சிதார், தப்ளா, மௌத் ஆர்கன், கம்ப்யூட்டரைஸ்டு எலெக்ட்ரானிக் போர்டு வரை அத்தனை வாத்தியங்களையும் கையாளக் கற்றிருக்கிறார்.

தன் தாயின் ஊக்கமும் உற்சாகமும் இல்லாவிட்டால் தன்னால் இந்த அளவுக்கு முன்னேறியிருக்க முடியாது என்று நன்றியுடன் சொல்கிறார் பாலகுமாரன்.

உடல் ஊனமுற்ற நிலையில் இப்படியெல்லாம் முன்னேறிய பாலகுமாரன் உங்களுக்கெல்லாம் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக ஒளி காட்டவில்லையா?

பேட்டி: ஆர். வி. எஸ். கீதா.

கவலை வேண்டாம் குழந்தைகளே!



ஒருநாள் நேரு சைக்கிளிலே
ஊரில் எங்கோ சென்று வந்தார்.

வருத்தத் தோடே சிலசிறுவர்
வழியில் நிற்கக் கண்டு விட்டார்!

''காரணம் யாதோ?'' எனநேரு
கேட்டிட ஒருவன் மரத்தடியில்


இருந்த பொந்து தனைக் காட்டி
இதனுள் பந்து போச்சுது, என்றான்!

கொஞ்சம் நேரு சிந்தித்தார்;
''கவலை வேண்டாம் குழந்தைகளே!


தண்ணீர் வேண்டும் வாளியிலே,
தருவேன் பந்து உமக்கு.'' என்றார்!

ஒருவன் ஓடி நீர்கொணர்ந்தான்!
ஊற்றினார் பொந்தில்; மேல்மிதந்த

பந்தை நேரு எடுத்திட்டார்!
பாலர் மகிழக் கொடுத்திட்டார்!


அரிச்சந்திரன் கோசல நாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்தான்...
முனிவர்களே! உங்கள் தீர்த்த யாத்திரையில் கண்ட அதிசயங்களைச் சொல்லுங்கள்....
அரிச்சந்திரன்
கதை: ஆனந்தி
படம்: வினு
கன்னோசி நாட்டின் அரசன் மதிதயனுக்குச் சந்திரமதி என்று ஒரு பெண்... பேரழகி. கோசலத்தின் அரசியாகத் தகுந்தவள்...
அரிச்சந்திரனின் மந்திரி...
பெரியவர்களே! நீங்களே அந்த இளவரசியை நமது அரசருக்கு மணம் பேசி முடியுங்கள்...
முனிவர்கள் கன்னோசி சென்று மதிதயனிடம் பேச...
எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் சந்திரமதி தன் கணவனைத் தானேதான் தேர்ந்தெடுக்க வேண்டும்!
மதிதயன் சந்திரமதியின் சுயம் வரத்துக்கு ஏற்பாடு செய்தான்...
அமைச்சரே! எல்லா தேசத்து அரசர்களுக்கும் தூது அனுப்புங்கள்...


சுயம்வர மண்டபத்தில் குறித்த நந்நாளில் அரசர்கள் வீற்றிருக்க, சந்திரமதி தோழியுடன் வந்து...!
இவர் காம்போஜ மன்னர்...
இவர் காஷ்மீர அரசர்...
அரிச்சந்திரனை நெருங்கினாள் சந்திரமதி....
இவர் அயோத்தியாதிபதி அரிச்சந்திரன்....
அரிச்சந்திரன் பதறி எழுந்து...
அரசே! தங்கள் மகள் கழுத்தில் ஏற்கெனவே தாலி இருக்கிறதே! எப்படி சுயம்வரம் நடத்தத் துணிந்தீர்கள்?
மதிதயன் மகிழ்ச்சியோடு நெருங்கி வந்து....
சந்திரமதி சிவபெருமான் அருளால் பிறந்தவள். 'இந்த மங்கல நாண் யார் கண்களுக்குத் தென்படுகிறதோ, அவரே இவளுடைய கணவர்' என்று வரம் தந்திருக்கிறார்...!
சந்திரமதி அரிச்சந்திரனுக்கு மாலையிட்டாள்...
அப்படியானால் நான் பாக்கியசாலிதான்!


சந்திரமதியும் அரிச் சந்திரனும் திருமணத்துக்குப் பிறகு கோசலம் திரும்பி சந்தோஷமாக வாழ்ந்தனர்.
சில ஆண்டுகள்
அவர்களுக்கு ஓர்
குழந்தை பிறந்தது...
லோகிதாக்ஷன் என்று பெயர் சூட்டுவோம்..
இளவரசனைத் தொட்டிலிட்ட தினம், எல்லோருக்கும் பரிசுகள் வழங்க வேண்டும்...
லோகிதாக்ஷன் அரசகுல வித்தைகளைக் கற்றுத் தேர்ந்தான்...
நன்றாகப் படித்து அறிவாளியாக விளங்கினான்...
தேவலோகத்தில் ஒரு நாள் இந்திரன்...
வசிஷ்டரே! பூவுலகில் சத்தியம் தவறாத மனிதன் இருக்கிறானா?
ஓ! அரிச்சந்திரன் இருக்கிறானே!



விசுவாமித்திரருக்கு எப்போதுமே வசிஷ்டரைப் பிடிக்காது... எனவே...
இதை நான் மறுக்கிறேன்! மனிதனாகப் பிறந்தவன் பொய் சொல்லாமல் இருக்கவே மாட்டான்!
வசிஷ்டருக்கும் கோபம் வந்தது...
அரிச்சந்திரன் ஒரே ஒரு பொய் சொன்னாலும் நான் தவம் செய்வதையே விட்டு விடுகிறேன்...!
விசுவாமித்திரரும் சபதம் செய்தார்...
அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைப்பேன்! முடியாமல் போனால் என் தவத்தின் சக்தியை அவனுக்கே கொடுத்து விடுகிறேன்!
விசுவாமித்திரர் அயோத்தியை அடைந்து...
அரிச்சந்திரா! ஒரு யாகம் செய்ய உன்னிடம் பொருளுதவி நாடி வந்தேன்...
எவ்வளவு கேட்டாலும் தருவேன்!
ஒருவன் யானை மீது அம்பாரியில் நின்று கொண்டு, கவண்கல்லை ஆகாயத்தில் அடித்தால் அது எவ்வளவு உயரம் போகுமோ, அந்த உயரத்துக்குப் பொற்காசுக் குவியல் தேவை.....


அரிச்சந்திரன், தனது மந்திரியை அழைத்து...
சத்தியகீர்த்தி! உடனே யானையையும் கவண் எறியக் கூடிய ஒரு வீரனையும் அழைத்து வரச் செய்யுங்கள்!
விசுவாமித்திரர் தந்திரமாக...
அரசனே! நீங்கள் கொடுத்ததே இப்போது போதும். யாகம் தொடங்கும் போது வந்து பொற்காசுகளைப் பெற்றுக்கொள்கிறேன்!
விசுவாமித்திரர் காட்டுக்குச் சென்று விலங்குகளை அழைத்து...
அயோத்தியைச் சூழ்ந்துள்ள நாட்டில் பயிர்களை அழித்து, ஆடுமாடுகளைக் கொன்று மக்களுக்குத் துன்பம் கொடுங்கள்!
கோசலநாட்டின் மீது காட்டு மிருகங்கள் படையெடுத்தன...
ஆ!
ஐயோ!
கோசல மக்கள் பயந்து அயோத்திக்கு ஓடி...
அரசே! யானைகள் எங்கள் வயல்களை அழிக்கின்றன...
புலிகள் பசுக்களை அடித்து இழுத்துப் போகின்றன...


அரிச்சந்திரன் அபய மளித்தான் . . .
வனவிலங்குகளை வேட்டையாடி விரட்டுவேன்! பயிர்கள் அழிந்ததால் இந்த ஆண்டு யாதும் வரி செலுத்த வேண்டாம்!
மன்னர் வாழ்க!
அரசரும் பிரதானிகளும் வேட்டையாடினர்...
மிருகங்கள் விசுவாமித்திரரிடம் திரும்பிச் சென்று கண்ணீர் விட்டன.
கபடமில்லா மிருகங்களை வதைக்கும் அரிச்சந்திரனுக்குப் பாடம் கற்பிப்பேன்!
விசுவாமித்திரர் இரண்டு பெண்களைப் படைத்தார். . .
நீங்கள் இருவரும் போய், அரிச்சந்திரனை மகிழ்வித்து அவனுடைய வெண் கொற்றக் குடையைக் கேளுங்கள்!
வேட்டையாட வந்திருந்த மன்னனைப் பாசறையில் சந்தித்து, அப் பெண்கள் நடனமாடி மகிழ்வித்தனர்.
ஆஹா!


அரிச்சந்திரன் தான் அணிந்திருந்த முத்து மாலையைக் கழற்றிப்பரிசளித்தான்..
எங்களுக்கு இது வேண்டாம்; உங்களுடைய வெண் கொற்றக் குடையைக் கொடுங்கள்!
என்னது! சூரிய குலத்தரசர்களுடைய சந்திர வட்டக் குடையை எப்படி கொடுக்க முடியும்?
அப்படியானால் எங்கள் இருவரையும் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்!
சீச்சீ! என் கோபம் அதிக மாகுமுன் ஓடிப் போங்கள்!
அந்தப் பெண்கள் விசுவாமித்திரரிடம் திரும்பி வந்து...
எங்களை அரிச்சந்திரன் அவமானப்படுத்தித் துரத்தி விட்டான்!
ஆ! அவன் அழிவுகாலம் நெருங்கி விட்டது!
விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் கோபமாகச் சென்று...
நீயும் ஓர் அரசனா? என் காட்டில் இருந்த மிருகங்களையெல்லாம் அழித்தாய்! என் இரு பெண்களையும் விரட்டி அடித்தாய்....!


அரிச்சந்திரன் பணிவுடன்...
தங்களுடைய பெண்கள் என்று எனக்குத் தெரியாது... சாந்தமடையுங்கள்..
ஆ! இப்போது தெரிந்து விட்டதல்லவா? மணந்து கொள்!
மன்னிக்க வேண்டும். நான் ஏற்கெனவே திருமணமானவன். நீங்கள் வேறு எதைக் கேட்டாலும் தருகிறேன்...
நீ உன் நாட்டை எனக்குத் தத்தம் செய்து விட்டு, மனைவி, மகனுடன் வெளியேறி விட வேண்டும்!
அரிச்சந்திரன் சந்தோஷமாகத் தன் நாட்டை விஸ்வாமித்திரருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான்...
இனி, கோசல நாடு உங்களுடையது...


சத்தியகீர்த்தி உடன் வர, அரிச்சந்திரன் சகலத்தையும் துறந்து மனைவி, மகனுடன் காசிக்குக் கிளம்பினான்.
போய் வருகிறோம்...
அரிச்சந்திரனைப் பொய் சொல்ல வைக்க வேண்டுமே! அதனால் விசுவாமித்திரர்...
அது சரி, யாகத்துக்குப் பொருள் தருவதாகச் சொன்னாயே, இப்போது கொடு!
சுவாமி! அத்தனை பொன்னும் பொக்கிஷ சாலையில்தான் உள்ளன. எல்லாமே தங்களுடையது தானே...!
அதெப்படி! ராஜ்யத்தோடு சேர்த்து அவையெல்லா வற்றையும் எனக்கு ஏற்கெனவே தானம் செய்து விட்டாய்! இப்போது அவை என்னுடையவை...
... என்னுடைய பொருளையே எடுத்து எனக்குக் கொடுப்ப தாகச் சொல்கிறாயே!
மெய்தான்! எனக்கு நாற்பத்தெட்டு நாள் அவகாசம் கொடுங்கள். பொன் சேகரித்துத் தருகிறேன்!



விசுவாமித்திரர் ஒரு சீடனை அழைத்து...
நக்ஷத்திரேயா! அரிச்சந்திரனை எப்படியாவது ஒரு பொய் சொல்ல வைக்க வேண்டும்...
நான் பார்த்துக் கொள்கிறேன்...!
நட்சத்திரேயன் அரிச் சந்திரனுடன் சேர்ந்து கொண்டான்...
உன்னிடம் பொன்னை வாங்கிக் கொண்டுதான் திரும்ப வேண்டும் என்பது குருநாதர் உத்தரவு...
வழியில் பல கஷ்டங்களை அனுபவித்த பிறகு...
அதோ காசி க்ஷேத்திரம்!
அப்பா ரொம்பப் பசிக்கிறது...
ஒரு தர்ம சத்திரத்தில்...
அயோத்தியில் இந்திரனுக்குச் சமமாக ஆண்ட நீங்கள்... இப்படி...
சத்தியகீர்த்தி என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படி கலங்கலாமா? தைரியமாக இரு...!
நட்சத்திரேயன் ஆர்ப்பாட்டம் செய்தான்...
அது சரி, காசிக்கு வந்தாகி விட்டது... பொன்னைக் கொடு! நான் போக வேண்டும்!




அரிச்சந்திரன் கவலை...
நட்சத்திரேயனுக்கு எப்படி பொன் கொடுப்பேன்? எவ்வாறு அதைச் சம்பாதிப்பேன்?
அப்போது நட்சத்திரேயன் தந்திரமாக...
விசுவாமித்திரருக்கு நான் ஒன்றும் தர வேண்டியதில்லை என்று ஒரே ஒருவாய் நீ சொல்லிவிட்டால் போதும்; நம் எல்லோருடைய கஷ்டமும் தீர்ந்துவிடும்! உன் ராஜ்யமும் உனக்கே திரும்பக் கிடைக்கும்!
சத்தியம் தவறி நான் நாடாள விரும்பவில்லை, ஐயா! அதைவிடக் காட்டில் வாழ்வதே மேல்!...
அப்போது சந்திரமதி...
அரசே, கலங்காதீர்கள்! என்னையும் லோகிதாசனையும் அடிமைகளாக விற்று, பொன்னைக் கொடுத்து இவரை அனுப்புங்கள்!
ஐயோ! மதிதயன் மகளாகிய உன்னை விற்பதா? அதுவும் அடிமையாகவா?
யோசிக்காதீர்கள்! நீங்கள் சத்தியம் தவறாமல் இருக்க இதுதான் வழி!


அரிச்சந்திரன் வணிகர் தெருவில் சந்திரமதிக்கு விலை கூறினான்...
யானை மீது நின்று கவண் எறியும் உயரத்துக்குப் பொற்காசுக்குவியல் கொடுப்பாருக்கு இந்த உயர் குலப் பெண், அடிமை!
காலகண்டன் அந்த வீதி வழியாக வந்தான்...
நான் வாங்கிக் கொள்கிறேன்; அவளோடு நிற்கும் அந்தச் சிறுவனையும் சேர்த்துக் கொடுக்க வேண்டும்!
இருவரையும் விற்று வந்த பொற் காசு மூட்டைகளை நட்சத்தி ரேயனிடம் தந்தான் அரிச்சந்திரன்...
இதை வசூலிக்க நான் இத்தனை நாள் உன்னுடன் வெய்யிலிலும் மழையிலும் பசியும் பட்டினியு மாக அலைந்தேனே... அதற்காக எனக்குப் பத்தாயிரம் பொன்னாவது கொடு!
அரிச்சந்திரன், சத்திய கீர்த்தியை அழைத்து...
இவர் கேட்பதில் நியாயம் இருக்கிறது. என்னை அடிமையாக விற்று இவருக்குப் பொன் கொடுத்து விடு!
இதென்ன கொடுமை!
வேறு வழியின்றி அரிச்சந்திரனுக்கு விலை கூறினான் சத்திய கீர்த்தி...
திடகாத்திரமான, ஒழுக்கத்தில் சிறந்த வீரர்... பத்தாயிரம் பொன்!


அப்போது அங்கு வந்த சுடுகாட்டுத் தலையாரி வீரபாகு...
நான் வாங்கிக் கொள்கிறேன்!
மன்னனை விற்ற பணத்தை சத்தியகீர்த்தி நக்ஷத்திரேயனிடம் கொடுத்து...
இந்தாப்பா, கணக்குத் தீர்ந்தது! நானும் அயோத்தி புறப்படுகிறேன்.
கங்கைக் கரையில் சுடுகாட்டுக்கு அரிச்சந்திரனை அழைத்துப் போனான் வீரபாகு...
இங்கே எரியூட்டப்படும் பிணங்கள் வரும்போது ஓர் ஆடையும் ஒரு பணமும் அரிசியும் உறவினரிடம் வசூலிக்க வேண்டும். ஆடையும் பணமும் எனக்கு. அரிசி உன்னைச் சேர்ந்தது.
காலகண்டன் வீட்டில்...
வஞ்சனை இன்றி எல்லா வேலையும் செய்ய நான் தயங்கவில்லை. ஆனால் குழந்தைக்குமா இந்தக் கதி...?
தினமும் அதிகாலையில் லோகிதாஸன் மற்ற சிறுவர்களுடன் கிளம்பி...
அம்மா! சுள்ளி பொறுக்கப் போய் வருகிறேன்...
இருட்டுவதற்குள் வந்துவிடு கண்ணே!


காட்டில் தர்ப்பைவெட்டி, சுள்ளி பொறுக்கப் போன லோகிதாசனைப் பாம்பு கடித்து விட்டது...
ஐயோ! அம்மா!
மற்றச் சிறுவர்கள் ஓடி வந்து தகவல் கூற, சந்திரமதி காட்டுக்கு விரைந்தாள்...
கண்ணே! என்னைத் தனியே விட்டு விட்டுப் போய் விட்டாயே!
மகனைத் தோளில் சுமந்து கொண்டு சுடுகாட்டுக்கு வந்தாள் சந்திரமதி... இருள் கவியும் நேரம்... அங்கு அரிச்சந்திரன்...
யாரம்மா அது! பிணம் எரிக்க, ஒரு பணமும் ஒரு துணியும் அரிசியும் தர வேண்டும்!
ஐயா! நான் அடிமை... என்னிடம் ஏதுமில்லை...
ஐயோ, பாவம்! சரி, என் பங்குக்கான அரிசி வேண்டாம். என் எஜமானனுக்குரிய பணமும் துணியுமாவது கொடு!
... இல்லையென்றால் உன் கழுத்தில் பொற்தாலி இருக்கிறதே: அதைக் கொடுத்துவிட்டு எரியூட்டு!
ஆ! அரிச்சந்திரனைத் தவிர வேறு யார் கண்களுக்கும் என் மாங்கல்யம் தெரியாதே!



அடடா! நீ சந்திரமதியா? இது லோகிதாசனா? ஐயோ! இது என்ன கொடுமை!... நீயும் அடையாளமே தெரியாமல் தேய்ந்து விட்டாயே...!
சந்திரமதி! சத்தியவானாக இருப்பதில் எத்தனை துன்பம் நேர்ந்தாலும் தாங்கிக் கொள்ள வேண்டும். நீ போய் காலகண்டனிடம் ஒரு பணமும் ஓர் ஆடையும் கெஞ்சிக் கேட்டாவது பெற்று வா!
துன்பத்தைத் தாங்க முடியாத சந்திரமதிக்குச் சித்தம் கலங்கி விட்டது. வழியில் ஒரு சிறுவனின் உடலைப் பார்த்து...
ஐயோ! மகனே! போய் விட்டாயா!
அது காசி தேசத்து இளவரசன் உடல் என்பது சந்திரமதிக்குத் தெரியவில்லை. .. காவலர் வந்து....
ஐயோ! நான் என்ன செய்வேன்!
இளவரசரைக் கொன்று விட்டாயா!
அரசரிடம் இழுத்துப் போவோம்!
ராஜ சபையில் ஆத்திரமடைந்த காசி மன்னர்...
இளவரசர் இவள் மடியில்தான் கிடந்தார்... இவள்தான் கொன்றிருக்க வேண்டும்!
மரண தண்டனை விதிக்கிறேன்!


மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டியவன் அரிச்சந்திரன்!...
என் தெய்வம் தாங்களே... உங்கள் கையால் இந்த மரணத்தைப் பாக்கியம் என்று நினைக்கிறேன்...
அப்போது விசுவாமித்திரர் தோன்றி..
அரிச்சந்திரா! ஏன் இத்தனை கஷ்டம் அநுபவிக்கிறாய்? 'உங்களுக்கு நான் எதுவும் தரவில்லை' என்று சொல்! எல்லாமே உனக்குத் திரும்பக் கிடைத்து விடும்!
அரிச்சந்திரன் அந்த ஆசைக்குப் பலியாகாமல்...
தெய்வங்களே! நான் சத்தியமே உயிர் மூச்சாக வாழ்ந்தது உண்மையானால், சந்திரமதியைக் காப்பாற்றுங்கள்!
கொலைவாள் ஒரு மலர் மாலையாகச் சந்திரமதியின் கழுத்தில் விழுந்தது! விசுவாமித்திரர்...
அரிச்சந்திரா! நீ வென்றாய்! நான் தோற்றேன்!
இரு இளவரசர்களுமே உயிர் பெற்று எழுந்தனர். அரிச்சந்திரன் நாடு திரும்பினான். வசிஷ்டர்-விசுவாமித்திரர் ஆசி வழங்கினர்...
உன் பெயர் என்றென்றும் விளங்கும்
என் தவத்தில் பாதி இனி உனக்கு!

தனக்கு வந்தால் தெரியும்

எஸ். வசந்தராஜன்

புத்தகத்தில் வைத்திருந்த பிராக்ரஸ் ரிபோர்ட்டை எடுத்த அருணின் கைகள் லேசாக நடுங்கின.

ஈஸிசேரில் சாய்ந்து அன்றைய செய்தித்தாளை கண்களால் மேய்ந்து கொண்டிருந்த அப்பாவைத் தயக்கமாகப் பார்த்தான்.

''அப்பா...'' என்ற அருணின் குரலில் லேசான நடுக்கம்.

''என்னடா?''

''இந்தப் பிராக்ரஸ் ரிபோர்ட்ல கையெழுத்துப் போடுங்கப்பா.''

''போட்டுட்டா போச்சு. அதுக்குப் போய் ஏன் இப்படி நடுங்கறே?'' என்று சொல்லிக் கொண்டே பிராக்ரஸ் ரிப்போர்ட்டை வாங்கியவர் அடுத்த நொடியில அதிர்ந்தார். அவர் முகத்தில் கோப ரேகைகள் மின்னலிட்டன. ''என்னடா இது? எப்பவும் முதல் ரேங்க்தான் வாங்குவே. இந்த மன்த்லி டெஸ்ட்ல இரண்டாவது ரேங்க் வாங்கியிருக்கிறியே?''

''அது வந்துப்பா...'' அருண் தடுமாற..... பளார் என்று அவன் கன்னத்தில் அறைந்தார் ராமசாமி. ''ஏண்டா ராஸ்கல். நீ நல்லா படிக்கணும்னு உனக்கு நான் எவ்வளவு வசதி செஞ்சி தரேன்? நீ என்னடான்னா வெறும் செகண்ட் ரேங்க் வாங்கி இருக்கே.'' என்று சொல்லி மறுபடியும் அறைய....

''அம்மா....'' அருண் வலியில் கத்த.....

''என்னடா? என்ன ஆச்சு?'' ன்று கேட்டுக் கொண்டே சமையலறையில் இருந்து பதட்டமாக வேகமாக ஓடி வந்தாள் லட்சுமி — அருணின் அம்மா.

''ஏங்க அவனை அடிக்கிறீங்க? அடிக்காதீங்க.''

''லட்சுமி... நீ சும்மா இரு. இந்த விஷயத்தில் நீ தலையிடாதே.''

லட்சுமிக்குக் கணவனின் முரட்டுத்தனம் பற்றி நன்றாகத் தெரியும். பயத்தோடு ஒதுங்கி நின்றாள்.

''நீ சொல்லுடா. வழக்கமா முதல் ரேங்க் வாங்கற நீ. இந்த டெஸ்ட்ல



ஏன் இரண்டாவது ரேங்க் வாங்கி யிருக்கே? சரியாப் படிக்கலையா? இல்லை, வேற காரணம் ஏதாவது இருக்கா?''

''அது வந்துப்பா....''

''சொல்லுடா.''

''நான் நல்லாதான் பரிட்சை எழுதி னேம்பா. ஆனா இத்தனை நாள் டியூஷன் வைக்காம இருந்த எங்க கிளாஸ் டீச்சர், இப்ப டியூஷன் வச்சிட்டாரு. அவர்கிட்ட டியூஷன் போற பசங் களுக்கு மட்டும் பரிட்சைல சொல்லிக் கொடுக்கிறார். அவங்களுக்கு மட்டும் நிறைய மார்க் போடறார். வழக்கமா இரண்டாவது ரேங்க் வாங்கற ஹரி இப்ப அவர்கிட்ட டியூஷன் போறாம்பா. அவனுக்குச் சொல்லி கொடுத்து அவனை முதல் ரேங்க் வாங்க வச் சிட்டாருப்பா. இனிமேல் நானும் அவர்கிட்ட டியூஷன் போறேம்பா.''

ராமசாமியின் முகம் சிவந்தது.

''உங்க கிளாஸ் டீச்சர் பேர் என்ன சொல்லுடா?''

''பெருமாள்.''

''எங்க குடியிருக்கார்?''

''மாரியம்மன் கோயிலுக்கு எதிர்த் தாப்பல.''

வேகமாக மொபெட்டில் ஏறி சாலையில் கலந்தார் ராமசாமி.

லட்சுமியும் அருணும் அவரைப் பயத்தோடு பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

பெருமாள் வீடு.

டிஸ்டம்பர் கரைந்து போன காம் பவுண்ட் சுவர். வீட்டைச் சுற்றிக் கனகாம்பரச் செடிகள். டியூஷன் இன்னும் ஆரம்பிக்காததால் மாண வர்கள் அங்கும் இங்கும் நின்று கொண்டு அரட்டை அடித்துக்கொண் டிருந்தார்கள்.

மொபெட்டை மௌனமாக்கி விட்டு இறுக்கமான முகத்துடன் உள்ளே நுழைந்தார் ராமசாமி.

''என்ன விஷயம்?'' என்று கேட்ட பெருமாள், லுங்கியில் இருந்தார். தோளில் ஒரு வெள்ளைத் துண்டு.

''அதை எப்படி சார் சொல்றது? நீங்க எல்லாம் ஒரு நல்ல வாத்தி யாரா? உங்க கிட்ட டியூஷன் படிக் கிற ஹரிக்குப் பரீட்சைல சொல்லிக்

''உங்க தாத்தாவோட பற்கள் மட் டும் அழகா, வெள்ளை வெளேர்னு இருக்கே! எப்படிடா?''

''அவர் பல்செட்டைக் கழற்றி, காலை யிலும் மாலையிலும் தவறாம, சுத்தம் பண்ணிடுவார்!''

— மு. திருநாவுக்கரசு.

கொடுத்து அவனை முதல் ரேங்க் வாங்க வச்சிருக்கீங்க. என் மகன் உங்ககிட்ட டியூஷன் படிக்காத தாலே.... வழக்கமா முதல் ரேங்க் எடுக்கற என் மகன் அருண் இந்தத் தடவை செகண்ட் ரேங்க் எடுத்திருக் கான். இது நியாயமான்னு நினைச் சிப் பாருங்க...'' என்று ராமசாமி கோபமாகக் கத்த.....

பெருமாளின் முகத்தில் குழப்ப ரேகைகள்!

''சார், நீங்க சொல்றது ரொம்பத் தப்பு. நான் சமீபத்திலே டியூஷன் வச்சது உண்மைதான். ஆனா டியூஷ னுக்கு வர்ற மாணவர்கள், வராத மாணவர்கள் எல்லோரையும் ஒரே மாதிரியாத்தான் நடத்தறேன். யாருக் குமே பரீட்சைல நான் சொல்லிக் கொடுக்கிறதில்லை. அதுவும் போக இந்த மன்த்லி டெஸ்ட்லயும் உங்க மகன் அருண்தானே முதல் ரேங்க் வாங்கியிருக்கான்? நீங்க சொல்ற ஹரி செகண்ட் ரேங்க்தானே வாங்கி யிருக்கான்?'' என்று சொன்ன பெரு மாள், ''ஹரி,'' என்று அழைக்க

இரண்டு நொடிகளில் உள்ளே நுழைந்த அந்தப் பையன் சிவப்பாக இருந்தான். முகத்தில் படிப்புக்களை பளீரிட்டது.


''ஹரி... உன் பிராக்ரஸ் ரிப் போர்ட்டை எடுத்து வா.''

பத்தே நொடிகளில் ஹரி எடுத்து வர

அதை அலட்சியமாக வாங்கிப் பார்த்த ராமசாமி அடுத்த நொடியில் அதிர்ந்தார். எல்லாத் தேர்வுகளிலும் ஹரி இரண்டாவது ரேங்க்தான் வாங் கியிருந்தான். ஒன்றில் கூட முதல் ரேங்க் வாங்கி இருக்கவில்லை.

ராமசாமிக்குக் குழப்பம்!

அருண் ஏன் உண்மையை மாற்றிச் சொல்லியிருக்கிறான்? அவருக்கு



ஒன்றும் புரியவில்லை.

பெருமாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, மொபெட்டின் இடுப்பை உதைத்தார் ராமசாமி.

ராமசாமி வீட்டுக்குள் நுழைந்த போது அருண் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான். லட்சுமி சமையலறையில் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

''டேய் அருண்... உன் பிராக்ரஸ் ரிப்போர்ட்டைக் கொண்டு வா.''

அருணின் முகம் ஒரு கணம் இருண்டது. தயக்கமாகக் கொண்டு வந்து கொடுத்தான்.

ராமசாமி அதை வாங்கி உன்னிப்பாகப் பார்த்தார். கடைசி மன்த்லி டெஸ்டுக்கு நேராகக் குறிக்கும் இரண்டு என்ற எண் — இரண்டாக மாற்றப் பட்டிருப்பது இப்போது லேசாகத் தெரிந்தது.

சட்டென அருணின் தலைமயிரைப் பிடித்தார்.

''முதல் ரேங்க் வாங்கிட்டு, ஏன் இரண்டாவது ரேங்குனு பிராக்ரஸ் ரிப்போர்ட்ல நீயே மாத்தினே? உங்க கிளாஸ் டீச்சரைப்பத்தி ஏன் மோசமா சொன்னே? ஹரிதான் முதல் ரேங்குன்னு ஏன் பொய் சொன்னே? சொல்லுடா.''

ஒரு நிமிட மௌனத்திற்குப் பிறகு ''உங்களைத் திருத்தறதுக்குத் தாம்பா,'' என்றான் அருண் தெளிவாக.

ராமசாமிக்குத் தலையில் இடி இறங்கியது போல இருந்தது.

''என்னைத் திருத்தறதுக்கா! என்னடா உளற்றே?''

''நான் உளறலப்பா. போன மாதம் உங்களுக்கு உடம்பு சரியில்லாமல் போயிட்டப்ப டாக்டர் சர்டிபிகேட், லீவ் லெட்டர் இரண்டையும் என்கிட்ட கொடுத்து, நீங்க வேலை செய்யற சாமல்பட்டி ஸ்கூல்ல பஸ்ல போய்க் கொடுத்துடுன்னு சொன்னீங்களே, அதை மறந்துட்டீங்களா?''


''ஆமா... அதுக்கென்ன...?''

''அப்பத்தான் அகஸ்மாத்தா உங்க கிளாஸ் மாணவர்கள் உங்களைப் பத்திப் பேசிட்டு இருந்ததைக் கேட்டேன். நான் யாருன்னு அவங்களுக்குத் தெரியாது. அதனாலதான் உங்க பேரைச் சொல்லி உங்களைப்பத்தி ஃப்ரீயாப் பேசிட்டு இருந்தாங்க. ஏம்பா.... உங்ககிட்ட டியூஷன் படிக்கிற பசங்களுக்கு மட்டும் பரீட்சைல நீங்க சொல்லிக் கொடுக்கறீங்களாமே? அவங்களுக்கு மட்டும் தாராளமா மார்க் போடறீங்களாமே? இது நியாயமாப்பா? அப்ப வசதி இல்லாததால டியூஷன் படிக்காம இருக்கிற மத்த மாணவங்க என்ன ஆகிறது? நினைச்சுப் பாருங்கப்பா. நான் செகண்ட் ரேங்க்ன்னதும் இவ்வளவு பதைக்கிறீங்களே, எல்லாப் பெற்றோரும் இந்த மாதிரிதானே பதைப்பாங்க? டியூஷன் படிக்கிற பசங்க, படிக்காத பசங்க எல்லோரையும் ஒரே மாதிரி நடத்துங்கப்பா. அப்பதான் நீங்க ஒரு நல்ல ஆசிரியர்னு பேர் எடுக்க முடியும். மாணவர்களும் உங்களை மதிப்பாங்க. உங்களைத் திருத்தறதுக்குத்தான் நான் இந்த மாதிரிப் பொய் சொன்னேன். இனி திருந்தறதும் திருந்தாததும் உங்க விருப்பம். நான் செஞ்சது தப்புன்னா என்னை மன்னிச்சிடுங்க,'' என்று சொல்லிக் கொண்டே அப்பாவின் கால்களில் விழுந்த அருண், பெரிதாக விசும்ப ஆரம்பித்தான்.

ராமசாமி ஒரு கணம் அதிர்ந்து போய் நின்றார். அருணை மெதுவாக எழுப்பி அவனை அணைத்துக் கொண்டார்.

அவர் கண்களில் லேசான கண்ணீர்த் துளிகள் கர்ப்பம் ஆகி இருந்தன. ஆம்! இப்பொழுது அவர் நல்லவராகி விட்டார். இனி டியூஷன் படிக்கும் மாணவர்கள், படிக்காத மாணவர்கள் எல்லோருமே அவருக்கு ஒன்றுதான்.

வசந்தமே வா



வருகுது வருகுது வருகுது —
வண்ண வசந்தகாலம்!
வாவா! வாவென் றழைக்குது!
இனிய இன்பக் கோலம்!

சூரிய ஒளியில் தகதகதகவென
சுடரும் மலர்க் கூட்டம்
பூரித்துச் சிரிக்கும் எழிலோடு
பூக்கும் மாயத் தோற்றம்!

குயில்கள் பாடிட, மயில்கள் களித்து
கூத்தாடும் மகிழ்ச்சி இன்பம்!
வயல்கள் நிறைந்த கழனிக்குளத்தில்
வளைந்து நீந்தும் அன்னம்!

தேன்நி றைந்தபூச் செண்டுகளைத்தினம்
தேடிச் செல்லும் வண்டுகள்!
தேன் உறிஞ்சிய மகிழ்ச்சியில் ரீங்காரமிட்டுத்
திக்கெட்டும் பறந்தன, ஆஹா!

கூடிப் பாக்கள் பாடுங்கள் — கை
கொட்டித் தாளம் போடுங்கள்!
தேடிச் சென்றே கூடுங்கள் — இள
வேனில் வந்தாள், ஆடுங்கள்!

— க. அருள்மணி (19,683),
துறையூர்.

பொம்மையம்மா பொம்மை..



சின்னச் சின்ன பொம்மை
சிங்கார பொம்மை

நல்ல நல்ல பொம்மை
நாங்கள் போற்றும் பொம்மை

குட்டிக் குட்டிப் பொம்மை
குழந்தை விரும்பும் பொம்மை

வண்ண வண்ணப் பொம்மை
வாங்க விரும்பும் பொம்மை

பாட்டுப் பாடா பொம்மை
பாடம் படிக்கா பொம்மை!

மஞ்சள், நீலப் பொம்மை
மாம்பழ மாயொரு பொம்மை
— கி. செந்தில்நாதன் (11,392),
தேவனாம்பாளையம்.

கவியரங்கம்

கற்பது எதற்காக......



பண்பு வளர்ந்திட, பாடல் பிறந்திடக்
கற்றிட வேண்டுமா!
அன்பு வளர்ந்திட, அறிவு வளர்ந்திடக்
கற்றிட வேண்டுமடா!
ஞானம் பிறந்திட, நல்லவர் வாழ்ந்திடக்
கற்றிட வேண்டுமடா!

நாடு நலம்பெற, நாளும் உழைத்திடக்
கற்றிட வேண்டுமடா!

துயரைத் துடைத்திட, தூய்மை மலர்ந்திடக்
கற்றிட வேண்டுமடா!

தம்பி, நீயும் கற்றிட வேண்டுமடா!!

— சு. மதன் மோகன்.

நாளை உலகம் நம் கையில்.....



கோடை விடுமுறை முடிஞ்சாச்சு;
கொளுத்தும் வெயிலும் தணிஞ்சாச்சு!
ஆடிப் பாடி விளையாடி
அனுப வித்து மகிழ்ந்தாச்சு!

தேர்விலும் வெற்றி பெற்றாச்சு;
தேடிச் செல்வோம் பள்ளிக்கு!
ஆர்வத் துடனே வகுப்பறையில்
ஆசான் சொல்வதைக் கேட்டிடுவோம்!

நாளை உலகம் நம்கையில்;
நாலும் தெரிந்து நடந்தால்தான்,
காலம் நம்மை வரவேற்கும்;
காசினி யெங்கும் புகழ்சேர்க்கும்!

சித்தம் போக்கே சிவம்போக்காய்,
திரிவதை இனிநாம் விட்டிடுவோம்;
புத்தம் புதிய கலைகளினை
புதுமைப் பொலிவுடன் கற்றிடுவோம்!

— அ. சுப்பையன், செட்டிகுறிச்சி.

அன்னை

அன்னை





அம்மா நமக்குத் தெய்வம் — அவள்
அன்பின் கருணையால் உய்வோம்
சும்மா சொல்லிட வில்லை — அன்னை
தொண்டுக்கு இணை இல்லை!

காலைப் பொழுதில் எழுவாள் — சாணம்
கரைத்து முற்றம் வழிவாள்
கோலம் போட்டு முடிப்பாள் — செப்புக்
குடத்தில் நீரை எடுப்பாள்.

பாலைக் கறந்து வருவாள் — காப்பி
பக்குவ மாய்த் தருவாள்
சேலை நனைத்து அடிப்பாள் — அதைச்
சீராய் உலர்த்தி மடிப்பாள்.

இட்லி தோசை வார்ப்பாள் — வாழை
இலையில் படைத்துச் சேர்ப்பாள்
சட்னி சாமபார் எடுப்பாள் — அதைச்
சாப்பிடச் சொல்லிக் கொடுப்பாள்.

குளித்து உடை மாற்றி — பள்ளிக்
கூடம் அனுப்பிப் போற்றி
ஒழிச்சல் ஒய்வு இன்றி — நாளும்
உழைத்துக் காட்டும் நன்றி.

சத்து நிறைந்த உணவாய் — உண்ணச்
சமைத்து நமக்கு மணமாய்
நித்த நித்தம் படைப்பாள் — நம்
நினைவை நெஞ்சில் தொடுப்பாள்.

வாழும் பயணம் இனிதாய் — அன்பு
வழி நடத்திப் பணிவாய்
நாளும் உயர்த்தும் தாயே — அவர்க்கு
நன்றி காட்டு நீயே!

— எஸ். ஆர். சின்னமணி.

எறும்பு ஆக விரும்பு..





எறும்பு தம்பி எறும்பு — நீ
எறும்பாய் இருக்க விரும்பு!
சுறுசுறுப்பின் சின்னம் — அவை
சோர்வடையா திண்ணம்!

வரிசை யாகச் செல்லும் — வாழும்
மேன்மை தன்னைச் சொல்லும்!
வரவறிந்து சேர்க்கும் — இரை
வறண்ட நாளில் தீர்க்கும்!

அன்பாய்க் கூடி வாழும் — உயர்
ஒற்றுமை யால் சூழும்
சின்னஞ் சிறிய எறும்பு — போல
சேர்ந்து வாழ விரும்பு!

— பி. கோவிந்தசாமி (5,703).

எங்கே போறீங்க?


சின்ன சின்னப் பிள்ளைகளே,
எங்கே போறீங்க?
சிரித்துப் பாடிச் சேர்ந்து — நீங்க
எங்கே போறீங்க?

இன்பமாக ஆடிக் கொண்டு
எங்கே போறீங்க?
இங் கிருந்து பைகமந்து
எங்கே போறீங்க?

சீருடை தான் உடுத்திகிட்டு
எங்கே போறீங்க?
சீக்கிரமாய் விரைந்து பேசி
எங்கே போறீங்க?

புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு
எங்கே போறீங்க? — ஓ.
புது வகுப்புத் தேறி நீங்க
அங்கே போறீங்க?

— சு. பாக்கியலட்சுமி (12,884),
அம்பத்தூர்.




இதயத்தில் நேரு

எங்கள் மாமா நேரு
இனிய தலைவர் நேரு
தங்க மாமா நேரு
தரணி போற்றும் நேரு

அழகு மிக்க நேரு
அன்புத் தலைவர் நேரு
குழந்தை அன்பர் நேரு
குறையில் லாத நேரு

காந்தி சீடர் நேரு
கருணை மனிதர் நேரு
மாந்த ரெல்லாம் போற்றும்
மணியாய் வந்த நேரு
எந்த நாளும் மக்கள்
இதயம் வாழும் நேரு!

— சு. மதன் மோகன் (23,112).



ஏதேனும் செய்யலாம் வாருங்கள்...

இளமையில் அன்றே ஸ்டீபனுமே
இரயிலைக் கண்டு பிடித்தாரே!
மார்கோனி அன்றே வானொலியை
மக்கட்குச் செய்து காட்டினாரே!

சீனர்கள் அன்றே காகிதத்தை
செய்தே உலகிற் களித்தனரே!
சிந்தை கவரும் பெருஞ்சுவரை
சிறப்பாய் அவர்கள் அமைத்தனரே!

இதுபோல் சாதனை எத்தனையோ!
இந்நாள் உலகில் நடக்கிறதே!
நாளும் கண்டு பிடிப்புக்களால்
நன்மை பெறுவதும் நாம்தானே!

அதனால் சோம்பல் நீக்கிவிட்டு
அணுகி நாமும் எதையேனும்
செய்து பார்க்கலாம் வாருங்கள்!
சிறப்பாய் அமைக்கலாம் வாருங்கள்!

பரந்த உலகிற் பயன்படவும்,
பாரில் புகழை ஈட்டிடவும்,
ஏதேனும் செய்வோம் வாருங்கள்!
எல்லோரும் எழுந்து வாருங்கள்!

— பட்டுக்கோட்டை என். இரமேஷ்
குமார் (14,613).

சங்கரன் பத்தாம் வகுப்பில் படிக்கும மாணவன்.

அவன் ஒன்பதாம் வகுப்பு படிக்கும் பொழுதே அவனுடைய படிக்கும் பொழுதே அவனுடைய தந்தையார் இறைவனடி சேர்ந்து விட்டார்.

சங்கரனின் வயதான தாயார் பல வீடுகளில் வேலைக்காரியாய் இருந்து சம்பாதித்துத் தன் வீட்டுச் செலவுகளைச் சமாளித்து வந்தாள். இருந்தாலும் அதனால் கிடைத்த வருமானம் போதவில்லை. சங்கரனை எந்தவிதக் குறையும் இன்றிப் படிக்க வைத்து வளர்ப்பதற்காக வீட்டிலுள்ள பொருட்களை விற்று வந்தாள்.

அள்ள, அள்ள அரசாங்கக் கஜானாவும் காலியாகி விடும் அல்லவா? வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் விற்கப்பட்டு விட்டன. கடைசியாக, வீட்டில் ஒரு சிறிய ஆட்டுக்குட்டியும் அவன் தாயாரின் கையில் ஒரு வெள்ளி மோதிரமுமே மிஞ்சி இருந்தன. தனது திருமணத்தின் போது சங்கரனின் தாயாருக்குப் பெற்றோர் அணிவித்த அந்த மோதிரத்தை அவர்

இரும்பு கூடத் தங்கமாகும்



களது நினைவுச் சின்னமாக மதித்தார் அவர். அதனால் அந்த மோதிரத்தை அவள் விற்க விரும்பவில்லை.

அன்று சங்கரனின் வீட்டில் உண்ண உணவு எதுவும் இல்லை. கையில் காசும் இல்லை. எனவே சங்கரனின் தாயார் அவனை அழைத்து, "மகனே, நம்மிடம் கடைசியாக மிஞ்சியிருக்கும் இந்த ஆட்டுக் குட்டியைச் சந்தையில் விற்றுவிட்டு வா," என்று தனது மகனிடம் கூறி, ஆட்டுக்குட்டியை அவனிடம் ஒப்படைத்தாள்.

ஆட்டுக்குட்டியைப் பெற்றுக் கொண்டு சங்கரன் சந்தைக்குச் சென்றான். அங்கே அவனுடைய ஆட்டை எவரும் விலை கொடுத்து வாங்க முன்வரவில்லை.

எஸ்.மகேஷ்வரன்

அப்போது மந்திரவாதி போன்று தென்பட்ட மனிதன் ஒருவன் சங்கரனின் அருகில் வந்தான். "தம்பி, நீ இந்த ஆட்டை விற்கிறாயா?" என்று கேட்டான்.

சங்கரனும் மிக்க மகிழ்ச்சியுடன் "ஆம் ஐயா," என்றான்.

அதற்கு அம்மனிதன், "நீ எனக்கு இந்த ஆட்டைத் தருவதாக இருந்தால் நான் உனக்குச் சில மந்திர விதைகளைத் தருவேன்," என்று கூறினான்.

சங்கரனும் கிடைத்தமட்டில் லாபம் என்று தனது ஆட்டை மந்திரவாதியிடம் ஒப்படைத்துவிட்டு, அவன் அளித்த மந்திர விதைகளைப் பெற்றுக் கொண்டு வெற்றிப் பெருமிதத்துடன் வீடு திரும்பினான். அந்த மந்திர விதைகள் அவனைக் கோடீசுவரன் ஆக்கும் என்று அந்த மனிதன் சொன்னதை அவன் நம்பினான். அது எப்படி என்று கூட அவன் கேட்டுக் கொள்ளவில்லை.

சங்கரன் வீடு திரும்பிய பொழுது அவன் தாயார் எங்கோ வெளியே சென்றிருந்தார். சங்கரன் வெயிலின் கொடுமையால் மிகவும் களைத்திருந்தான். எனவே அவன் தான் பெற்று வந்த மந்திர விதைகளை வீட்டிற்கு வெளியே ஓர் இடத்தில் வைத்துவிட்டு தண்ணீர் அருந்த உள்ளே சென்றான்.

தண்ணீர் அருந்திவிட்டு வெளியே வந்த சங்கரன், தன் எதிரே இருந்த காட்சியைக் கண்டு பெருவியப்படைந்தான். ஆம்! அவன் வீட்டின் முன்னே பிரம்மாண்டமான மரமொன்று புதிதாக வளர்ந்தோங்கி நின்றிருந்தது.


மரம் ஏறுவதில் வல்லவனான சங்கரன் 'கிடு கிடு' வென்று அந்த மரத்தில் ஏறத் தொடங்கினான். ஆனால் என்னே அதிசயம்! அவன் ஏற ஏற, மரம் வளர்ந்து கொண்டே சென்றது. ஆனால் சங்கரன் சலிப்படையவில்லை. இறுதியில் சங்கரன் மரத்தின் உச்சியை அடைந்தான்.

அங்கே மற்றுமோர் அதிசயம் அவனுக்காகக் காத்திருந்தது. ஆம்! மரத்தின் உச்சியில், பரந்த பசுமையான சோலையொன்று தெரிந்தது. அச்சோலை மிகவும் அமைதியாக இருந்தது.

சோலைக்குள் புகுந்து நடக்கத் தொடங்கினான் சங்கரன். பல வகைப்பட்ட மலர்கள் இனிய நறுமணத்தை வீசிக் கொண்டிருந்தன. சோலையின் அழகினை இரசித்துக் கொண்டே மெதுவாகச் சென்று கொண்டிருந்த சங்கரன், ஒரு காட்சியைக் கண்டு ஆச்சரியத்தில் நின்றுவிட்டான்.

அங்கே அவன் ஒரு விசித்திர மனிதனைக் கண்டான். விசித்திர மனிதனின் உடலில் இருந்து தங்க நாணயங்கள் கீழே விழுந்து கொண்டிருந்தன. ஆனால் என்னே ஆச்சரியம்! அந்தத் தங்க நாணயங்கள் தரையைத் தொட்டவுடன் இரும்பாக மாறி விட்டன!

இப் புதிர்க் காட்சியைச் சங்கரன் பார்த்து கொண்டிருக்கும்பொழுதே அம் மனிதன் சங்கரனைப் பார்த்து விட்டான். அம் மனிதன் சங்கரனை அருகே அழைத்து அவனிடம் சொன்னான். "தம்பி, நான் ஒரு மந்திரவாதி. நான் பல கடுமையான தவங்கள் செய்து என் உடலை மிகவும் புனிதமாக்கியுள்ளேன். என்னிடமிருந்து, எனது உடலின் மகிமையால் வெளிப்படும் இந்தத் தங்க நாணயங்



கள் நேர்மையற்ற இந்த உலகை அடைந்தவுடன் இரும்பாக மாறு வதைப் பார்.

''என்னிடம் மந்திரக்கோல் ஒன்று உள்ளது. அம் மந்திரக் கோலால் நேர்மையானவர்கள் எந்த ஒரு உலோகத்தைத் தொட்டாலும் அது தங்கமாக மாறி விடும். ஆனால் இந்த மந்திரக்கோலால் உண்டாகும் தங்கம் நேர்மையற்றவர்களின் கையை அடைந்தால் சிறிது நேரத்தில் இரும் பாகி விடும். அவர்கள் மனம் திருந் தினால், அது மீண்டும் தங்கமாக மாறி விடும். நான் இப்பொழுது மரணமடையப் போகிறேன். எனவே இம் மந்திரக்கோலை நான் இப்போது உன்னிடம் தரப் போகிறேன். நினை வில் கொள்! நீ பேராசைப்பட் டாலோ, அல்லது நேர்மை தவறி னாலோ இம் மந்திரக்கோல் இரும் பாக மாறி ஒரு பயனும் இல்லாமல் அழிந்து விடும் — மறக்காதே. நேர்மை யுள்ளவர்கள் தொட்டால்தான் உலோகம் தங்கமாகும்,'' என்று மிகவும் எச்சரித்து, தனது இடுப்பில் செருகி வைத்திருந்த மந்திரக்கோலை எடுத்துச் சங்கரனிடம் கொடுத்து, அவனை வாழ்த்தி விட்டு உயிர் துறந் தான்.



சங்கரன் சிறிது நேரம் வரை நன்றியுணர்ச்சியுடன் அம் மனிதனுக் குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தி னான்.

பிறகு, மரத்தின் முனையை அடைந்த சங்கரன் இறங்கத் தொடங் கினான். விரைவில் தரையை அடைந்து 'அப்பாடா' என்று மூச்சு வாங்க நின்றான். மரத்தை விட்டு நகர்ந்து திரும்பிப் பார்க்கிறான். மீண்டும் ஓர் அதிசயம்! எதிரே பிரம் மாண்டமாக நின்று கொண்டிருந்த அவன் ஏறிச் சென்ற அந்த மந்திர மரம் மாயமாகி விட்டது!

அதே சமயத்தில் வெளியே சென் றிருந்த சங்கரனின் தாயார் வீடு திரும்பினார். சங்கரன் எல்லையில் லாத மகிழ்ச்சியுடன் தன் தாயிடம் முதலிலிருந்து நடந்தது அனைத்தும் கூறினான்.

ஆனால் அவன் தாயாரோ தனது மகன் தன்னை முட்டாளாக்க நினைக்கிறான் என்று நினைத்தார். சங்கரன் காட்டிய மந்திரக்கோலை யும் ஏதோ சவுக்குக் கழி என்றே நினைத்து, அதைப் பிடுங்கித் தூர எறிய முயன்றார்.

அப்பொழுது மந்திரக்கோலின் ஒரு முனையானது அவன் தாயார் அணிந்திருந்த வெள்ளி மோதிரத் தின் மேல் பட்டது. என்னே அதி சயம்! வெள்ளி மோதிரம் தங்கமாக மாறி ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. அதைக் கண்ட பிறகுதான் தன் மகன் சொன்னதைத் தாயார் நம்பினார். இருவரும் எல்லையில்லா மகிழ்ச்சி யடைந்தனர்.

மாலையாகத் தொடங்கியது. வெய்யிலின் கொடுமை இறங்கிய

தைப் போல், அவர்கள் மனத்திலிருந்து எதிர்காலத்தைப் பற்றிய கவலையும் இறங்கியது.

காலை முதல் சங்கரனும், அவனுடைய தாயாரும் எதுவும் சாப்பிடவில்லை. ஆதலால் இருவருக்கும் மிகவும் பசித்தது. சங்கரனின் தாயார் வேறு வழி இல்லாததால் அந்தத் தங்க மோதிரத்தை விற்க முடிவு செய்தார். இருவரும் கடைத் தெரு சென்று, ஒரு வட்டி வியாபாரியின் கடையை அடைந்து தங்க மோதிரத்தை அவர் வாங்கிக் கொள்வாரா என்று கேட்டார்கள்.

மோதிரத்தைப் பட்டை தீட்டிப் பார்த்த வட்டி வியாபாரி, அது மிகவும் சுத்தத் தங்கத்தினாலானது என்று அறிந்தார். அதன் மதிப்பு ஏறக்குறைய ஆறாயிரம் ரூபாய் வரை இருக்கும்! இருந்தாலும் வட்டி வியாபாரி அவர்களை ஏமாற்ற நினைத்து, "இம் மோதிரம் மிகவும் மட்டமான தங்கத்தினால் செய்யப்பட்டது. வேண்டுமென்றால் இதற்காக ஆயிரம் ரூபாய் தருகிறேன்," என்று கூறினார்.


தங்கத்தின் மதிப்பை அறியாத அவர்கள் அப் பணத்தைப் பெற்றுக் கொண்டு மன நிறைவுடன் வீடு திரும்பினர்.

தன் கரிய கதிர்களை இரவு எங்கும் பரப்பி மக்களைத் தூங்கத் தூண்டிக் கொண்டிருந்தது. வட்டி வியாபாரியும் அத் தங்க மோதிரத்தை மேலும் ஆராயாமல் அதை ஒரு பெட்டியில் வைத்து மூடி விட்டு, ஒரு பெரிய ஏமாற்றல் தொழிலை செய்து முடித்த மனநிறைவுடன் தனது வீடு திரும்பி உறங்கினார்.

"ஏன் உங்க வீட்டு ஃபேன் 'குடு, குடு'ன்னு சத்தம் போட்டுக்கிட்டே ஓடுது?"

"தவணை முறையில் வாங்கினோம். பாக்கியை 'குடு' 'குடு'ங்கிறது."

— மு. திருநாவுக்கரசு.



விடிந்தது. வட்டி வியாபாரி கடையைத் திறந்தவுடன் முதல் வேலையாக, தான் முந்தைய இரவு பெற்ற அந்தத் தங்க மோதிரம் வைத்த இடத்தில் சென்று பார்த்தார். அப்போது அவருக்கு மின்னல் தாக்கியதைப் போன்று இருந்தது. ஆம்! முந்தைய இரவு தனது மிஞ்சும் ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்த அந்தத் தங்க மோதிரம் இருந்த இடத்தில் ஓர் இரும்பு மோதிரம்தான் இருந்தது! பொன் இரும்பானது எப்படி? அந்த வட்டி வியாபாரி கலங்கித் தவித்தார்.

வீட்டில் அவரது பத்து வயது மகள் கமலாவைத் தவிர மற்ற அனைவரும் ஊருக்குச் சென்றிருந்தார்கள். கடையிலிருந்த கரும்பலகையில் கமலா என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள். வட்டி வியாபாரி எழுத்துக் கூட்டிப் படித்தார்:

'சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.'

"இதுக்கு என்னம்மா அர்த்தம்?" என்று கேட்டார் வியாபாரி.

"எங்களுக்கு இன்னிக்குப் பாடம் அப்பா. திருக்குறள். அர்த்தம் சொல்லவா? சுடப்படாத பச்சை மட்பாண்டத்துள் வைக்கப்பட்ட தண்ணீரானது எவ்வாறு தானும் அழிந்து, தன்னைக் கொண்ட பானையையும் அழிக்கிறதோ, அவ்வாறே வஞ்சனை முதலான தீய வழிகளில் பெறப்பட்ட செல்வமானது தானும் அழிந்து, தன்னைக் கொண்டானையும் அழிக்கும்."

"ரொம்பச் சரியான வார்த்தை அம்மா," என்று தன் கையிலிருந்த இரும்பு மோதிரத்தைப் பார்த்தார் அவர்.

வாய்மையே வெல்லும்!


சிரிச்சா என்ன குறைஞ்சா போகும்
ஒருவன்: 20 ரூபாய்க்குச் சில்லறை கேட்டேன்! யாருமே இல்லைன்னு சொல்லிட்டாங்க!
மற்றவன்: இதென்ன பிரமாதம்? எங்கிட்ட இருக்கு, நான் தர்றேன், இந்தாங்க!
ஒருவன்: ரொம்ப தாங்க்ஸ்... நோட்டை ஒண்ணாந்தேதிக்கு மேல தர்றேன்!
ரயில் பயணி: இந்தச் சாமான் எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு வரணும்! எவ்வளவு கூலி வேணும்?
போர்ட்டர்: இவ்வளவும் நம்மால தூக்க முடியாதுங்க! நீங்க பாதி லக்கேஜ் எடுத்துக்கினு வர்றீங்களா? கூலில பாதி தந்துடறேன்!
ஆசிரியர்: மழைக்குக் கூடப் பள்ளிக் கூடம் பக்கம் ஒதுங்காதவன்னா என்ன அர்த்தம்?
மாணவன்: மழையில் நனையறதுக் குப் பிடிக்கும்னு அர்த்தம்!
வீட்டுக்காரர் விருந்தாளியிடம்: ''இதப் பாருங்க, எம் பையன் ரொம்ப மோசமானவன்! பத்து நிமிஷத்துக்குள்ள 'தின்பண்டம்' ஏதாவது வாங்கிட்டு வந்திருந்தா எடுத்துக் குடுத்துடுங்க! இல்லே, அழுது அடம் பிடிப்பான்!''
''எங்கம்மா திட்டும் போது நான் துளிகூடக் கோபமே படமாட்டேன்!''
''அவ்வளவு பொறுமைசாலியா நீ?''
''இல்லை! என் தங்கையைத் திட்டும் போதுன்னு சொல்ல வந்தேன்!''
— வி. சுந்தரராமன்.

பிருந்தாவனக் கதையரங்கம்

அந்த மலையில் உள்ள சித்தர் கோவில் என்ற இடத்திலிருந்து பார்த்தால் ஆனந்தபுரத்தில் ஆனந்தமாக கோழி விற்று வாழும் கோபாலின் கோழிப் பண்ணையும், அதற்குச் சற்றுத் தள்ளி இருக்கும் அவனது குடிசையும் நன்றாகத் தெரியும். தன் கணவன் கோபாலிடம் மிகவும் அன்பும் பாசமும் கொண்டு இன்பமாக இல்லத்தை நல்லதனமாக நடத்திக் கொண்டிருந்தாள் குப்பாயி.

அதே ஆனந்த மரத்தில்தான் மல்கோவா மாம்பழத்தின் ஏதோ ஓர் இடத்தில் சொத்தை இருப்பது போல் ஆடு விற்று வாழும் ஆறுமுகம் என்பவனும் வசித்து வந்தான். அவன் வீடு கோபால் வீட்டிற்கு எதிர்த் திசையில் இருப்பதால்தானோ என்னவோ, கோபாலுக்கு எதிர்மாறான எண்ணமும், பொறாமைக் குணமும், குரூரமும் சேர்ந்த மொத்த உருவமாகத் தெரிகின்றான். 'இந்தக் கோபால், கோழிகளை விற்று இவ்வளவு பணக்காரனாக இருக்கிறானே! நம்மால் ஆடு விற்றும் இவ்வளவு பணக்காரனாக ஆக முடியவில்லையே!' என்று நெடு நாட்களாகவே அவனுக்கு வயிற்றெரிச்சல்.

சமீப காலமாய் அவன் ஒரு சதி வேலையில் இறங்கினான். கோபால் வீட்டில் இல்லாத போது கோபாலின் பண்ணையில் புகுந்து, கோழிகளைத் திருடி, வெளியூர்ச் சந்தையில் விற்று வந்தான்

கோபாலோ கோழித் திருட்டுக் கண்டு கலங்கினான். ஊருக்குள்ளும் அடிக்கடி கோழிகள் காணாமல் போயின. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் ஊர்ப் பஞ்சாயத்தில் முறையிட்டனர்.

பஞ்சாயத்துக் கூடியது. நாட்டாண்மைக்காரர் அனைவரையும் பார்த்து, "நம்முடைய ஊரில் என்றும் இல்லாத வழக்கமாக கோழிகள் அடிக்கடி களவு போகின்றன. இந்தத் திருட்டுக்களை யார் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. உங்களில் யாருக்காவது யார் மீதாவது சந்தேகம் இருக்கிறதா? இருந்தால் கூறலாம்," என்று கூறினார்.

கூடியிருந்த அனைவரும் பேசவில்லை. கோபால் நாட்டாண்மைக்காரரைத் தனியாக அழைத்துத் தனக்கு ஆடு வியாபாரி ஆறுமுகத்தின் மீது சந்தேகம் இருப்பதாகக் கூறினான். நாட்டாண்மைக்காரர், தனக்கும் அந்தச் சந்தேகம் இருப்பதாகவும், அதை எப்படித் தீர்ப்பது என்று தான் குழம்புவதாகவும் கூறினார்.

"சிக்கலான வழக்கைத் தீர்க்கச் சின்னான் இருக்கிறானே!" என்று கோபால் கூற, "அதுவே சரி!" என்று சின்னானை அழைத்து விஷயத்தைச் சொன்னார்.

சின்னானும், "அப்படியா!" என்றபடி கூட்டத்தை ஒருமுறை பார்த்தான். கூட்டத்தில் ஆடு வியாபாரி ஆறுமுகம் வந்திருந்தான். சின்னான் நாட்டாண்மையைப் பார்த்து ரகசியமாக, "ஐயா! இந்தக் கூட்டத்

சிக்கலைத் தீர்த்த சின்னான்



தில் யார் தன் தலையில் கை வைக்கிறானோ அவன்தான் கோழித் திருடன்.'' என்று உறுதி கூறி, கவனிக்கும்படி சொல்ல, அவரும் ஒப்புக் கொண்டார்.

சின்னான் கூட்டத்தைப் பார்த்து, ''பெரியோர்களே! நமது ஊரில் கோழித் திருட்டு அளவுக்கு அதிகமாகப் போகிறது. ஆனால் யார் என்று எவராலும் சொல்ல முடியவில்லை. ஆனால் இப்பொழுது இந்தக் கூட்டத்திலேயே திருடன் இருக்கிறான். அவன் தலையில் கோழி இறகுகள் ஒட்டிக் கொண்டு இருக்கின்றன.'' என்று கூறியதுதான் தாமதம். உடனே ஆறுமுகம் தன் தலையில்தான் இறகுகள் இருப்பதாக எண்ணித் தலையைத் தடவி விட்டான்.

இதைப் பார்த்த நாட்டாண்மை, ''பிடியுங்கடா அவனை. அவன்தான் கோழித் திருடன்!'' என்று கத்தினார்.

உடனே கூட்டத்தினர் பாய்ந்து ஆறுமுகத்தைப் பிடித்துக் கொண்டனர். தான் திருடவே இல்லை என்று வாதாடியவன் 'தர்ம அடி' கிடைத்ததும், தானாக உண்மையை ஒப்புக் கொண்டான்.

ஆறுமுகத்துக்கு 1000 ரூபாய் அபராதம் விதிக்க வேண்டுமெனக் கூட்டத்தினர் தீர்ப்பு வழங்கினர். 1000 ரூபாய் கட்ட இயலாத ஆறுமுகம் அன்றிரவே ஊரை விட்டு ஓடி விட்டான்.

சின்னானுக்குக் கிடைத்த பாராட்டு ஊரெங்கும் ஒலித்தது. கோழித் திருட்டும் ஒழிந்தது!

— எஸ். தாமோதரன் (17.95),
கூளவேலம்பட்டி புதூர்.

கொடுங்கோலனைப் புகழ...



சூழலூர் என்னும் நாட்டை ஒரு கொடுங்கோல் அரசன் ஆண்டு வந்தான்.

ஒருநாள் அரசன் முரசு அடிப்பவனை அழைத்து அவனிடத்தில், ''இனிமேல் வருடத்திற்கு ஒருமுறை எல்லாக் குடிமக்களும் அரண்மனைக்கு வர வேண்டும். வரும்போது ஒரு மூட்டை அரிசி கொண்டு வர வேண்டும். அந்த அரிசியைக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக ஒரு மூட்டை நெல்லை வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்.'' என்று முரசு அடிக்கச் சொன்னான்.

'அவன் சொன்னபடி கேட்கா விட்டால் கொன்று விடுவார்களோ' என்று மக்கள் பயந்தனர். அரசன் ஆணைப்படியே வருடத்திற்கு ஒருமுறை அரிசியை கொடுத்து விட்டு நெல்லை வாங்கி வந்தனர்.

ஆனால் வழிநெடுக மன்னனைத் திட்டிய படியே சென்றனர். 'பாவி அரசன் நல்லா இருப்பானா? ஒரு மூட்டை நெல்லை அரைத்தால் கால் மூட்டை அரிசிதானே கிடைக்கும்?' என்று திட்டியபடியே சென்றனர்.

வருடங்கள் பல கழிந்தன. மக்கள் சபித்த படியே அரசன் நோய்வாய்ப்பட்டான். இறக்கும் தருவாயில் தனது மகனை அழைத்து, ''மகனே! நான் நாட்டு மக்களுக்கு அதிகக் கொடுமைகளைச் செய்து விட்டேன். என்னை அனைவரும் திட்டுகிறார்கள். நான் இறந்த பின்பாவது என்னை மக்கள் புகழ வேண்டும். இதற்கு நீதான் வழி செய்ய வேண்டும். இதை நீ செய்வாயா?'' என்று கேட்டார்.

இளவரசன் தன் தந்தையிடம், ''அப்பா உங்களை இந்த நாட்டு மக்கள் புகழும்படி செய்கிறேன். இது உறுதி'' என்று சத்தியம் செய்தான்.

இது கேட்ட அரசன் நிம்மதியுடன் இறந்தான்.

இளவரசன் அந் நாட்டு அரசன் ஆனான். அவன் தன் தந்தையிடம் உறுதி கூறியபடியே நாட்டு மக்கள் இறந்த அரசனைப் புகழும்படி செய்தான். எப்படி?

இளவரசன் உடனே முரசு அடிப்பவனை அழைத்து, ''வருடத்திற்கு ஒருமுறை எல்லாக் குடிமக்களும் அரண்மனைக்கு வர வேண்டும். வரும் பொழுது ஒரு மூட்டை அரிசி கொண்டு வர வேண்டும். அதைக் கொடுத்து விட்டு ஒரு மூட்டை உமியைப் பெற்றுச் செல்ல வேண்டும்.'' என்று அறிவிக்கச் சொன்னான்.

முரசு அடிப்பவனும் அப்படியே செய்

தான்.

இதைக் கேட்ட மக்கள், ''முன் இருந்த அரசனே பரவாயில்லை. இவன் இதற்கு மேலே இருக்கிறானே! அந்தப் புண்ணியவான் இதற்குள் இறந்து விட்டானே,'' என்று பழைய அரசனை அனைவரும் புகழ்ந்து பேசினர். தந்தைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றிய பிறகு தர்ம நியாயப்படி ஆட்சி செய்தானாம் இளவரசன்.

— டி. ஷேக் உசேன் (20,767), செஞ்சி.

ஒரு வனத்தில் ஒரு சாமியார் மூச்சுத் திணற ஓடிக் கொண்டிருந்தார். அவரை யாரும் துரத்தவில்லை.

அவருடைய நடத்தை அருகிலிருந்த மூன்று திருடர்களுக்கு வியப்பை உண்டு பண்ணியது. அவர்கள் சாமியாரைப் பின் தொடர்ந்து அவர் அப்படி ஓடக் காரணம் என்ன என்று வினவினர்.

பயத்தில் நடுங்கி நின்ற சாமியார், தன்னைச் 'சாவு' துரத்துவதாகக் கூறினார்.

திருடர்கள் சாமியாரைப் பைத்தியம் என்று எண்ணி, ''எங்கே, அந்தச் சாவை எங்களுக்குக் காட்டுங்கள், பார்க்கிறோம்'' என்று கேலியாகக் கேட்டனர்.

சாமியாரும், ''என்னுடன் வாருங்கள். காட்டுகிறேன்,'' என்று அவர்களை அழைத்துச் சென்று ஒரு பெரிய குகையைக் காண்பித்தார். காண்பித்து விட்டுத் திரும்பவும் ஓடி விட்டார்.

சாவு துரத்துகிறது!



மூன்று திருடர்களுக்கும் மனதுக்குள் ஒரு குறுகுறுப்பு. அது என்ன என்று எட்டிப் பார்த்தார்கள். பிரமித்துப் போய் விட்டார்கள். கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் குகை நிறையத் தங்கம்! தங்கத்தை பகிர்ந்துக் கொள்ள மூன்று திருடர்களும் முற்பட்டனர். மூன்று பங்காகப் பிரித்தார்கள்.

அப்பொழுது அவர்களுக்குப் பசி வாட்டியது. அவர்கள் தங்களில் ஒருவனை உணவு வாங்கி வரவும் அப்படியே இவற்றைக் கொண்டு செல்வதற்கு மூன்று பெரிய கோணியை வாங்கி வரவும் அருகில் உள்ள ஒரு நகருக்கு அனுப்பினார்கள். அவன் சென்றவுடன் இரு திருடர்களும் வெளியே சென்றவனின் ஒரு பங்கையும் தாங்கள் இருவருமே பிரித்து எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டார்கள். அதோடு விட்டார்களா? உணவு கொண்டு வந்த அந்த மூன்றாமவனை இருவரும் சேர்ந்து கொலை செய்தார்கள்.

உணவு வாங்கி வரச் சென்றவனோ வேறு விதமாய்த் திட்டம் போட்டிருந்தான். தங்கம் முழுவதையும் தானே அபகரிக்க எண்ணினான். அதற்காக அவன் உணவில் விஷத்தைக் கலந்து கொண்டு வந்திருந்தான். இதை அறியாத இரு திருடர்களும் உணவை உண்டு மாண்டார்கள்.

சாமியாரின் வாக்குப் பலித்தது. மூன்று திருடர்களை அழித்தத் தங்கம் சிரிப்பதைப் போல் ஒளி வீசி மின்னிக் கொண்டிருந்தது.

— எம். மணி, சென்னை — 4.

நான் ஒருமுறை என் குடும்பத்தினருடன் காஞ்சிக்குச் சென்றிருந்தேன். அங்கு பல கோவில்களுக்குச் சென்றேன். அவற்றுள் ஒன்று பள்ளி கொண்ட பெருமான் கோவில். அக் கோவிலில் உறையும் இறைவன் திருநாமம் 'யதோத் காரி' இவ் வடமொழிச் சொல்லின் தமிழாக்கம், ''சொன்ன வண்ணம் செய்தவன்''. இவருக்கு இப் பெயர் ஏற்படக் காரணம்? ஒரு சுவையான கதை கூறப்படுகிறது.

பன்னிரு ஆழ்வார்களுள் திருமழிசை ஆழ்வாரும் ஒருவர். அவர் தன் சீடனான கணிகண்ணனுடன் காஞ்சியில் வசித்து வந்தார். அவர் பெருமானைத் தூய பக்தியுடன் பூசித்து வந்ததால் அவரிடம் அபூர்வ சக்திகள் இருந்து வந்தன. சீடனுக்கும் அவ்வாறே.

ஒருமுறை ஆழ்வார் வெளியூர் சென்றிருந்தார். காஞ்சியின் பள்ளி கொண்ட பெருமான் கோயிலில் ஒரு மூதாட்டி தன் முதுமையையும் தள்ளாமையையும் பாராமல் கோயிலைப் பக்தியுடன் நாள்தோறும்

சொன்ன வண்ணம் செய்த பெருமான்



சுத்தம் செய்து வந்தாள். இதனைக் கண்டு நெகிழ்ந்த கணிகண்ணன் பெருமானை வேண்டி அவள் இளமை திரும்பக் கிடைக்குமாறு செய்தார். அவள் இளங்குமரியாகியதால் கோயில் பணிகளைச் செவ்வனே செய்து வந்தாள்.

அப்பொழுது காஞ்சியை ஆண்டு வந்த பல்லவ மன்னன் முதிய பிராயத்தினன். அம் மன்னன் கணிகண்ணன் செய்த அதிசயமான செயலைக் கேட்டு அகமகிழ்ந்தான். உடனே கணிகண்ணனை வரவழைத்து, தனக்கும் இளமைப் பருவத்தைத் தரும்படி வேண்டினான். கணிகண்ணன் மறுத்து விடவே, கோபம் கொண்ட மன்னன் கணிகண்ணனைக் காஞ்சியை விட்டு வெளியேற்றினான்.

வெளியூரிலிருந்து திரும்பிய திருமழிசை ஆழ்வார் நடந்தவற்றை அறிந்து பெருஞ்சினம் கொண்டார். அங்கு நடந்தவை அனைத்தையும் பார்த்தும் சும்மா கிடந்த அந்தப் பள்ளி கொண்ட பெருமானைக் கண்டார். அவரை நோக்கி:

"கணிகண்ணன் போகின்றான்
காமருபூங்கச்சி
மணி வண்ணா, நீகிடக்க வேணடா —
துணிவுடைய
செந்நாப்புலவனும் போகின்றேன்
நீயும் உன்
பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்."
என்று பாடினார்.


பெருமானும் அவர் சொற்களை ஆசிரியர் சொற்களை மதிக்கும் மாணவன் போல மதித்து, தன் பாயாகிய ஆதிசேஷனைச் சுருட்டி எடுத்துக் கொண்டு ஆழ்வாரைப் பின்தொடர்ந்தார் பெருமான். காஞ்சிக்கு வெளியே ஓரிடத்தில் சென்றமர்ந்த ஆழ்வாருடன் பெருமானும் அமர்ந்தார்.

செய்தியறிந்த மன்னன் துணுக்குற்றான். உடனே அம் மன்னன் ஓடோடிச் சென்று திருமழிசை ஆழ்வாரைப் பணிந்து தன் செயலுக்கு வருந்தி, மன்னிப்புக் கோரினான். கணிகண்ணனுக்கு அளித்த தண்டனையை ரத்து செய்தான். கணிகண்ணனுடன் காஞ்சி திரும்பும்படி வேண்டினான். அவரும் அப்படியே புறப்பட்டார். கோபம் தணிந்த திருமழிசை ஆழ்வார்,

"கணிகண்ணன் போக்கொழிந்தான்
காமரு பூங்கச்சி
மணிவணணா நீ கிடக்க வேண்டும் —
துணிவுடைய
செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன்
நீயும் உன்
பைந்நாகப்பாய் விரித்துக் கொள்."
என்றார்.

உடனே பெருமானும் கோயிலுக்குள் சென்று தன் பைந்நாகப் பாயை விரித்துக் கொண்டு படுத்தார். இவ்வாறு ஆழ்வார் சொற்படி செய்ததால் மக்கள் அவரை 'சொன்ன வண்ணம் செய்த பெருமான்' என இன்றும் அழைக்கின்றனர்.

— என். அபர்ணா, சென்னை — 18.



சமோசா என்பது முக்கோண வடிவில் செய்யப்படும் ஓர் உணவுப் பண்டம். ஆப்பிரிக்காவில், ஜோகன்ஸ் பர்க்கில், 20 சமையல்காரர்கள் 48 மணி நேரம் செலவழித்து, உலகிலேயே மிகப் பெரிய சமோசா ஒன்றைத் தயாரித்தார்கள். 3000 பேர்கள் சாப்பிடலாம். அதன் ஒவ்வொரு பக்கமும் 4 மீட்டர் (சுமார் 13 அடி) கனம் 1 மீட்டர். இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது!

— ஆழி.



உள்ளத் தோட்டத்தின் வானம்பாடிகள்

(12) பூதலூர் முத்து

பேருந்தின் மங்கள இசையைக் கேட்கும் மனநிலையில் வேலப்பன் இல்லை.

'இந்தச் சுற்றுலாவில் சேரும் வாய்ப்பே கிடைக்காதோ என்றிருந்தோம். மணிவாசகம் வந்தார். இடம் பிடித்தோம். தலைமை ஆசிரியரே நமக்காகப் பணம் கட்டி விட்டார் என்று மகிழ்ந்தோம். பேருந்தை விட்டு இறங்கியதும் கவலை இல்லாத பறவையாகத் திரியலாம் என்று திட்டம் போட்டோம். தமிழ்ச் செல்வி' வந்து விட்டாளே... என்ன செய்வது?'

சிந்தனையில் ஆழ்ந்தான்.

ஆசைத்தம்பியும் அதே மனநிலையில் இருந்தான். அருள்மதியை மனத்திற்குள் வசைபாடிக் கொண்டிருந்தான். திருமணம்... பட்டுப் புடைவை.. பாட்டுக் கச்சேரி என்று சொல்லி விட்டுக் கடைசி நேரத்தில் இப்படியா காலை வாரி விடுவாள்?

தங்கள் வருகை ஆசைத்தம்பிக்கும் வேலப்பனுக்கும் அதிர்ச்சியாக இருக்கும் என்பதை அருள்மதி உணர்ந்தாள். அவள் அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஆசிரியை கோமதியுடன் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருந்தாள்.

கோமதி பள்ளி மாணவிகளுடன் வந்த சிறுமியர் ஒவ்வொருவரைப் பற்றியும் ஆர்வத்தோடு விசாரித்தாள்.

சிறு சேமிப்பில் சிறந்து விளங்கும் வசிதா ரகுமான், தையற்கூடத்தில் பணியாற்றும் எலிசபெத், பெட்டிக் கடையில் ஊழியம் செய்யும் மகாராணி, பூ விற்கும் புனிதா, சிற்றுண்டி அகத்தில் வேலை செய்யும் சசிகலா இப்படிப் பலரும் தங்களுடைய அனுபவங்களைக் கூறினார்கள். அவை கோமதியின் உள்ளத்தில் சிலிர்ப்பை உண்டாக்கின.

"வெறுங்கை என்பது மூடத்தனம்
நம்
விரல்கள் பத்தும் மூலதனம்!"

என்று தாராபாரதி என்ற கவிஞர் பாடியிருக்கிறாரே! இவர்களுடைய உழைப்பும் முயற்சியும் அந்தப் பாடலைத்தான் நினைவுபடுத்துகின்றன. நம் குடும்பம் மிகுந்த வறுமையில் இருந்தாலும் நம் எண்ணம் துடிப்பாக இருந்தால் — துவண்டு விடாமல் உழைத்தால் — நிச்சயம் முன்னேற

முடியும். எந்தப் பணியும் இழிவான தன்று. ஒவ்வொருவரிடமும் ஒரு தனித் தன்மை இருக்கும். அதைக் கண்டறிந்து முறையாக வளர்த்துக் கொண்டால் நாம் உயர்ந்த சிகரங்களைத் தொட முடியும்.''

ஆசிரியையின் சொற்கள் எல்லோருக்கும் எழுச்சியூட்டின.

''அக்கா, இங்கே இருக்கிறாளே தமிழ்ச்செல்வி, நிறைய நூல்கள் படிக்கிறாள். முறையான கல்வியைத் தொடர முயல்கிறாள்,'' என்று அருள்மதி அறிமுகப்படுத்தினாள். கோமதி தமிழ்ச் செல்வியின் முதுகில் தட்டிக் கொடுத்தாள்.

''இவள் வேலப்பனுடைய தங்கை!'' அருள்மதி தொடர்ந்தாள். அதைக் கேட்டுக் கோமதிக்கு மிகவும் வியப்பாக இருந்தது. 'அவனுடைய தங்கையா இவள்? அவன் மௌனமாக இருந்து விட்டானே!' என்று நினைத்தாள்.

கோமுகி அணையில் பேருந்து நின்றது.

எல்லோரும் இறங்கி அணையின் அழகைப் பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

கோமதி வேலப்பனை அழைத்தாள்.

''வேலப்பா, தமிழ்ச்செல்வி உன் தங்கையாமே — அவள் சுற்றுலாவுக்கு வருகிறாள் என்று நீ சொல்லவேயில்லையே...''

அவன் விழித்தான்.

''அவள் வந்த பின்னால் நீ அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லையே.,...''

அவன் எதைச் சொல்வான்? சமாளிப்பதற்கு ஏற்ற யோசனை எதுவும் தோன்றவில்லையே! அவன் எதையாவது சொல்லி தமிழ்ச்செல்வி ஏதாவது சொல்லி விட்டால் சிக்கலாகி விடும்.

''ஆனால் தமிழ்ச்செல்வி கலகலப்பாய்ப் பேசுகிறாள். எல்லாவற்றையும் அவளிடம் தெரிந்து கொண்டேன்.''

கோமதி இயல்பாகப் பேசினாள். ஆனால் வேலப்பன் வழக்கம் போல் திகைத்தான்.

அவனுடைய நிலையைக் கண்ட அருள்மதி, ''அக்கா வாருங்கள். நாம் விரைவாகப் போய் அணையைச்



சுற்றிப் பார்த்து விட்டு வருவோம்'' என்றாள்.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் பெருமூச்சுடன் நகர்ந்தார்கள்.

உயர்ந்த மலை. அதன் பச்சைக் கம்பளமாய் அடர்ந்த மரங்கள், செடிகள்!

குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. வெண்மேகங்கள் மாணவர்களை வரவேற்றுக் கையசைத்தன; அவர்களது உடலைத் தழுவிக் கொண்டு சென்றன.

கல்வராயன் மலையின் மக்களான மலை ஆளிகள் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார்கள். கள்ளங் கபடமற்ற உள்ளம்; அதைத் தெளிவாகக் காட்டிய இனிய முகம்!

''அதோ அருவி!''

பகத் உற்சாகத்தோடு குரல் கொடுத்தான். எல்லோரும் அந்தக் காட்சியைக் கண்டார்கள்.

மிகுந்த உயரத்திலிருந்து செங்குத்தாகக் கொட்டிக் கொண்டிருந்த அந்த அருவி சூரிய ஒளியில் பளபளத்தது.

'அருவிகள், வயிரத் தொங்கல்!
அடர்கொடி, பச்சைப்பட்டே!'

என்ற பாவேந்தரின் கவிதையை நினைவுபடுத்தியது அந்தத் தோற்றம்!

அருவிப் பகுதியில் சென்று கொண்டிருந்தார்கள். பாறைப் பகுதிகளில் நடந்து செல்வது புதிய அனுபவமாக இருந்தது. மரங்களின் கல்படிவங்கள் அங்கே இருந்தன. விந்தையான காளான்கள், பூச்சியினங்கள் அவர்களுடைய அறிவியல் ஆர்வத்துக்கு விருந்தாக அமைந்தன. குறிப்பேடுகளில் படங்கள் வரைந்து கொண்டார்கள்; குறிப்புகள் எடுத்துக் கொண்டார்கள்.

மணிவாசகம் அந்த மலையைப் பற்றிய பல செய்திகளைக் கூறிக்



கொண்டிருந்தார்.

''இந்த மலைப் பகுதியில் இருக்கும் மக்களின் வாழ்க்கை சுமாராகத்தான் உள்ளது. கல்வியின் பயன் அவர்களுக்குக் கிடைத்தால் இன்னும் உயர்வடைவார்கள். சூரிய ஒளியைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கும் மின்கலங்கள் இங்கே உள்ளன. அவற்றின் மூலம் மின்னொளி கிடைக்கிறது. இம் மலைப் பகுதிகளில் மரங்களிலும் பாறை இடுக்கிலும் பெரிய தேன் கூடுகள் இருக்கும். அவற்றின் தேன் மிகவும் இனிமையானது. அதை இங்குள்ள மக்களிடம் பெறலாம். தேன் எவ்வளவு இனிமையானதோ. அந்த அளவு அந்தத் தேனீக்கள் கொடிய தன்மையும் கொண்டவை! அவற்றின் தோற்றமே நம் இதயத்தில் அச்சத்தை உண்டாக்கும்.''

அதைக் கேட்டுச் சிலர் கண்களை அகல விரித்தார்கள். ''அஞ்ச வேண்டாம். அவற்றைத் துன்புறுத்தினால் மட்டுமே அவை சீற்றம் கொள்ளும். இன்னொரு செய்தி...''

''அது என்ன செய்தி சார்?''

''இந்தப் பகுதி மக்களின் நடன நிகழ்ச்சி ஒன்று இன்று மாலை நடைபெறுகிறது. அதைக் கண்டுகளிக்கலாம். அப்போது நம் தலைமை ஆசிரியர் அவர்களுக்குப் பரிசுகளும் வழங்குவார்.''

அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள்.

தமிழன்பன், மாணவர்கள் தங்குவதற்குரிய இடத்தில் இருந்து ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். மாலையில் அப் பகுதியில் இருந்த பள்ளிக்கூடத்தைச் சென்று பார்ப்பதாகத் திட்டம். நடன நிகழ்ச்சி பள்ளித் திடலில் ஏற்பாடாகியிருந்தது.

வளவன் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். தமிழன்பன் அதைக் கவனித்தார்.

''வளவன்! சுற்றுலா தொடர்பான வேலைகளைப் பாருங்கள். குறித்த நேரத்தில் குறித்த இடங்களைப் பார்க்க ஏற்பாடு செய்யுங்கள். வேலப்பனையோ ஆசைத்தம்பியையோ பின்தொடர்ந்து செல்ல வேண்டாம். எங்கு சென்றாலும் ஓர் ஆசிரியரோடு குழுவாகச் செல்ல



* மற்றவர்கள் உன்னைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைக் காட்டிலும் நீ உன்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் என்பது தான் முக்கியம்.

— செனிதா.

* சென்று போன நாட்களைப் பற்றி வருந்தாதே. எதிர்காலத்தை நினைத்து அஞ்சாதே. இன்னும் செய்யும் காரியத்தில் முனைந்திடு.

— மார்க்ஸ் ஔரோலியஸ்.

* எந்த மனிதனும் தவறு செய்யக் கூடும். ஆனால் முட்டாளைத் தவிர எவனும் அதை தொடர்ந்து செய்ய மாட்டான்.

— கார்க்கி.

* உண்மையான அறிவாளி தன்னிடமுள்ள ரகசியத்தைத் தானே வைத்துக் கொள்ள வேண்டும்.

— குல்லாட்.

வேண்டும் என்று கூறியிருக்கிறோம். அதன்படி நடக்கிறார்களா என்பதை மட்டும் கவனியுங்கள்.''

செல்வராசுவின் கடிதம் தொடர்பான நினைவில் ஆழ்ந்திருந்த அவருக்கு அந்தச் சொற்கள் தெம்பையளித்தன. விரைந்து சென்றார். பணிகளில் ஈடுபட்டார்.

மாலையின் இயற்கைக்காட்சிகளை ஆசிரியர்கள் சிலர் வண்ணப்படங்களாக எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அரவிந்தனும் பகத்தும் சில படங்கள் எடுத்தார்கள்.

''அரவிந்தா, அந்த அருவிக்கு அருகில் நான் நிற்பது போல ஒரு படம் எடு''

''மலைவாசிகளோடு நான் நிற்பது போல ஒரு படம்!''

''அந்தப் பள்ளிக்கூடத்துக்கு முன்னால் ஒரு படம்!'' ''அந்த ஆடு மேய்க்கும் சிறுவனோடு ஒரு படம்!''

எந்த மாணவன் வந்து வேண்டினாலும் அவன் படம் எடுத்தான்.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

படத்துக்காக நிற்பவர்கள் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களோ அதைக் கண்டு எரிச்சல் அடைந்தார்கள்.

''நம்மிடம் காமிரா இருந்தால்...''.

''எவ்வளவோ படம் எடுக்கலாம்''

''நாம் படம் எடுத்தால் இதை விட உயர்ந்த காமிராவால்தான் எடுக்க வேண்டும்.''

''எதிலும் உயர்ந்த நோக்கம்...''

புன்னகையோடு சொன்னான் ஆசைத்தம்பி.

''என்ன கிண்டலா?''

வேலப்பன சீறினான்.

''சாதாரண சைக்கிள் பிடிக்காது; ரேஸ் மாடல்தான் வேண்டும். சாதாரண பூச் செடி கொடி பிடிக்காது; உயர்ந்த வகைதான் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவோம். முதற்கட்டமாக அந்த சாதாரண செடிகளை அழிப்போம்; தொட்டிகளை உடைப்போம். சாதாரண சட்டை என்றால் மரப்பொந்தில் வைப்போம். இப்படி உண்மையைச் சொன்னால் கிண்டல் என்கிறாயே.."

அதைக் கேட்டு வேலப்பனும் சிரித்தான்.

தமிழன்பன் அரவிந்தனை அழைத்தார்.

''அரவிந்தன்! இந்த மலையில் வாழும் மக்கள் நடத்திய கலை நிகழ்ச்சியை நாம் பார்த்தோம்; மகிழ்ந்தோம். நாம் அவர்களுக்காக ஒரு நிகழ்ச்சியை நடத்த வேண்டும். என்ன நிகழ்ச்சி நடத்தலாம்?''

நம்முடைய பள்ளி ஆசிரியர் குலசேகரன் எழுதிய 'காவலர்கள்' என்ற நாடகத்தை நடத்தினால் நன்றாக இருக்கும் சார்!''

''மகிழ்ச்சி! முன்பு அந்த நாடகத்தில் நடித்தவர்களை அழைத்து வா.

* உள்ளே நுழையுமுன் வெளியே வருவதைப் பற்றி யோசனை செய்.

— அரேபிய பழமொழி.

* ஒரு கதவு மூடும் போது மற்றொரு கதவு திறக்கிறது.

— ஸ்காட்லாந்து பழமொழி.

* உபயோகமுள்ள பொருள் தீங்கு இழைக்கக் கூடியதாகவும் இருக்கும்.

— போலந்து பழமொழி.

* முட்டாள்களே உலகத்தில் இல்லாவிட்டால் அறிவாளியைத் தெரிந்து கொள்வதெப்படி?

— நார்வே பழமொழி.

* அன்பை வாங்கவோ, விற்கவோ முடியாது. அன்புக்கு விலை அன்பே தான்.

— சீனப் பழமொழி.

* அன்பினால் சிங்கத்தின் மீசையைக் கூட பிடுங்க முடியும்.

— அரேபிய பழமொழி.

தொகுத்தவர்: எம். ஆனந்தன், திருப்பத்தூர்.

பயிற்சி கொடுத்து ஒப்பனை வேலைகளைத் தொடங்கலாம்.''

முன்பு 'காவலர்கள்' நாடகத்தில் அரவிந்தன், ராமு, பீட்டர், முகம்மது அலி, பொன்னழகன், பஷீர் அகமது, அல்போன்ஸ் ஆகியோர் நடித்தார்கள். பீட்டருக்கும் பொன்னழகனுக்கும் பெண் வேடம்! இம்முறை பெண்களையே அதில் நடிக்க வைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார்கள்.

அரவிந்தன் கோமதியிடம் விவரம் தெரிவித்தான். அருள்மதியும் தமிழ்ச்செல்வியும் நடிப்பதற்குச் சம்மதித்தார்கள்.

எல்லோரும் வளவனிடம் சென்றார்கள்.

நாடகம் நடக்கப் போகிறது என்ற செய்தி அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் அதைவிட மிகுதியாக மகிழ்ந்தார்கள்.

மணிவாசகம் அறிவியல் கூடத்துக்காகத் தாவரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்தார். கல் படிவங்களை எடுத்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் ஆர்வத்தோடு ஒத்துழைத்துக் கொண்டிருந்தார்கள்.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் அந்தக் குழுவில்தான் இருந்தார்கள். அந்த வேலைகளில் ஆர்வம் கொண்டவர்களைப் போல் நடித்துக் கொண்டிருந்தார்கள்.

அரவிந்தனுடைய குழு நாடகத்திற்கான வேலைகளில் மும்முரமாக இருந்தது. வளவனும் கோமதியும் அங்கே இருந்தார்கள். பீட்டர், நாடகத்தில் அருள்மதிக்கும் தமிழ்ச்செல்விக்கும் உரிய பகுதிகளை விளக்கிக் கொண்டிருந்தான்.

எல்லோருக்கும் வேலை இருந்தது.

''யாரும் நம்மைக் கண்காணிக்கவில்லை. அதுவே ஒரு மகிழ்ச்சியாக இருக்கிறது.''

வேலப்பனுக்கு அளவில்லா ஆனந்தம்.

''அருள்மதியும் தமிழ்ச்செல்வியும் வந்ததால் நமக்குத் தொல்லையாக இருக்கும் என்று நினைத்தோம். இது வரை இல்லை.''


''அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்படி நாம் எதுவும் செய்யவில்லை. அதுதான் முக்கியமான காரணம்.'' ஆசைத்தம்பி விளக்கினான்.

''சுற்றுலா வந்ததன் நினைவாக எதுவுமே செய்யாமல் போகிறோமே''

ஆற்றுக்கு வந்து விட்டு குளிக்காமல் போவதைப் போலக் கவலைப்பட்டான் வேலப்பன்.

ஆசைத்தம்பியிடம் கண்ணாலேயே ஜாடை காட்டினான்.

மணிவாசகத்தின் பார்வையிலிருந்து ஓசைப்படாமல் அவர்கள் விலகிச் சென்றார்கள்.



''டேய் ரமேஷ், என்னடா உடம்பெல்லாம் கட்டுப்போட்டிருக்கே?''

''என்னைக் கிளாஸ் லீடர் பதவியிலிருந்து தூக்கியெறிஞ்சுட்டாங்கடா...!''

— மு. திருநாவுக்கரசு.

பாறைகள், முட்செடிகள், மரங்கள்! ஆராய்ச்சி மாணவர்களைப் போல ஆர்வத்தோடு நடந்தார்கள்.

ஆசைத்தம்பி நின்றான். ''வேலப்பா அதோ பார்!'' காட்டு மரம் ஒன்றின் உச்சியில் ஒரு பெரிய தேன்கூடு! வண்டுகளைப் போலக் காட்சியளித்த தேனீக்கள்!

தேன்கூடு கலைந்தால் அவை வீறுகொண்டு அரக்கர்களாக மாறிவிடும்.

அந்தக் காட்சி எப்படியிருக்கும் என்று பார்க்க நினைத்தான் வேலப்பன்.

''மலைத்தேன் எப்படி இருக்கும் என்பதைத்தான் நேற்றே சுவைத்துவிட்டோமே!''

ஆசைத்தம்பி சொன்னது அவனுடைய காதில் விழவில்லை. அவனுடைய கைகள் துருதுருத்தன. கால்கள் ஓரிடத்தில் நிற்காமல் பரபரத்தன.

சுற்று முற்றும் பார்த்தான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு கல்லை எடுத்து அந்தத் தேன் கூட்டை நோக்கி எறிந்தான்.

தாக்குதலுக்கு உள்ளான தேனீக்கள் சீற்றத்தோடு கலைந்து கீழ் நோக்கிப் பறந்து வந்தன.

ஆசைத்தம்பி ஓடினான். வேலப்பன் மூச்சிரைக்க ஓடினான்.

தேன்கூடு கலைக்கப்பட்ட செய்தி தெரியாமல், மணிவாசகமும் மாணவர் சிலரும் அந்த வழியாக வந்தார்கள். நாடகம் தொடங்குவதற்கு முன் செல்ல வேண்டும் என்ற விரைவு அவர்களுடைய நடையில் தெரிந்தது.

தேனீக்கள் சினத்தோடு அவர்களைக் கொட்டின. அலறிக்கொண்டு ஓடினார்கள். ஓரிருவர் அந்த அதிர்ச்சியில் செய்வதறியாமல் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள். மணிவாசகம் விரைந்து அவர்களை இழுத்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

மருத்துவரை அழைத்து வர மாணவன் ஒருவன் பதற்றத்தோடு ஓடினான்.

ஒரு மலைவாசியின் குடிசைக்குப் பின்புறம்.

''நான் யோசித்து சொல்வதற்குள் தேன் கூட்டில் கல்லை எறிந்து விட்டாயே... மணிவாசகமும் மாணவர் சிலரும் அடைந்த துன்பத்தைப் பார்த்தாயா?''

ஆசைத்தம்பி கேட்டான்.

''அவர்கள் வரப் போவது எனக்கெப்படித் தெரியும்? தேன் கூட்டை நீ காட்டாமலே இருந்திருக்கலாம் அல்லவா?''

வேலப்பன் பதற்றமில்லாமல் கேட்டான்.

'மாணவர்களைப் பற்றிக் கவலைப்படா விட்டாலும் உறவுக்காரரான மணிவாசகத்தைப் பற்றிக் கூட அவன் கவலைப்படவில்லையே!'

ஆசைத்தம்பி சிந்தித்தான்.

அதே நேரத்தில் பீட்டர் அந்தக் குடிசைக்குள் இருந்தான். மாணவர்களுக்கு மலைத்தேன் வாங்குவதற்காக அங்கே வந்திருந்தான்.

அவர்கள் பேசியது அவனுடைய காதில் தெளிவாக விழுந்தது.

அவர்கள் அங்கிருந்து சென்றதை உறுதிப்படுத்திக் கொண்டு வெளியே வந்தான்; வளவனைச் சந்திக்க விரைந்து சென்றான்.

(தொடரும்)



கொடி உயர்த்துவோம்


கொடி உயர்த்துவோம்......
கொடி உயர்த்துவோம்......
பாடியாடிக் கூடிநமது
பாரதத்தின் மூன்றுவண்ணக்
கொடி உயர்த்துவோம்...! (கொடி)

அண்ணல் காந்தி தந்ததூய
அன்பு என்ற வழி நடந்து
சத்தியத்தைக் காத்து நின்று
நித்தம் சாந்தித் தீபம் ஏற்றிப்
பார் முழுதும் பாரதத்தின்
திரப் பண்பு காட்டும்வண்ணக் (கொடி)

தூய்மையான வெண்மையோடு
வாய்மை என்ற கொள்கை ஏந்திச்
செழுமை என்ற பசுமை தாங்கிச்
சூழும் வீரச் சிவப்பினோடு
சாரநாத்தின் சக்கரம்போல்
சுற்றி வீசும் மூன்று வண்ணக் (கொடி)

எல்லை எங்கும் தொல்லை என்ற
அல்லல் இன்றிப் பாரதத்தின்
அண்டை நாட்டு மக்களோடு
அன்பு கொண்டு பழகி நாட்டின்
பட்டி தொட்டி எங்கும் ஒன்று
கூடி நமது மூன்று வண்ணக் (கொடி)

ஓதுகின்ற கல்வி, செல்வம்
பேதம் இன்றி யாவருக்கும்
ஒன்று போலத் தந்து நமது
ஒற்றுமையின் சின்னம் இதை
ஒன்று கூடி உயர்த்திப் பணிந்து
என்றும் வாழ்க வாழ்க என்று (கொடி)



ஜய்ராம்ஜி



ஆகஸ்ட் புரட்சி என்றால்

1942 என்பது உலக சரித்திரத்திலேயே மிகவும் பரபரப்பான கால கட்டம். அப்போது இரண்டாவது உலக யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ஜப்பான், ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டு, சிங்கப்பூர் போன்ற பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதிகளைத் தாக்கத் தொடங்கியது. சிங்கப்பூரிலிருந்து மலேயாவுக்கு முன்னேறி, பர்மாவையும் ஆக்கிரமித்துக் கொண்டு, இந்தியாவின் எல்லைப்புறத்தில் காலடி எடுத்து வைக்கத் தயாராய் நின்றது, ஜப்பான்.

இத்தகைய சிக்கலான காலகட்டத்தில், பிரிட்டிஷாரிடம் அடிமைப் பட்டுக் கிடந்த இந்தியா எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி இந்தியத் தலைவர்களிடையே

கவிஞர் தமிழ்முடி

பலமான கருத்து மாறுபாடுகள் தோன்றின. பிரிட்டிஷ் ஆளுகைக்கு இந்தியா உட்பட்டிருந்ததால், அது, இந்தச் சோதனையான கால கட்டத்தில் பிரிட்டனுக்கு நிபந்தனையற்ற பூரண ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று நம்மை ஆண்ட பிரிட்டிஷார் எதிர்பார்த்தார்கள். அதற்கு ஆதரவு தந்தவர்களும் நம்மிடையே இருந்தார்கள். நேதாஜி ஏற்கெனவே ஜெர்மனி சென்று பிரிட்டனுக்கு எதிராக ஹிட்லருடன் சேர்ந்து கொண்டிருந்தார். இந்திய தேசிய ராணுவம் என்ற பெயரில் விடுதலைப் படை திரட்டி சிங்கப்பூர் மற்றும் மலேயாவில் ஜப்பானியருக்கு ஒத்துழைப்புத் தந்து வந்தார்.

இந்தியாவிலோ முஸ்லிம் லீக் கட்சி, முஸ்லிம்களுக்குப் பாகிஸ்தான் என்ற கோரிக்கையை எழுப்பியிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் காந்திஜி வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்தையும் அது தொடர்பான

ஒரு திட்டத்தையும் அறிவித்தார். அந்தத் திட்டத்தின் சாராம்சம் இது தான்: பிரிட்டிஷார்தான் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பிளவு ஏற்படுத்தி வருகிறார்கள். அவர்கள் வெளியேறிவிட்டால் இங்கே இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படும். தங்கள் பிரச்னைகளைத் தாங்களே விவாதித்துத் தீர்த்துக் கொள்வார்கள். ஜப்பானியர் வந்தால், காந்திஜியும் அவரது சாத்துவீக முறைகளை நம்புவோரும் ஜப்பானியரைச் சாத்துவீக முறையில் எதிர்ப்பார்கள். ஆயுதமேந்திய விதமாக ஜப்பானியரை எதிர்க்க விரும்புவோர் அவ்வாறே செய்யலாம். இந்தியா, நேசநாடுகளுடன் இணைந்து ஜப்பானை எதிர்க்கும். நேச நாடுகளின் துருப்புக்கள் இங்கே இருக்க அனுமதி வழங்கப்படும். இந்தத் திட்டம் பிரிட்டிஷ் அரசால் ஏற்கப்

என்ன ?

படவில்லையெனில் வெள்ளையனே வெளியேறு' என்ற கோஷத்துடன் போராட்டம் நடக்கும்.

காந்திஜியின் இந்தத் திட்டம் ராஜாஜிக்கு ஏற்புடையதாக இல்லை. அவர் சொன்னார்: 'நெருக்கடியான இந்தக் கால கட்டத்தில் இந்தியாவை விட்டு பிரிட்டிஷார் வெளியேறுவது நாட்டில் பெரும் குழப்பத்தை விளைவிக்கும். நாம் முதலில் முஸ்லிம் லீகுடன் பேசி ஒரு சமரச ஒப்பந்தத்துக்கு வருவோம்; தேவையானால் கொஞ்சம் விட்டுக் கொடுப்போம். இப்படி நாம் ஒற்றுமையாக நின்றால் பிரிட்டிஷாருக்குச் சீக்கிரமே நமக்கு விடுதலை அளிப்பது தவிர வேறு வழியில்லாது போகும். ஆனால் காங்கிரஸ் எழுப்பும் ஒரு கோஷத்துக்கு அஞ்சி பிரிட்டிஷார் வெளியேற மாட்டார்கள். வெளியேறவும் கூடாது. அப்படி உடனடியாக வெளியேறினால் இந்நாட்டைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்துவதுடன், அந்நியரின் ஆக்கிரமிப்புக்கும் வழி



வகுத்தவர்கள் ஆவார்கள்.'

காந்திஜிக்கும் ராஜாஜிக்கும் இடையில் இப்படி கடுமையான கருத்து மோதல் ஏற்பட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் மதித்தார்கள். நட்பினாலும் உறவினாலும் கட்டுண்டு இருந்தார்கள். இருந்தாலும் கருத்து வேற்றுமையில் இருவரும் இரு துருவங்களில் இருந்தார்கள்!

தேசத்தந்தைகாந்திஜியின் கருத்துத் தான் காங்கிரஸிலும் நாட்டிலும் பெரும்பான்மையினரால் ஏற்கப்பட்டது. ராஜாஜி கடுமையாகத் தாக்கப்பட்டார். ஒரு பொதுக் கூட்டத்தில் பாகிஸ்தானுக்கு ஆதரவு தருகிறார் என்பதால் அவர் மீது தார் அடங்கிய காகிதப் பந்து வீசப்பட்டது. நெற்றியிலிருந்து முகமெல்லாம் கறுப்புத் தார் வழிந்தோட ராஜாஜி பேசினார்:

"குறி பிசகாமல் தார் பந்து வீசியவரை நான் வாழ்த்துகிறேன்! அவருக்கும் எனக்கும் கருத்து மாறுபாடு இருக்கிறது. ஆனால்வருகின்ற ஜப்பானிய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும் இந்தியா விடுதலை பெறுவதைச் சாத்தியமாக்கவும் அவரைப் போன்ற லட்சிய வீரர்கள் ஏராளமாகத் தேவை!"

ராஜாஜி திரத்துடன் தமது கொள்கையில் அசையாது நின்றார். ஆனாலும் கல்கி பத்திரிகை உள்பட மிகச் சிலரே ராஜாஜி பக்கம் இருந்தனர். காங்கிரஸ், ராஜாஜி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்தது. ராஜாஜி, தாம் கட்சி விரோதமாகச்



செயல்படுவதாகக் கூறப்பட்ட குற்றச் சாட்டை மறுத்தார். என்றாலும் பெரும்பான்மையினர் கருத்துக்கு மதிப்பளித்து, கட்சியிலிருந்தும் சட்ட சபையிலிருந்தும் ராஜினாமா செய் தார்.

பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, 'வெள்ளையனே வெளியேறு' திட்டத்தை ஆமோதித்தது. மறுநாள் காலையே காந்திஜியும் இதர காங்கிரஸ் தலைவர்களும் பிரிட்டிஷ் ஆட்சியால் சிறையில் அடைக்கப்பட்டனர்! காங்கிரஸ் கட்சிக்கே தடை விதிக்கப்பட்டது!

இதன் எதிரொலியாக நாட்டில் எங்கும் கிளர்ச்சி எழுந்தது. இங்கும் அங்கும் பல பிரதேசங்களில் மக்கள் தங்களைச் சுதந்திர இந்தியாவின் பிரஜைகள் என்பதாக அறிவித்துக் கொண்டு 'சுதந்திரக் கொடி' ஏற்றினார்கள்! தொழிலகங்களின் இயக்கம் நின்று போனது. மாணவர்களும் தொழிலாளர்களும் கிராம மக்களும் நகர மக்களும் பெருங் கூட்டங்களாக அணிவகுத்துச் சென்று தலைவர்களைக் கைது செய்ததைக் கண்டித்துக் கோஷமிட்டனர். பிரிட்டிஷ் ஆட்சி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட, சில தினங்களுக்குள்ளேயே அறுநூறு பேர் சுடப்பட்டு மாண்டனர்.

1857 — ஆம் ஆண்டின் இந்தியப் பெரும் புரட்சிக்குப் (சிப்பாய்க் கலகம்) பிறகு இந்தியா கண்ட மிகப் பெரிய மக்கள் புரட்சியாக விளங்கியது ஆகஸ்டு புரட்சி. ஆனால் காந்திஜி விரும்பியபடி அஹிம்சா மார்க்கத்தில் இது நடக்கவில்லை. மக்கள் உணர்ச்சி வசப்பட்டு ரயில்களைச் கவிழ்த்தனர்; டெலிஃபோன் தந்திக் கம்பிகளை அறுத்தனர். தபால் நிலையங்களையும் போலீஸ் ஸ்டேஷன்களையும் தீக்கிரையாக்கினர்.

பிரிட்டிஷ் அரசு அடக்கு முறையைத் தீவிரப்படுத்தியது; நிராயுதபாணிகளைச் சுட்டுத் தள்ளியது. தடியடிப் பிரயோகத்துக்குக் கணக்கு வழக்கு இல்லை. பத்திரிகைகள் உண்மைகளை வெளியிட முடியாதவாறு தணிக்கை செய்யப்பட்டன.

பல தலைவர்கள் தலைமறைவானார்கள். மாறுவேஷத்தில் போலிஸாரிடமிருந்து தப்பி, தலைமறைவாக இருந்தபடியே கிளர்ச்சிகளை ஊக்குவித்து வந்தனர். ஹஸாரிபாக் சிறையிலிருந்து தப்பிய ஜெயப்பிரகாஷ் நாராயண், பன்னிரண்டு இடங்களில் போலிஸார் எதிர்பாராத விதமாகத் திடீர் திடீரென்று தோன்றி, 'வெள்ளையனே வெளியேறு' கோஷத்தை எழுப்பி, கிளர்ச்சிக்கு வேகமளித்து நீடிக்கச் செய்தார்.



சில மாதங்களுக்குப் புரட்சி நீடித்த போதிலும் ஆகஸ்டு இறுதிக்குள்ளாகவே புரட்சியின் முதுகெலும்பை பிரிட்டிஷ் ஆட்சி நொறுக்கி விட்டது. இந்தப் புரட்சியில் மொத்தம் ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதிகார பூர்வமாக அறிவித்த போதிலும் உண்மையில் இதைவிடப் பல மடங்கு அதிகமான மக்கள் சுடப்பட்டுமாண்டதாக நம்ப இடமிருக்கிறது. ஒரு லட்சம் தேசியவாதிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.


மகாத்மா காந்தி வன்முறையை ஊக்குவிக்காவிட்டாலும் அதனை மன்னித்து விட்டதாகவும் ஜப்பானுடன் சேர்ந்து சதி செய்ததாகவும் பிரிட்டிஷ் அரசு ஒரு கற்பனைக் கதையைப் பரப்பியது! இந்தக் குற்றச்சாட்டை நிரூபியுங்கள்; அல்லது வாபஸ் பெறுங்கள்'' எனக் கோரி, மகாத்மா இருபத்தோரு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார். இந்த உண்ணாவிரதத்தின் போது தொடர்ந்து நாலு நாட்கள் ராஜாஜி, காந்திஜியைச் சந்தித்தார். அப்போதுதான் ராஜாஜியின் பாகிஸ்தான் பிரிவினைத் திட்டம் விவாதிக்கப்பட்டு, காந்திஜியால் இருதரப்புக்கும் கௌரவமானது என்ற முறையில் ஒப்புக்கொள்ளவும் பட்டது. ஆனால் அப்போது அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் பிரிட்டிஷ் ஆட்சியும் முஸ்லிம் லீகும் தடுத்து விட்டன. (பின்னால் ஏற்பட்ட பாகிஸ்தான் பிரிவினை, ராஜாஜியின் திட்டம் அல்ல. பல விதங்களில் முற்றிலும் மாறுபட்ட ஒன்று).

ஆகஸ்டு புரட்சியின் விளைவாக பிரிட்டன் இந்தியாவை விட்டு உடனே வெளியேறி விடவில்லை. இந்தியா 1942 — இல் விடுதலை பெற்று விடவும் இல்லை. ஆனால், 'விடுதலை பெற்றே தீருவோம்' என்கிற நமது மனவுறுதியை பிரிட்டிஷாருக்கு வன்மையான விதத்தில் உணர்த்த, ஆகஸ்டு புரட்சி பெரிதும் உதவியது.

இறவாப் புகழ்பெற்ற குழந்தைக் கவிஞர்!

சமீபத்தில் பெங்களூரில் குழந்தைகள் இலக்கிய மகாநாடு விமரிசையாக நடைபெற்றது. எட்டு மாநிலங்களிலிருந்து குழந்தை இலக்கிய அறிஞர்கள் பங்கு பெற்றார்கள். தமிழகத்திலிருந்து ஆறு குழந்தை இலக்கியப் பிரதிநிதிகளில் ஔவை நடராசனும், பூவண்ணனும் மகாநாட்டில் கலந்து கொண்டனர்., மகாநாட்டில் ஔவை நடராசனுக்குக் கேடயமும், பொன்னாடையும் மகாநாட்டு நிர்வாகிகள் வழங்கினார்கள். உடனே ஔவை நடராசன் எழுந்திருந்து, "நான் குழந்தை எழுத்தாளன் அல்ல. தமிழகத்தில் முப்பத்தைந்து ஆண்டுகள் குழந்தை இலக்கியத்துக்காகப் பாடுபட்டு அண்மையில் மறைந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவுக்கே இந்தக் கௌரவம் உரித்தானது. ஆகவே இவற்றைக் குழந்தை எழுத்தாளர் பூவண்ணன் வாயிலாகக் குழந்தைக் கவிஞர் இல்லத்தில் சேர்ப்பிக்க வேண்டும்!" என்று பெங்களூர் குழந்தை இலக்கிய மகாநாட்டில் கூறியதைக் கேட்டு அனைவருமே மெய் சிலிர்த்தார்கள். பூவண்ணனும் கேடயத்தையும் பொன்னாடையையும் 2.7.89 அன்று குழந்தைக் கவிஞர் இல்லத்தில் திருமதி வள்ளியம்மையிடம் வழங்கினார்.

— ஏ. எஸ். எம்.



கேளுங்கள்

கே: பற்களிலுள்ள கறை, மஞ்சள் கறை போன்றவற்றை நீக்கப் பயன்படும் மருந்தின் பெயர் என்ன?




ப: தம்பி ரொம்ப நுணுக்கமாய்த்தான் கறை — மஞ்சள் கறை என்று கேட்டிருக்கிறார். பற்பசைத்தேய்ப்பால் போகாத கறைகளுக்கு வேறு பூச்சு மருந்து கிடையாது. முதலில் இருக்கும் சாதாரணக் கறையைப் போக்க — சிமெண்ட், பாசி போன்றவை — 'ஸ்கேலிங்' என்று ஒரு சுரண்டல் வித்தை செய்ய வேண்டும். அதை நீயோ நானோ செய்ய முடியாது. முறையான கிளினிக் வைத்திருக்கும் பல் டாக்டர்தான் செய்வார்.

அடுத்துக் குறிப்பிட்டிருக்கும் மஞ்சள் கறை இருக்கிறதே, அதுபற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். 'மாதா செய்த பாவம் மக்கள் தலையிலே' என்று சொல்வார்கள். அப்படி இந்த மஞ்சள் கறையும் மாதா செய்த பாவத்தால் மக்கள் பல்லில் படிவதுதான். கர்ப்ப காலத்தில் எந்தத் தாய் டெட்ராசைக்ளின் போன்ற ஆன்ட்டி பயாடிக் பில்ஸ்களை முழுங்குகிறாளோ, அவளது குழந்தையின் பற்கள் மஞ்சளாய் இருக்கும் என்கிறார் மருத்துவர். அதோடு வருந்துகிறார் — இந்த மஞ்சள் கறையைப் போக்க மார்க்கம் இல்லையாம்!

* சி. இராஜகோபாலன், ஏம்பலம்.

கே: உலகத்தின் சுற்றளவு என்ன?



ப: ஏன், உலகம் சுற்றிய தம்பி ஆகப் போகிறாயா? செய் ராஜா. கிலோ மீட்டரில் சொன்னால் ரொம்பச் சோர்ந்து போய் விடுவாய். அதனால் பழைய கணக்கிலேயே சொல்கிறேன். நால் பிடியாய் பூமத்திய ரேகை வழியே சுற்றி வந்தாயானால் 24, 902 மைல். இல்லை, துருவங்களின் வழியே சுற்றுவது சுலபம் என்று தோன்றினால், தூரமும் கொஞ்சம் குறையும். 24,859 மைல். எப்படி வசதி? அது சரி, புராணங்களில் யார் யாரோ பூமியைத் தூக்கி வைத்துக் கொண்டிருப்பதாய்ப் படித்திருப்பாயே! அவர்கள் எவ்வளவு எடையைத் தூக்கியிருக்க வேண்டும் தெரியுமா? 6592'க்கு அப்புறம் 18 பூஜ்யத்தைப் போட்டுக் கொள். நீயே எண்ணிப் பார்த்து, அத்தனை டன் எடை என்று சொல்லு. அடேங்கப்பா!

* என். முரளி, மொரப்பூர்.

கே: காப்பி முதன் முதலில் பயிரிடப் பட்ட நாடு எது?

ப: காப்பி சும்மா காட்டு மூலிகை மாதிரி தானாய் வளர்ந்திருந்த ஒரு ரகம்தான். அதை முதன் முதலில் கண்டுபிடித்துப் பயிர் செய்தவரைப் பற்றிக் கர்ணபரம்பரையாய் ஒரு கதை உண்டு. பாரசீகத்துக்குப் போன ஓர் அரபுத் தலைவர் சிக்காய்ப் படுத்துவிட்டாராம். அப்போது ஒரு பாரசிக வைத்தியன் அங்கிருந்த ஒரு மரத்து விதையிலிருந்து கஷாயம் எடுத்துக் கொடுத்து அந்த அரபுத் தலைவரைக் குணப்படுத்தினானாம். அந்தத் தலைவன் அந்த மரத்து நாற்றை எடுத்து வந்து தன் நாட்டில் பயிரிட அதன் விதையிலெடுக்கும் பானம் அரபு மக்களுக்கு ரொம்பப் பிடித்துப் போய் விட்டது. அதுதான் காப்பி.

பொறுங்கள். இன்னொரு கதையும் வழங்குகிறது. காட்டில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான் ஓர் அபிசீனிய மாட்டுக்காரன். அன்று அவன் மாடுகள் ஏதோ ஒரு வகைச் செடியை விரும்பிச் சாப்பிட்டன. விளைவு? அன்று இரவு முழுவதும் அந்த மாடுகள் உறக்கமின்றி இருப்புக் கொள்ளாமல் தவித்தன. மறுநாள் அந்த மாட்டுக்காரன் அந்த மாடுகள் சாப்பிட்ட செடியின் விதைகளை எடுத்து ருசி பார்த்தான். அது அவனுக்குப் பிடித்துப் போய் விட்டது. அப்புறம் அதிலிருந்து பானம் தயாரிக்கக் கற்றுக் கொண்டு, மற்றவர்களிடமும் பிரபலப்படுத்தினான். அதுதான் காப்பி.

இந்தக் கதைகளில் எந்த அளவுக்கு உண்மை உண்டோ தெரியாது. ஆனால் காப்பியின் ஆதிகாலத் தாயகம் அரேபியாவும் அபிசீனியாவும் (இன்றைய எதியோப்பியா)தான் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இன்றைய மொத்த காப்பி விளைச்சலில் மூன்றில் இரண்டு மடங்கு பிரேஸிலில்தான் பயிராகிறது.


* ஆர். சசி, காரைக்குடி.

கே: அரிசி உற்பத்தியில் இந்தியா தன்



சொல்லப்படும்

னிறைவு பெற்று விட்டதா?



ப: சந்தேகமில்லாமல் இந்தியா தன்னிறைவு பெற்றுவிட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தடுமாற்றம்தான். ஒரு காலத்தில் மிஞ்சிய விளைச்சலில் தஞ்சை அரிசி பஞ்சாபுக்குப் போனதும் உண்டு. பருவம்பொய்த்ததால்தருமம்கேட்டுப்பஞ்சாபிலும் கொஞ்சம் அண்டை ஆந்திராவிலும் கையேந்தும் பரிதாபம் இன்று. ஹும்... நேரம்தான்!

* கு. பஞ்சு, செங்காளி வலசு.


சே: ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டைத் தகுந்த விளக்கங்களுடன் தயவு செய்து கூறுங்கள்.



ப: தயவு செய்து கேளுங்கள். ஒற்றுமை செயல்பாட்டின் முத்திரை, ஒருமைப்பாடு உள்ளத்து உணர்வின் எழுச்சி என்று தோன்றுகிறது. 'இந்தியர்கள் ஒற்றுமையாய் இருந்து ஒன்றுகூடிக் காறித் துப்பினால் அந்த எச்சில் வெள்ளம் வெள்ளையனைக் கடலுக்கு இழுத்துச் சென்று வெளியேற்றிவிடும்,' என்றார் அமரர் சத்தியமூர்த்தி. இதையே 'ஒருமைப்பாடாய் இருந்து' என்று சொல்லிப் பாருங்கள். உதைக்கிற மாதிரித் தெரியவில்லை?' 'தூய உள்ளம் அன்புள்ளம், பெரிய உள்ளம், தொல்லுலகமக்களெல்லாம்ஒன்றேஎன்னும் தாயுள்ளம்தனிலன்றோ இன்பம்...' என்றார் பாரதிதாசன். இந்த உணர்ச்சிதான் ஒருமைப்பாடு. ஒருமைப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் தொடர்பு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. ஒரு நுணுக்கமான வேறுபாடு உண்டு. ஒருமைப்பாடு உணர்வின் அடிப்படையில் ஒற்றுமையான செயல்பாடு விளையலாம். ஆனால் ஒற்றுமையாய்ச் செயல்படும் காரியங்களுக்கு அடிப்படையாய் ஒருமைப்பாடு இருக்கிறது என்று உறுதியளிக்க முடியாது. ஒருமைப்பாடு தெய்வ சான்னித்தியமான கற்பூர ஜோதி என்றால் ஒற்றுமை அதற்கு அடுத்த தட்டில் உள்ள தீபம்தான். தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம்; திருட்டுக் கையெழுத்தும் போடலாம். அதெல்லாம் எதற்கு? ஒருமைப்பாட்டில் விளைந்த ஒற்றுமையில் ஊன்றி நில்லுங்கள். உலகம் உய்யும்.

* அ. நவ்சாத், மொரப்பூர்.

சே: வெய்யில் நேரத்தில் குளித்து விட்டுத் தலைக்கு எண்ணெய் வைத்தால் தலைவலி உண்டாகிறதே. ஏன்?



ப: இதற்கு மருத்துவரீதியான விளக்கம் ஏதும் இருப்பதாய்த் தெரியவில்லை. அவரவர் உடல்வாகு, பழக்க வழக்கம்தான் காரணம் என்று சமாதானம் சொல்லலாம்! பச்சைத் தண்ணியிலே மூஞ்சி கயிவினேன்; சல்ப்பு புடிச்சிக்கிச்சு,' என்று மெட்ராஸ் வழக்கு ஒன்று உண்டு. சில பேர் தலைக்கு விட்டுக் கொண்டாலே உடம்புக்கு வந்துவிடும் என்பார்கள். இந்த இடத்தில் என்னைப் பற்றிக் கொஞ்சம் ஜம்பம் அடித்துக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. எனக்குத் தலையோடு குளிக்காவிட்டால் குளித்த மாதிரியே இருக்காது. அதுமட்டுமல்ல, தலை துவட்டிய கையோடு எண்ணெய் தேய்த்துச் சீப்பைச் செருகிவிட வேண்டும். இல்லாவிட்டால் தலைமுடி சண்டித்தனம் பண்ணும். எல்லாம் பழக்கம்தான். ஆனால் ஒன்று. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாததைச் செய்யாமலிருப்பதே உத்தமம்.


சின்ன அண்ணன்

(வி)சித்திரச்



பேசும் போஸ்டர்

ஜப்பானில் இப்போது பேசும் போஸ்டர்களைத் தயாரிக்கிறார்கள். எப்படி? போஸ்டரில் நடிகைகள் படம் அச்சிடப்பட்டிருக்கும். அந்த நடிகையின் குரலை ஒலிப்பதிவு செய்து. போஸ்டரின் அடியில் பொருத்தி யிருப்பார்கள். 16 நொடிக்கு ஒரு தடவை, அந்தப் போஸ்டரின் அடியில் உள்ள ஒலிப்பதிவு நாடா இயங்கி, நடிகை பேசுவது போல் போஸ்டரிலிருந்து குரல் வரும். கவனிக்காமல் போனால்கூடக் குரல் திரும்பச் செய்துவிடும்!



தங்கம் வைத்திருந்த கோழி!

இடாநகரில் ராம்குமார் என்னும் வங்கி ஊழியர் ஒருவர் கோழிக்கறி சாப்பிட விரும்பினார். மார்க்கெட் டுக்குப் போய் ஒரு கோழி வாங்கினார். வீட்டிற்குச் சென்று

அதை அறுத்த போது அதன் வயிற்றில் 7 கிராம் தங்கத் துண்டுகள் இருந்தன! (ஒரு சவரனுக்கு ஒரு கிராம் குறைவு.) கோழிகள் இரை தின்னும் போது, கூடவே சிறுசிறு கூழாங்கற்களையும் விழுங்கி வைக்கும். ஆனால் இந்தக் கோழியோ, தங்கத் துண்டுகளாக விழுங்கி வைத் திருந்தது. அன்றைய கோழிக்கறி சாப்பாடு பிரமாதமாக இருந்திருக்கும். இல்லையா?




பையின் மதிப்பு ரூ. 52,000

இங்கிலாந்துப் பிரதமர் திருமதி தாட்சர் பயன்படுத்திய கைப்பை ஒன்று லண்டனில் ஏலம் விடப்பட்டது. அந்த வெறும் பையை ரூ. 52,000க்கு டாவேசாபர் என்பவர் ஏலம் எடுத்தார். அது வெறும் பையாக இருந் தாலும், சரித்திரப் புகழ் வாய்ந்தது என்றும், அதைத் தனது கடையில் பார்வைக்கு வைக்கப் போவதாகவும் ஏலம் எடுத்தவர் சொன்னார்.

குரங்குகள் வைத்த இசைக் கச்சேரி!

அசாம் மாநிலத்தில், தேஜ்பூரில், கேந்திர வித்யாலயா என்னும் பள்ளிக்கூடம் இருக்கிறது. இங்கே இசைத்துறை தனியாக இருக் கிறது. அங்கே ஓர் அறையில் இசைக் கருவிகளை வைத்துப் பூட்டியிருந்

செய்திகள்...!



தார்கள். திடீரென்று ஒருநாள் அந்த அறையிலிருந்து இசைக் கச்சேரி கேட்டது. காவல்காரர் அதிர்ச்சி அடைந்து கதவைத் திறந்து பார்த்தார். அங்கே சுமார் 200 குரங்குகள் இருந்தன. அவற்றில் சில குரங்குகள் கைக்கு அகப்பட்ட இசைக் கருவிகளை எடுத்து வைத்துக் கொண்டு மீட்டிக் கொண்டிருந்தன. மற்றக் குரங்குகள் அதை ரசித்துக் கொண் டிருந்தன!



மிகப் பெரிய கோலம்!

தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் கிராமியக் கலைப் பிரிவில் மதுரையைச் சேர்ந்த லீலா வெங்கட்ராமன் என்பவர் துணியில் மிகப் பெரிய கோலம் ஒன்றை வரைந்து வைத்துப் பலரையும் பிரமிக்கச் செய்திருக்கிறார். 12 அடி × 12 அடி அளவில் 1,05,000 புள்ளிகளைக் கொண்டு அவர் கோலம் வரைந்திருந்தார். அதை வரைந்து முடிக்க அவருக்கு மூன்று மாத காலம் ஆயிற்றாம்!



எரிமலையிலிருந்து மின்சாரம்!

எரிமலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். எரி மலைகள் மீது உயர் அழுத்த மின்சார உற்பத்தி நிலையங்களை அமைக்கத் திட்டமிடுகிறார்கள். எரிமலைகளி லிருந்து மின்சாரத்தைத் தயாரிப்பதன் மூலம் எரிமலைகள் வெடிப்பதைத் தடுக்கவும் முடியுமாம். எரிமலைச் சரிவில் தோண்டப்படும் கிணற்றிலிருந்து எடுக்கப்படும் நிலவாயு, மற்றும் மின் உலைகளை இயக்குவதன் மூலம் மின்சாரம் தயாரிக்க முடியும் என்கி றார்கள்.

— ஆழி.

நான் யார் தெரியுதா? (விடை)

1. பிரேம்கிருஷ்ணன் — உ
2. வி. லட்சுமி — ஈ
3. என். பிரவீண்குமார் — ஐ
4. என். கனிதா — ஏ
5. கே. ஸ்ரீவித்யா — ஆ
6. ஜே. எஸ். ஆனந்த் — அ
7. எஸ். சுதா — ஊ
8. ஷர்மிளா — ஒ
9. பிரியதர்சினி — இ.

காதில் சீழ் வடிகிறதா?



இவன் பெயர் சுரேந்திரன். என் நண்பரின் மகன். அன்னப்ப ராஜா மேல்நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் படிக்கிறான். படிப்பிலும், விளையாட்டிலும் பல பரிசுகளைப் பெற்றிருக்கிறான். எப்போதும் கலகலப்பாகப் பேசுவான். விடுமுறை தினங்களில் என்னைச் சந்திக்க வருவான், மருத்துவ விவரங்களைத் தெரிந்து கொள்வதில் கொள்ளை ஆசை அவனுக்கு. அதனால் இங்கு வரும்போதெல்லாம் ஏதேனும் ஒரு நோயைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வான்.

இதோ அந்தச் சுரேந்திரன் இப்போதும் வந்திருக்கிறான்.

சுரேந்திரன்: வணக்கம், மாமா!

நான்: வா, சுரேந்தர்! உட்கார். வீட்டில் அனைவரும் நலமா?

சுரேந்திரன்: மிக்க நலம், மாமா!

நான்: சரி, நீ வந்தால் சும்மா வர மாட்டாயே! இன்றைக்கு என்ன விஷயமாக வந்திருக்கிறாய்?

சுரேந்திரன்: என் நண்பன் ஒருவனுக்குக் காதில் சீழ் வடிகிறது, மாமா! அவன் டாக்டர்களிடம் சென்றால் ஊசி போடுவார்களே என்று பயந்து கொண்டு மருத்துவம் பெறாமல் இருக்கிறான். காதில் சீழ் வடிந்தால் காது கேட்காமல் போய் விடும் என்று என் வீட்டில் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதனால் அது சம்பந்தமாகப் பல விவரங்களை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, அதை என் நண்பனுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். அதனால்தான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன், மாமா.

நான்: மிக்க மகிழ்ச்சி, சுரேந்தர்! முதலில் நண்பனுக்கு உதவ வேண்டும் என்ற உன் நல்லெண்ணத்தைப் பாராட்டுகிறேன். அடுத்ததாக, காதில் சீழ் வடியும் நோய் குழந்தைகளுக்கும், உன் வயதுள்ள சிறுவர் சிறுமிகளுக்கு மட்டுமே வரக்கூடிய ஒரு நோய். அதனால் அதைப் பற்றி அறிந்து கொள்ள நீ ஆசைப்படுவதில் நியாயம் இருப்பதை உணர்கிறேன்.

சுரேந்திரன்: நன்றி மாமா, காதில் ஏன் சீழ் வடிகிறது என்பதை எனக்குச் சொல்லுங்கள்.

நான்: சுரேந்தர்! நம் காதில் வெளிக் காது, நடுக் காது, உள் காது என மூன்று பகுதிகள் உள்ளன. இதில் நடுக் காதில் சில காரணங்களால் புண் உண்டாகி அதன் சிலேட்டுமப் படலம் அரித்து, சீழ் மாதிரி வெளியேறுவதை 'காதில் சீழ் வடிகிறது' என்கிறோம். இதையே நாங்கள் மருத்துவத்தில் **'Otitis Media'** என்று அழைக்கிறோம்.

சுரேந்திரன்: நடுக் காதில் மட்டும் எப்படி மாமா புண் உண்டாகிறது?

நான்: ஸ்டெரப்டோகாகஸ்,

ஸ்டெபலோ காக்கஸ், நீயூமோ காக்கஸ் போன்ற பாக்டீரியாக் கிருமிகள் அல்லது சில வகை வைரஸ் கிருமிகள் நடுக் காதினுள் நுழைந்து புண் உண்டாக்குகிறது.

சுரேந்திரன்: ஏன் மாமா, நம் காதின் வெளிப்புறம் துவாரம் இருப்பதால் இந்த பாக்டீரியாக் கிருமிகளும், வைரஸ் கிருமிகளும் மிக எளிதாகக் காதுக்குள் நுழைந்து விடுகின்றனவோ?

நான்: இல்லை, சுரேந்திரன்! நீ நினைப்பது மாதிரி கிடையாது. நம் காதில் நடுக் காது மட்டும்தான் 'ஈஸ்டாக்கியன்' என்ற சிறு குழாய் மூலம் தொண்டையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனால் தொண்டையில் கோளாறுகள் வரும்போதெல்லாம் காதிலும் கோளாறுகள் வர வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக, தொண்டையில் புண் வந்தாலோ, சளி கட்டினாலோ அல்லது ஜலதோஷம் பிடித்தாலோ அந் நோய்க் கிருமிகள் ஈஸ்டாக்கியன் குழாய் மூலம் நடுக் காதை அடைந்து அங்கேயும் புண் உண்டாக்கும். இதே மாதிரிதான் தட்டம்மை, சின்னம்மை, தொண்டை அடைப்பான், தொண்டைச் சதை வளர்ச்சி, கக்குவான் இருமல், காச நோய், ஸ்கார்லெட் காய்ச்சல் போன்ற நோய்களின் போதும் காதினுள் சீழ் பிடிக்கிறது. ஆக, காதில் வரக்கூடிய நோய்க்குத் தொண்டைதான் கிருமிகளைத் தானம் செய்கிறது என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்.

சுரேந்திரன்: அப்படியா, மாமா! எனக்கு இந்தப் புதிய செய்தியைச் சொன்னதற்கு உங்களுக்கு நன்றி. ஏன் மாமா, காதில் சீழ் வடிவதற்கு முன்னால் நமக்கு ஏதேனும் அறிகுறிகள் தெரியுமா?



நான்: தெரியும், சுரேந்தர்! காதில் சீழ் வடிவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பே காதிற்குள் விண் விண்ணென்று வலி எடுக்கும். காய்ச்சல் வரும். காது லேசாக மந்தமாகக் கேட்கும். சிலருக்குக் காதுக்குள் இரைச்சல் உண்டாகும். இம்மாதிரியான ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொண்டால் சில வகை மருந்துகள் மூலம் காதில் சீழ் வடிவதைத் தவிர்த்து விடலாம்.

சுரேந்திரன்: மாமா, காதில் சீழ் வடிபவர்களுக்கு நீங்கள் என்ன வைத்தியம் செய்கிறீர்கள்?

நான்: மருத்துவர்களாகிய நாங்கள் சீழ் வடியும் காதை சிரிஞ்ச் மூலம் தண்ணீரைச் செலுத்தியோ அல்லது ஸ்பிரிட்டில் நனைத்த பஞ்சினாலோ



துடைத்துச் சுத்தம் செய்கிறோம். பின்பு 'ஆன்டிபயாடிக்' என்று அழைக்கப்படும் கிருமிக் கொல்லி மருந்துகளைச் சுமார் ஒரு வாரத்திற்குத் தருகிறோம். அத்துடன் காது வலியைக் குறைக்க உதவும் வலி நிவாரணி மாத்திரைகளையும் காதில் ஊற்றக்கூடிய சொட்டு மருந்துகளையும் தருகிறோம்.

சுரேந்திரன்: ஏன் மாமா, சில பேர் மருந்து கடைகளில் அவர்களாகவே மருந்து வாங்கிக் காதில் ஊற்றிக் கொள்கிறார்களே, அது தவறில்லையா?

நான்: நிச்சயம் தவறுதான். காதில் சீழ் வடிவதற்கு அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து அதற்கும் சேர்த்து



மருத்துவம் பெற்றுக் கொண்டால் தான் காதில் சீழ் வடிவது குணமாகுமே தவிர, வெறும் சொட்டு மருந்து மட்டும் முழுமையாகக் குணம் அளிப்பதில்லை.

சுரேந்திரன்: காதில் சீழ் வடிந்தால் காது கேட்காமல் போகும் என்று சொல்வார்களே, அது உண்மையா மாமா?

நான்: உண்மைதான், சுரேந்திரன்! நீண்ட நாட்களாக ஒருவருக்குக் காதில் சீழ் வடிந்தால் அவரது செவிப்பறையில் நிரந்தரமாகத் துவாரம் விழுந்து, காது கேட்காமல் போகலாம். அது மட்டுமல்லாமல் காதினுள் நாட்கணக்கில் சீழ் தங்கியிருந்தால் அதிலுள்ள நோய்க் கிருமிகள் செவிக்கு வரும் இரத்தக் குழாய்கள் மூலம் மூளைக்கும் சென்று 'மூளைக் காய்ச்சல்' என்று சொல்லக்கூடிய உயிருக்கு ஆபத்து தரும் நோயை உண்டாக்கும். எனவே, காதில் சீழ் வடிவதை அலட்சியம் செய்யாமல் நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே மருத்துவர் ஆலோசனை பெறுவது நல்லது. 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' என்று திருவள்ளுவர் கூடச் செவியின் பெருமையைச் சொல்லியிருக்கிறார் அல்லவா? அத்தகைய பெருமை வாய்ந்த நம் செவியைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை அல்லவா?

சுரேந்திரன்: உண்மைதான், மாமா! காதில் சீழ் வடிபவர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் என்னென்ன?

நான்: சொல்கிறேன், கேள்! காதில் சீழ் வடிபவர்கள் குளிர்ந்த பானங்களை அருந்தக் கூடாது. வெந்நீரையே குடிநீராகப் பயன்படுத்த வேண்டும். வெந்நீரில் சிறிது உப்புப் போட்டு அடிக்கடி வாயையும், தொண்டையையும் கழுவ வேண்டும். மூக்கில் ஜலதோஷம் பிடித்து விடாமல் இருக்க வெந்நீரில் ஆவி பிடிக்க வேண்டும். இதன் மூலம் வாய்க்குள்ளும், தொண்டையிலும் நோய்க் கிருமிகள் வளர்வதைத் தவிர்க்கலாம். மருத்துவர் தரும் மருந்து மாத்திரைகளை முறையாக உட்கொள்ள வேண்டும். காதினுள் அழுக்குச் சேர்ந்து விடும் போது சிறிது பஞ்சை சின்னக் குச்சியில் சுற்றி வெது வெதுப்பான நீரில் நனைத்து அதன் மூலம் காதைத் துடைத்துச் சுத்தப் படுத்தலாம். மாறாக பென்சில், குச்சி, ஊக்கு, ஹேர்பின் போன்றவற்றால் காதைக் குடைவதைத் தவிர்க்க வேண்டும். இதுபோன்ற தவிர்ப்பு முறைகளினால் மீண்டும் காதில் சீழ் வடிவதைத் தவிர்த்து விடலாம்.

சுரேந்திரன்: மிக்க நன்றி, மாமா! இப்போதே போய் என் நண்பனிடத்தில் இந்த விவரங்களையெல்லாம் சொல்லி, உடனே மருத்துவரிடம் தகுந்த ஆலோசனை பெறச் செய்கிறேன்.

நான்: நல்லது, சுரேந்திரன்.

ஒரு 'கிவி'ஸ்



நியூசிலாந்தில் 'கிவி' என்ற பறவை இருக்கிறது. உலகிலுள்ள விசித்திரப் பறவைகளில் ஒன்றான இது நியூசிலாந்தின் தேசியப் பறவை. கிவிக்குப் பறக்கத் தெரியாது. ஆனால் தலைதெறிக்கும் வேகத்தில் ஓடும். சியான தூங்கு மூஞ்சிப் பறவை இது. தூங்கும் போது நாம் கையில் எடுத்தாலும்.. விழிக்காமல் தூங்கிக் கொண்டே இருக்கும். இது கத்தும் போது 'கிவிகிவி' என்ற ஓசை எழுப்புவதால் 'கிவி' என்று பெயர் வந்தது. கிவியின் முட்டை ஐந்து அங்குல நீளமும், 3 அங்குல அகலமும் இருக்கும். கிவிக்கு மோப்பசக்தி அதிகம். இப் பறவைக் குஞ்சுகள் ஆபத்து ஏற்பட்டால் தந்தைப் பறவையிடம் ஓடிப் பதுங்கிக் கொள்ளும்.

— எஸ். ஜெயஸ்ரீ (1,254)
திருச்சி — 14.

பிருந்தாவனம்





சில இந்திய 'முதல்'கள்

* முதன் முதலாக இந்தியத் தேசப்படம் 1752 ல் 'ஆன்வில் என்ற பிரெஞ்சுக் காரரால் வெளியிடப்பட்டது.
* இந்தியாவில் முதன் முமலாக 1825 ல் அஞ்சல்தலை வெளியிடப்பட்டது.
* முதன் முதலாக இந்தியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹோவர்.
* முதன் முதலாக பாரதரத்னா பட்டம் பெற்றவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் 1955 ஆம் வருடம் இவ்விருது பெற்றார்.
* இந்தியாவில் முதன் முதலாகக் கல்கத்தா வில்தான் குடிக்கும் சோடா பானம் விற் பனைக்கு வந்தது.
* தமிழில் முதல் முதலாக எழுதப்பட்ட நாவல் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம்.
* இந்தியாவில் முதன் முதலாக ஆரம்பிக் கப்பட்ட பாங்கு 'தி பிரஸிடென்ஸி ஆஃப் பாம்பே'. ஆரம்பித்த இடம் பம்பாய்.
* பாரதத்தில் முதல் ஐந்தாண்டு திட்டம் 1.4.1951 ஆம் வருடம் வகுக்கப்பட்டது.
* காங்கிரஸ் மகாசபைக்குத் தலைமை வகித்த முதல் தமிழர் சேலம் விஜய ராக வாச்சாரியார்.

தொகுப்பு: எஸ். ஜெயஸ்ரீ, திருச்சி — 14.

கற்பூர வெற்றி

* மாவீரன் அலெக்சாண்டர் சிறுவனாக இருந்த போது 'லியோனிடாஸ்' என்ப வரிடம் கல்வி பயின்றார். ஒரு நாள் அவர் வீட்டில் பூஜை செய்யும் போது அலெக் சாண்டர் சாம்பிராணியை அள்ளிக் கொட்டினார். ஆசிரியர் லியோனிடாஸ் அலெக்சாண்டரிடம், 'சாம்பிராணி இப் போது குறைவாக உள்ளது. இத்தகைய பொருள்கள் மிகுந்த நாடுகளை நீ கைப் பற்றும் போது இவ்வாறு மனம் போல் சாம்பிராணியைப் போடலாம்,' என்றார். பிற்காலத்தில் அலெக்சாண்டர் தம் கைப்பற்றிய நாடுகளில் சாம்பிராணியும், குங்குலியமும் நிறைய இருந்தன. உடனே தம் ஆசிரியருக்கு இரண்டிலும் ஏராள மாக அனுப்பிவைத்தார். அத்துடன் ஒரு



கடிதத்தில், ஆசிரியர் அவர்களுக்கு! வணக்கம். இத்துடன் தங்களுக்கு ஏராள மான சாம்பிராணியும், குங்குலியமும் அனுப்பிவைத்துள்ளேன். இனி தாங்கள் ஆண்டவனிடம்சிக்கனம்காட்டத்தேவை யில்லை, என்று எழுதியிருந்தார்.

—புரசை சிவம்.



தாமிரப்பத்திரம்

* உலகில் மனிதன் பயன்படுத்திய முதல் உலோகம் தாமிரம். இதைத் தாதுப் பொருளிலிருந்து வெகு எளிதில் பிரிக்கலாம்.. எந்த உலோகத்துடனும் எளிதில் கலக்க முடியும்.
* தாமிரத்தின் வரலாறு 15,000 ஆண்டுகள். வெண்கல யுகத்திற்கும் கற்காலத்திற்கும்இடைப்பட்டகாலத்தைச் 'செப்புக் காலம்' என்று கூறலாம். எகிப்தியர்கள் தான் முதலில் தாமிரத்தைப் பயன்படுத்தியவர்கள்.
* உலகத் தாமிர உற்பத்தியின் கால் பங்கு மின்சாதனத் தயாரிப்புக்களுக்குப் பயன்படுகிறது. தாமிரம் உயர்வகை மின் கடத்தி.
* தாமிரம் அகழ்ந்தெடுத்துத் தூய்மைப் படுத்துவதில் அமெரிக்கா முன்னணியில் இருக்கிறது.

— ஆ. ராஜேந்திரன் (23109), குமாரமங்கலம்.



மீட்டர்களை மீட்டுவோம்!

* தாமா மீட்டர்: வெப்பத்தை அளக்கும் கருவி.
* பேரோ மீட்டர்: காற்றழுத்தத்தை அளக்கும்.
* ஸ்பீடோ மீட்டர்: ஓடும் வாகனங்களின் வேகத்தை அளக்கும்.
* மைக்ரோ மீட்டர்: மிகச் சிறிய அளவை அளக்கப் பயன் படும்.
* வோல்டா மீட்டர்: மின்சாரத்தின் அளவை அளக்கப் பயன் படும்.
* அம்மீட்டர்: மின்சாரத்தின் சக்தியை அளக்கப் பயன் படும்.
* கெல்வனா மீட்டர்: மின்சாரத்தின் திசையைக் காட்டும்.

லெக்டோ மீட்டர்: பாலின் கன அளவைக் காட்டும்.

டிரான்ஸ் மீட்டர்: ரேடியோ அலைகளை அனுப்பும் கருவி.

— வி. சங்கர் (22168), ஆமதாபாத்.



* அதிகமான மனிதர்கள் ஒரு பொது நிகழ்ச்சிக்காகக் கூடியிருப்பது இந்தியாவில் தான். 1977 ஆம் வருடம் ஜனவரி மாதம் அலகபாத்தில் நடைபெற்ற கும்பமேளாவில் சுமார் 12,700,000 மக்கள் கலந்து கொண்டதாகக் கணக்கிடப்பட்டது. இது கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற ஒரு உலக சாதனையாம்.

ஆதாரம்: மலையாள மனோரமா

— இரா. பிரசன்னா, கும்பகோணம்.



எச்சரிக்கை மீட்டர்!

உலகில் நிகழும் கார் விபத்துக்களைக் குறைப்பதற்காக ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் ஒரு கருவியைக் கண்டுபிடித்துள்ளார்கள். அக்கருவியைக் காரில் பொருத்தி விட்டால் அந்தந்த நாட்டு அரசு விதித்துள்ள கிலோ மீட்டர் வேகத்திற்கு மேல் கார் சென்றால் அக்கருவி சிவப்பு ஒளியை உமிழ்ந்தோ அல்லது ஒலி எழுப்பியோ வாகன ஓட்டிக்கு எச்சரிக்கை தருகிறது. இதனால் அவர் வேகத்தைக் குறைப்பார். அக்கருவியை ஒவ்வொரு காரிலும் பொருத்தி விட்டால் உலகில் ஏற்படும் விபத்துக்களில் 20% விபத்துக்களைக் குறைக்கலாம் என்று உலகிலுள்ள போக்குவரத்துக் காவல் துறையினர் கருதுகின்றனர். மேலும் அக்கருவி ஒவ்வொரு நாளும் கார் எவ்வளவு கிலோ மீட்டர் வேகத்

தில் சென்றது என்பதைப் பதிவு செய்து கொள்கிறது. இதனால் போலீசார் வேக மாகக் கார் ஓட்டுபவர்களைக் கண்டு பிடித்துத் தண்டனை வழங்க முடியும்.

என். ஸ்ரீவித்யா, கோபாலசமுத்திரம்.



அன்று எங்கள் வகுப்பில் 'இன்ஸ் பெக்ஷன்.' எங்கள் வகுப்பில் ஒரு மாண வன் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் 'தெரி யாது' என்றே சொல்வான். ஆசிரியர் வந்த தும் சில மாணவர்களைக் கேள்வி கேட்டு விட்டு, அவனையும் 'தெரியும்' என்பதற்கு எதிர்ச்சொல் என்ன என்றார். அவன் 'தெரி யாது' சார்' என்றான். எங்கள் வகுப்பே 'கொல்' என்று சிரித்துவிட்டது.

— ச. உமர்கான், தருமபுரி.



1) கையைத் தட்டினால் எழும்பு வது ______.
2) பலகாரங்களில் ஒன்று ______.
3. நிறங்களில் இதுவும் ஒன்று ______.
4) குழந்தைகள் பேசும் மொழி ______.
5) கிழக்கு என்பது ______.
6) இரப்போர்க்கு இடுவது ______.
7) வாத்தியங்கள் வாசிப்பதால் வரு வது ______.
8) ஆண்களுக்கே உரியது ______.
9) ஒட்டப் பயன்படுவது ______.
10) எல்லோருக்குமே உள்ளது ______.

விடைகள்:

1) ஓசை, 2) தோசை, 3) பச்சை, 4) கொச்சை, 5) திசை, 6) பிச்சை, 7) இசை, 8) மீசை, 9) பசை, 10) ஆசை.

— கே. ஜி. ராஜன், சீர்காழி.



உங்கள் நண்பரை ஒரு நம்பரை நினைத் துக் கொள்ளச் சொல்லுங்கள். இதில் கூட்டல் பெருக்கல் கழித்தல் எல்லாம் வரும். எனவே சிலேட் அல்லது பேப்பர் பென்சி லில் போடுவது நல்லது.

நினைத்துக் கொண்ட நம்பரை 5 — ஆல் பெருக்கச் சொல்லி, அந்த விடையுடன் 6 — ஐக் கூட்டச் சொல்லுங்கள்.

அந்த விடையை 4 — ஆல் பெருக்கி, அத்துடன் 9 — ஐக் கூட்டிக் கொள்ளச் சொல்லுங்கள்.

விடையை மறுபடி 5 — ஆல் பெருக்கிக் கொண்டு அந்த எண் என்ன என்று கேளுங் கள். ஏதோ ஓர் எண் சொல்வாரல்லவா? (அதில் 165 — ஐக் கழித்து விடுங்கள். இதெல் லாம் நீங்களாகச் செய்ய வேண்டும். நண்ப ரிடம் சொல்லக் கூடாது! ஆமாம். ஒரு விடை வரும். அந்த விடையை 100 — ஆல் வகுங்கள்.)

வகுத்து வந்த ஈவுதான் உங்கள் நண்பர் நினைத்த எண்! ஆச்சரியமாக இருக்கி றதா? செய்து பாருங்களேன்.

— தகவல்: 'தேஜ்'



புரோட்டான், எலக்ட்ரான், நியூட் ரான் இவை பாடப் பகுதியில் உள்ளது. இந்தத் துகளின் பெயரைச் சுருக்கமாக நினைவில் வைத்துக் கொள்ள நாம் அன்றாடம் பயன்படுத்தும் ஒரு பொருளை நினைவுகூர்ந்தால் போதும். Proton, Electron, Neutron — இவற்றின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துப் பாருங்கள். PEN. இதனை விரிவுபடுத்தினால் மூன்று துகளையும் உணர்த்தும்.

— எஸ். சந்திரசேகர், அரியூர்.

அட்டை வண்ணப்படம்:
ஏ. வி. பாஸ்கர்.



முல்லா கதை

முல்லா ஓர் அரசனிடம் அபிமான மந்திரியாக இருந்தார். தினமும் அரசருடன் உணவு அருந்துவார். ஒருநாள் உணவு நேரத்தில் மாங்காய்ப் பச்சடியை விரும்பி உண்டார் அரசர். ''இந்த உலகில் மிகவும் ருசியானது மாங்காய் தான்,'' என்று முல்லாவிடம் கூறினார்.

உடனே முல்லா, ''ஆமாம் ஆமாம்,'' என்று கூறினார்.

சிறிது நாட்களுக்குப் பிறகு ஒருநாள் புளிப்பான மாங்காயை அரசர் சாப்பிட நேர்ந்தது. அப்போது அரசர், முல்லாவிடம், ''உலகில் மோசமான காய் மாங்காய்தான்,'' என்று கூறினார்.

அதற்கும், உடனே முல்லா ''ஆமாம், ஆமாம்'' என்றார்.

அரசருக்குக் கோபம் வந்தது.

அன்று உலகிலேயே சிறந்தது மாங்காய் என்று நான் சொன்ன போதும் ஆமாம் என்றீர். இன்று மோசமானது என்றால் இதற்கும் ஆமாம் என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டார். முல்லா, ''நான் மாங்காயிடம் வேலை செய்யவில்லை. உங்களிடம்தான்,'' என்றார்.

— பா. முத்துகிருஷ்ணன் (21,393),
திருவையாறு.

கடைசி குதிரை எது?

குதிரை பந்தயத்திற்கு, பந்தயதாரர்கள் தயாராக அவரவர் குதிரையின் மேல் சவாரி செய்ய அமர்ந்திருந்தனர். பந்தய ஆரம்ப விசில் அடிக்கும் முன்னர், இக் குதிரைகளில் எந்தக் குதிரை கடைசியாக (பின்னாடி) செல்கிறதோ அந்தக் குதிரைக்குத்தான் முதல் பரிசு என்று நடுவர் அறிவித்தார். அவர் அறிவிப்பைக் கேட்டதும் பந்தயதாரர்கள் குதிரைகளை ஓர் அடி கூட நகர விடவில்லை. இதைக் கண்ட நடுவர் ஒரு சிறிய மாற்றம் செய்கிறார், அப்படி மாற்றம் செய்தாலும் கடைசியில் செல்லும் குதிரைக்குத்தான் முதல் பரிசு. அவர் மாற்றம் செய்த அடுத்த வினாடியே, ஒவ்வொரு குதிரையும் மின்னல் வேகத்தில் ஒன்றையொன்று தாண்டிச் செல்கிறது. அப்படி நடுவர் செய்த மாற்றம் தான் என்ன?




குதிரைகளை நகர விடாமல் இருந்த ஒவ்வொரு பந்தயதாரரையும் அவரவர் குதிரையை விட்டு இறங்கச் செய்து, வெவ்வேறு குதிரைகளில் அமரச் செய்தார். போட்டி துவக்க விசில் அடித்தவுடன் ஒவ்வொருவரும் தன்னுடைய சொந்தக் குதிரையைத் தோற்கடித்துப் பரிசு பெற எண்ணி, அடுத்தவன் குதிரையை அதிக வேகமாக (தம் சொந்த குதிரையின் வேகத்தை விட அதி வேகமாக) ஓட்டிச் சென்றார்கள். இதனால் உண்மையில் கடைசியில் வரக் கூடியது எது என்று தன்னால் தெரிந்து போயிற்று.

— எம். குமார் (20,552), பேதாதம்பட்டி புதூர்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—

நிஜமான ஹாண்டிபாயைக் கண்டுபிடியுங்கள்!



மேலே நான்கு இரட்டையர் உள்ளனர்.
அவர்களை இனங்காட்ட முடியுமா?
நிஜமான ஹாண்டிபாய்க்கு
இரட்டை இல்லை.
அவன் எந்த கூட்டத்தில்
இருக்கிறான்?



HTA 1424

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

